பாபநாசம் வட்டக் கல்வெட்டுகள்



பதிப்பாசிரியர்

தி. ரா. ராஜன், இ.ஆ.ப.

தொல்லியல் ஆய்வாளர், தொல்லியல் துறை

பாபநாசம் வட்டக் கல்வெட்டுகள்

முதல் தொகுதி

பாபநாசம் வட்டக் கல்வெட்டுகள்

முதல் தொகுதி

பதிப்பாசிரியர்

தி. ஸ்ரீ. ஸ்ரீதர், இ.ஆ.ப.

சிறப்பு ஆணையர், தொல்லியல்துறை

தொகுப்பாசிரியர்கள்

முனைவர் **நா. மார்க்சிய காந்தி**

உதவிக் கண்காணிப்புக் கல்வெட்டாய்வாளர்

சீ. இராமச்சந்திரன்

கல்வெட்டாய்வாளர்

அச்சிட்டோர்

தமிழ்நாடு அரசு தொல்லியல் துறை

தரமணி, சென்னை-600 113

2004

முதற்பதிப்பு 2004 - 500 படிகள்
வெளியீடு எண் : 153

© தமிழ்நாடு அரசு தொல்லியல் துறை

பாபநாசம் வட்டக் கல்வெட்டுகள்
முதல் தொகுதி

பதிப்பாசிரியர்
தி. ஸ்ரீ. ஸ்ரீதர், இ.ஆ.ப.

தொகுப்பாசிரியர்கள்
நா. மார்க்சியகாந்தி
சீ. இராமச்சந்திரன்

விலை : ரூ.

அச்சிட்டோர்
தமிழ்நாடு அரசு
தொல்லியல் துறை
தரமணி, சென்னை-600 113

உள்ளடக்கம்

முன்னுரை

1. ஆதனூர் ... 1

2. உடையார் கோயில் ... 4

3. திருவைகாவூர் ... 69

4. சக்கரப்பள்ளி ... 100

5. திருமண்டங்குடி ... 117

6. மெலட்டூர் ... 121

7. புள்ளபூதங்குடி ... 131

8. பட்டவிருத்தி ... 140

முன்னுரை

தமிழ்நாடு அரசு தொல்லியல் துறை, தகிழ்நாட்டிலுள்ள கல்வெட்டுகள் அனைத்தையும் படியெடுத்துப் பதிப்பிக்கும் பணியைச் செய்து வருகிறது. பிரிக்கப்படாத தஞ்சை மாவட்டத்தின் நன்னிலம் வட்டக் கல்வெட்டுகள் (3 தொகுதிகள்), திருத்துறைப்பூண்டி வட்டக் கல்வெட்டுகள், கும்பகோணம் கல்வெட்டுகள், திருவலஞ்சுழிக் கல்வெட்டுகள், திருவீழிமிழலைக் கல்வெட்டுகள் திருக்கோடிகாக் கல்வெட்டுகள் ஆகியன இதுவரை பதிப்பிக்கப்பட்டுள்ளன. அவ்வரிசையில், பாபநாசம் வட்டக் கல்வெட்டுகள் முதல் தொகுதி தற்போது பதிப்பிக்கப்படுகின்றது.

இத்தொகுப்பில் ஆதனூர், உடையார்கோயில், திருவைகாவூர், சக்கரப்பள்ளி, மெலட்டூர் திருமண்டங்குடி, புள்ளபூதங்குடி, பட்டவிருத்தி ஆகிய ஊர்களின் கல்வெட்டுகள் (மொத்தம்...) இடம்பெறுகின்றன. இக்கல்வெட்டுகளுள் பெரும்பாலானவை பிற்காலச் சோழர் ஆட்சிக் காலத்தைச் சேர்ந்தவையாகும். முதல் மாறவர்மன் குலசேகரன், இரண்டாம் மாறவர்மன் குலசேகரன் ஆகிய பாண்டிய மன்னர்களின் காலத்தை (கி.பி. 13-14 - ஆம் நூற்றாண்டு)ச் சேர்ந்த கல்வெட்டுகள் சிலவும், விஜயநகர அரசர் வீரப்பிரதாப தேவராயர் (கி. பி. 15-ஆம் நூற்றாண்டு) கல்வெட்டு ஒன்றும் உள்ளன.

செங்கற் கோயிலாக இருந்த திருவைகாவூர்க் கோயிலை முதற் குலோத்துங்கனின் 32-ஆம் ஆட்சியாண்டில் அனுமதி பெற்று, நாற்பதாம் ஆட்சியாண்டில் பரவைச் சுற்றுப் பூண்டி உடையான் சூரியன் பவழக்குன்றினாரான வன்னாடுடையார் என்பவர் கற்றளியாக்கியதை அங்கு பொறிக்கப் பட்டுள்ள கல்வெட்டு கூறுகிறது (தொ. எண். 70/1986-படம்). இக்கோயிலுக்கு மூன்றாம் நந்திவர்மன் காலத்தில் வழங்கப்பட்ட கொடையினைக் குறித்த கல்வெட்டு தனிக்கல்லில் இருந்ததை, மீண்டும் கற்றளியாக்கியபோது சுவரில் பொறித்துள்ளனர் (தொ. எண். 71/1986-படம்). பழைய செங்கல் தளியில் கோட்டத்தில் இடம் பெற்றிருந்த அகத்தியர் கற்சிலையின் படம் இந்நூலின் முகப்பு அட்டையிலும், அவ்வூரில் உள்ள தட்சிணாமூர்த்தி, அர்த்தநாரீசுவரர் சிலைகள் பின் அட்டையிலும் இடம் பெற்றுள்ளன.

சுதையால் இருந்த பீடம் பராமரித்தற்குக் கடினமாக இருந்ததால், அதனைக் கிள்ளியூரில் இருந்து கொண்டு வந்த கல்லால் மாற்றி அமைத்ததை உடையார் கோயில் கல்வெட்டு ஒன்று குறிக்கிறது (தொ. எண். 44/1986). இதன் மூலம் சோழ நாட்டில் பெருமளவில் கட்டப்பட்ட கோயில்களுக்குக் கற்கள் இங்கிருந்தும் கொணரப்பட்டன என்று நாம் புரிந்துகொள்ள இயலும்.

உடையார் கோயிலில், பூமி திருவுடையாளான திருவகம்படி நங்கை என்ற தேவரடியார் ஆளுடைய பிள்ளையார் (திருஞானசம்பந்தர்), ஆளுடையநம்பி (சுந்தரர்), அவர்தம் பிராட்டியார், பெரியதேவா (சுகாசன சந்திரசேகரர்), அவர் நாச்சியார், உமாமகேஸ்வரதேவர், அவர் நாச்சியார் ஆகிய செப்புத் திருமேனிகளை எழுந்தருளுவித்ததை ஒரு கல்வெட்டு (தொ. எண். 50/1986) குறிப்பிடுகிறது. மூன்றாம் இராசேந்திர சோழன் காலத்திய இத்திருமேனிகளுள், பெரியதேவர், அவரது தேவியார் (படம் - 1, 2), உமாமகேஸ்வரதேவர், அவர் தேவியார் ஆகியவை இன்றும் அக்கோயிலில் வழிபாட்டில் உள்ளன. இவை தமிழ்நாடு அரசு தொல்லியல் துறையால் பழம்பொருள்கள் பதிவுச் சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பெற்றுள்ளன. புகழ் பெற்ற கரந்தைச் செப்பேடுகள் இவ்வூருக்கு உரியவை என்பது குறிப்பிடத்தக்கது.

சோழர் ஆட்சிக்காலத்தில் வழக்கிலிருந்த பெயர்கள், சொல்லாட்சிகள், பெயர் சூட்டல்கள் ஆகியன பற்றியும் இக்கல்வெட்டுகளால் அறிகிறோம். அரைசூருடையான் பிள்ளை தில்லைக் கூத்த தண்டநாயக்கர், (தெண்ட நாயக்கர் என்ற உச்சரிப்பு வழக்கு அவ்வாறே குறிப்பிடப்படுகிறது) தாம் பிறந்த நட்சத்திரமான ரேவதி நாளில் சிறப்பு வழிபாடு நடத்த ஏற்பாடு செய்துள்ளார். இது ''திருரேவதிப்படி'' என வழங்கப்பட்டது (தொ. எண். 52/1986). கணபதியார் என்ற பெயரில் அமைந்த தூம்பு (தொ. எண். 45/1986), எதிரிலி சோழன் என்ற பெயரிலமைந்த எடுத்துக்கட்டி (மேடை) (தொ. எண். 55/1986) போன்ற பெயர் சூட்டல்களும், சோழராஜ்யதிலதச் சதுர்வேதி மங்கலம் (தொ, எண். 48/1986) போன்ற அபூர்வமான ஊர்ப் பெயர்களும், ''திருமுடியால் நடந்தாள் திருக்குகை'' (தொ. எண். 65/1986) போன்ற மடாலயங்களின் பெயர்களும் இக்கல்வெட்டுகளால் தெரியவருகின்றன. ''சிகை கிடந்து'' என்ற ஒரு வழக்கும் கல்வெட்டில் (தொ. எண். 42/1986) இடம் பெறுகிறது. வரி செலுத்தாமல் விட்டு விடுகிறபோது வரித்தொகை யுடன், வரிசெலுத்தாமல் விட்டதற்கான தண்டத்தொனகயும் சேர்த்துக் கணக்கிடப்படும் எனத் தெரிகிறது. எனவே சிகை என்ற சொல் சிக்கை (<சிக்ஷை=தண்டம்) என்ற சொல்லின் திரிபாக இருக்கலாம்.

இத்தொகுப்பில் இருகல்வெட்டுகள் கன்னடியர் ஆட்சியால் நேர்ந்த சீர்குலைவுகளைக் குறிப்பிடுகின்றன. இவற்றுள் முதற்கல்வெட்டு கி.பி. 13-ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியையும், இரண்டாம் கல்வெட்டு கி,பி. 15-ஆம் நூற்றாண்டின் முற்பகுதியையும் சேர்ந்தவையாகும். தமிழக அரசியலில் கன்னடியர் (ஹொய்சளர்) தலையீடு சற்றொப்பக் கி.பி. 12-ஆம் நூற்றாண்டின் இறுதிப் பகுதியில் தொடங்கிற்று. கி.பி. 13-ஆம் நூற்றாண்டில் இது வேரூன்றி, 14-ஆம் நூற்றாண்டின் இடைப் பகுதிவரை நீடித்தமைக்கு மேற்குறித்த இருகல்வெட்டுகளும் சான்று பகர்கின்றன. ஆனால் விஜயநகர அரசு கர்நாடக மூலமுடையதாகவே தோன்றினாலும், தமிழகத்தின் அரசியலில் நேரடியாக ஆதிக்கம் செலுத்தாமல் தமிழகப் பூர்வகுடியினரிடத்தில் அதிகாரத்தை அளித்து ஆட்சி நடத்திற்று. உடையார்கோயில் ஊரிலுள்ள கரவந்தீஸ்வரர் கோயிலிற் பொறிக்கப்பட்டுள்ள முதற் கல்வெட்டு (தொ. எண். 42/1986), கன்னடியர்

தலையீட்டின் விளைவாகக் கோயில் முற்றூட்டு நிலங்களைக் கோயில் தானத்தார் சிலர் கையகப் படுத்தி அனுபவித்து வந்தனர் என்றும், பிள்ளை அரசூருடையான் பரவ மத்திதாரான வீரகங்கன் என்பவர் இக்கோயில் நிலங்களை மீட்டு நிர்வகிக்கத் தொடங்கினார் என்றும் குறிப்பிடுகிறது. கி. பி. 13-ஆம் நூற்றாண்டைச் சேர்ந்ததாகக் கருதப்படும் ''தமிழ் நெறி விளக்கம்'' என்ற இலக்கண நூல், வழுத்தூர் காக்கும் புணையாக இருந்த அல்லது புணை (ஓடம்) செலுத்தி வழுத்தூர் மக்களைக் காத்த மதிதரன் என்பவர் ஆதரவில் இயற்றப் பட்டது என்ற விவரம் தமிழறிஞர் உ. வே. சாமிநாதையர் அவர்களால் குறிப்பிடப் பட்டுள்ளது. (''தமிழ் நெறி விளக்கம்'' முகவுரை - உ. வே. சா. நூலகப் பதிப்பு - 1937) வழுத்தூர், பாபநாசம் வட்டத்தில்தான் அமைந்துள்ளது. மேலும் அவ்வூரில் அரண்மனைமேடு என்ற இடமும் மத்திராயன் குளம் என்ற குளமும் உள்ளன. எனவே கன்னடியார் ஆட்சியால் நேர்ந்த குழப்பங்களை நீக்கிச் சீரமைத்தவராகக் கல்வெட்டில் குறிப்பிடப்படும் பரவ மத்திதரரே தமிழ் நெறி விளக்கம் நூலை இயற்றுவித்த மதிதரனாக இருக்கலாம். பரவமத்திதரர் அரசூருடையான் என்ற முன்னொட்டுடன் குறிப்பிடப்படுகிறார். அரசூர் என்ற ஊரும் இப் பகுதியில் உள்ளது. இதே காலகட்டத்தில் பரவமத்திதரர் போன்றே, அரைசூருடையான் என்ற முன்னொட்டுடன் கூடிய பிள்ளை தில்லைக்கூத்த தண்டநாயக்கர் என்ற படைத்தலைவர் ஒருவரும் வாழ்ந்துள்ளார். இவர், மனுமகாப்பிரதானி, மண்டலிக யமராசன் என்ற விருதுகள் தரித்த தண்டநாயக்கர் ஒருவரின் மகனாகக் குறிப்பிடப்படுகிறார் (தொ. எண். 52/1986). இவ் விருதுகள் ஹொய்சள தண்டநாயகர்களுக்குரியவையாகும். எனவே இவர் ஹொய்சளரின் குடும்ப அல்லது அரசியல் உறவை ஏற்ற ஒருவரின் மகனாக இருக்கலாம். சோழராட்சியின் இறுதிக் காலத்தில் படைத்தலைவர்களிடையே நிலவிய உறவுகள், பகைமைகள் போன்றவை குறித்த விரிவான ஆய்வுக்கு இச்செய்திகள் பயன்படும்.

ஹொய்சளர் ஆட்சியின் இறுதிப் பகுதியில் (கி.பி. 1340) அல்லது விஜயநகர அரசர் குமாரகம்பணர் ஆட்சிக் காலத்தில் (கி,பி. 1370) அறிமுகப்படுத்தபட்ட இராயவிபாடன் என்ற நில அளவைக்கோல் ஒன்று குறிப்பிடப்படுகிறது (தொ. எண் 64/86). இராயவிபாடன் என்பது பூர்வ அரசர்களை அழித்தவன் எனப் பொருள்படும்.

கல்வெட்டுகளைப் படியெடுத்துப் பதிப்பிக்கும் பணி வரலாற்று ஆய்வு தொடர்பான அடிப்படைப் பணியாகும், தமிழ்நாட்டில் சற்றொப்ப 50,000 கல்வெட்டுகள் இருக்கக்கூடும் எனக் கணக்கிடப்பட்டுள்ளது. இந்திய அரசு தொல்லியல் அளவீட்டுத்துறை இவற்றுள் 15,000 கல்வெட்டுகளைப் படியெடுத்து வெளியிட்டுள்ளது. தமிழ்நாடு அரசு தொல்லியல் துறையால் இதுவரை 7700 கல்வெட்டுகள் படியெடுக்கப்பட்டுள்ளன. இவற்றின் 2263 கல்வெட்டுகள் இதுவரை பதிப்பிக்கப்பட்டுள்ளன. இம்முன்னுரையின் தொடக்கத்தில் குறிப்பிட்டுள்ள தஞ்சை மாவட்டக் கல்வெட்டுத் தொகுதிகள் தவிர, சென்னை மாநகர்க் கல்வெட்டுகள்

கன்னியாகுமரி மாவட்டக் கல்வெட்டுகள் (5 தொகுதிகள்), செங்கம் நடுகற்கள், தருமபுரி மாவட்டக் கல்வெட்டுகள் (2 தொகுதிகள்), தாமரைப்பாக்கம் கல்வெட்டுகள், பெருமுக்கல் கல்வெட்டுகள் ஆகியனவும் இதுவரை பதிப்பிக்கப்பட்டுள்ளன. கல்வெட்டுகளை வாசித்துப் பதிப்பிக்கும் பணி தொடர்ந்து நடைபெற்று வருகிறது. இதுவரை படியெடுக்கப்படாத கல்வெட்டுகளைப் படியெடுக்கும் முனைப்புத் திட்டமும் செயல்படுத்தப்பட்டு வருகிறது. ஆங்கிலக் குறிப்புரைகளில் ஒலிக்குறியீடுகளை அச்சிட இயலவில்லை. கிரந்த எழுத்துகளும் துறையில் இல்லாததால், அவை தடித்த தமிழ் எழுத்துகளில் அச்சிடப்பட்டுள்ளன.

இம்முதல் தொகுதி அச்சடிக்கப்படும் நேரத்திலேயே இக்குறைகளைக் களைய வேண்டும் என்று முனைப்பாக செயல்பட்டதன் விளைவாக, அடுத்த தொகுதியில் அக்குறைகள் நீக்கம் செய்யப்பட்டுள்ளன. எனவே அவ்வகையில் சீர்திருத்தம் செய்யப்பட்டுள்ள அச்சிடப்பட்ட இரண்டாம் தொகுதியையும் இணைத்து ஒரே கட்டாக இந்நூல் தற்போது வெளிவருகிறது.

இத்தொகுதியில் இடம்பெறும் கல்வெட்டுகளை ஊராய்வு செய்து அறிந்து படியெடுத்தவர்கள் இத்துறைக் கல்வெட்டாய்வாளர்கள், முனைவர் சு. இராசகோபால், முனைவர் ஆ. பத்மாவதி, திருமதி அர. வசந்தகல்யாணி, ஆகியோர் ஆவர். நூலினை அச்சிட்ட அச்சுப் பிரிவினரும், இத்தொகுப்பில் இடம்பெறும் நிழற்படங்களை எடுத்துக் கொடுத்த துறையின் நிழற்படப் பிரிவினரும் பாராட்டுக்குரியோர். கல்வெட்டுகளுக்குரிய குறிப்புரைகளில் நுட்பமான கலைச்சொற்களுக்குரிய விளக்கங்களைத் தேவையான இடங்களில் சேர்த்துக் குறிப்புரைகளைச் செம்மைப்படுத்தியுதவிய முனைவர் சு. இராசகோபால் பாராட்டுக்குரியவர்.

தி.ஸ்ரீ.ஸ்ரீதர், இ.ஆ.ப.
சிறப்பு ஆணையர்
தொல்லியல் துறை
சென்னை-113

த. நா. அ. தொல்லியல்துறை

தொடர் எண் : 17 / 1992

மாவட்டம் :	தஞ்சாவூர்	ஆட்சி ஆண்டு :	(7+1) 8
வ்ட்டம் ;	பாபநாசம்	வரலாற்று ஆண்டு :	கி.பி. 1186
ஊர் :	ஆதனூர்	இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை	—
மொழி :	தமிழ்	முன் பதிப்பு :	—
எழுத்து :	தமிழ்	ஊர்க் கல்வெட்டு எண்	1
அரசு :	சோழர்		
மன்னன் :	மூன்றாம் குலோத்துங்கன்		

இடம் : சிவன் கோயில் மகாமண்டபத் தென்புற ஜகதி

குறிப்புரை : ஆதனூர் மங்கலவீதியில் ஒலோச்சிப நாராயண ரிஷப வாகன பட்டன் மற்றும் அவனுடைய சகோதரர்களுக்குச் சொந்தமாக இருந்த 15 கோல் அளவுடைய வரிநீக்கப்பட்ட மனைநிலம், ஆவூருடையான் காரி உலகுய்யவந்தான் என்பவனால் 15 காசுக்கு விலைக்கு வாங்கப்பட்டு, இவ்வூர் திருபாண்டீஸ்வர முடையார் கோயிலுக்கான நந்தவனம் அமைத்துப் பராமரிக்கவும், தினமும் காவிரியிலிருந்து ஒரு குடம் நீர் அபிஷேகத்திற்காகக் கொண்டு வரவும் கொடையாகக் கொடுக்கப்பட்ட செய்தி சொல்லப்படுகிறது.

Summary : Mentions purchase of a tax free house site measuring 15 *kol* from one Rabhavāhanabhaṭṭa and his brothers for an amuont of 15 *kasu* by one Kari Ulaguyyavandān of Avur. The said land was donated to the temple Tiruppāṇṭīsvaramuṭaiyār. Among the said land 3 kol measured land to be used to form a flower garden and the remaining for the expences of forming and maintaining the same and to fetch a pot of Kāveri water for the daily holy bath of the diety.

கல்வெட்டு :

1. ஒ : ஸ்வஸ்திஸ்ரீ த்ரிபுவனச் சக்கரவத்திகள் ஸ்ரீ கு . . . .சோழ தேவர்க்கு யாண்டு எழாவதிநெதிராமாண்டு ஆதநூ

2. ர் ஊர் நத்தத்து வடக்கில் மங்கலவீதியில் [இ]றையிலி மனையாய்த் திருத்துப்பட்ட நிலம் பதினைங்கோ

3. லும் ஓலோச்சிப நாராயண இஷபவாஹன பட்டனும் உடன்பிறந்தார் பக்கலும் நிலம் ஒரு கோலுக்கு

4. காசு க ஒன்றாக காசு பதிண[ஞ்]சும் இட்டு இவ் . . ருப்பாண்டீஸ்வர முடையார் கோயிலுக்கு காவேரியில் நின்றொரு

5. குடம் திருமஞ்சனம் வைய்ப்பதாகவும் முக்கோல் தறையால் திருநந்த வனஞ் செய்வதாகவும் இப்படி கொண்டு விட்டான் ஆவு

6. ருடையான் காரி உல[கு]*யுய வந்தான் :வ

மாவட்டம் : தஞ்சாவூர்

வட்டம் : பாபநாசம்

ஊர் : ஆதனூர்

மொழி : தமிழ்

எழுத்து : தமிழ்

அரசு : சோழர்

மன்னன் : (மூன்றாம் குலோத்துங்கன்)

ஆட்சி ஆண்டு : (7+1) 8

வரலாற்று ஆண்டு : கி.பி. 1186

இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை — —

முன் பதிப்பு : —

ஊர்க் கல்வெட்டு எண் 2

இடம் : சிவன் கோயில் மகாமண்டபத் தென்புற ஜகதி

குறிப்புரை : இவ்வூர் க.எண் : 1 இன் பிரதியாகலாம். சிதைந்துள்ளது

Summary : Seems to be the copy of the inscription No : 1 of this village.

கல்வெட்டு :

1. ஸ்வஸ்திஸ்ரீ த்ரிபுவநச்சக்கரவத்திகள் . . . சோழ தேவர்க்கு யா[ண்டு] . . . நெதிராமா

2. ண்டு ஆதநூர் ஊர் நத்தத்து வட . . . இறையிலி மனையாய் . . . ட நிலம் கீ[ழ்]

3. கை மேல்கை கோல் பிதினைங்கோல் . . . . இஷப வாகன . . . . பக்கலும் நி

4. லம் ஒரு கோலுக்கு காசு ஒன்றாகக் காசு . . . திருப்பாண்டீச்வர முடையார் . , . ற்றொரு குட

5. ம் திருமஞ்சணம் வைய்ப்பதாகவும் . . , . ஆவூருடையா

6. ந் காரி உலகுய்ய வந்தாந்

த. நா. அ. தொல்லியல்துறை **தொடர் எண் : 42 / 1986**

மாவட்டம் : தஞ்சாவூர்

வட்டம் : பாபநாசம்

ஊர் : உடையார் கோயில்

மொழி : தமிழ்

எழுத்து : தமிழ்

அரசு : சோழர்

மன்னன் : மூன்றாம் இராசேந்திரன்

ஆட்சி ஆண்டு : —

வரலாற்று ஆண்டு : 13-ஆம் நூற்றாண்டு

இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை } 268/1968-69

முன் பதிப்பு : —

ஊர்க் கல்வெட்டு எண் } 1

இடம் : அருள்மிகு கரவந்தீஸ்வரர் கோயில் மகாமண்டப வடசுவர்.

குறிப்புரை : பிற்காலச் சோழராட்சியின் இறுதிப்பகுதியில் போசள மன்னர்கள் (கன்னட அரசர்) ஆதிக்கம் நிலவியபோது இக்கோயிலின் முற்றூட்டு நிலங்களைக் கோயில் தானத்தார் சிலர் அனுபவித்தனர். பின்னர் பிள்ளை அரசூருடையான் வீரகங்கன் என்பவர் இக்கோயில் நிலங்களை நிர்வகிக்கத் தொடங்கி நிலைமையைச் சீர்படுத்தியுள்ளார். முன்னர் நிலவிய ஆட்சியாக பெரியதேவர் ராஜராஜ தேவரின் இருபத்து நான்காவது ஆட்சியாண்டு குறிப்பிடப் படுவதால் இக்கல்வெட்டு மூன்றாம் இராஜேந்திர சோழன் காலத்ததாகலாம். கல்வெட்டின் தொடக்கப்பகுதி சிதைந்துள்ளது. கல்வெட்டு 5 பகுதிகளாகவும் உள்ளது. முற்றுப்பெறவில்லை.

Summary : This inscription seems to belong to the period of Rajendra chola III. Twenty fourth regnal year of *Priya . Devar*, (Rajaraja devar) of the previous regime is mentioned. During that time Kannadigas (Hoysalas) occupied the country and the murṟuṭṭu lands belonging to the temple were misappropriated by the *sthanathar* of the temple. These lands were returned by Pillai Arasurutaiyan Parava mattidara alias Viraganga, started administering them, and set things right. Mutilated and incomplete inscription.

கல்வெட்டு :

பகுதி 1

1. பரணி . . . . ,
2, கூத்த்ர . , . .
3. நிற்தவினொ . . . .
4. . . . . .
5. னள் இராச . . . . க . . .
6. நு உடையார் . .
7. க்கு மருகலூரு . .
8. ஸந்திக்குப்பு . .
9. னிலும் குடி . .
10. . யுஞ் செய் . .
11. டின நிலம் . .
12. . கொண்டு . .
13. லூருடைய . .
14. ான் உள்ளிட் . .

பகுதி 2

15. பெரிய தேவர் **இராசஇராச** தேவ
16. ர்க்கு இருபத்து நாலாவது வரை
17. யும் அனுபவித்து நெடுங்கா
18. [ல]ம் நெல்லுஞ் சிகை கிடந்து இ
19. . . . யாய ஸ்ரீ பண்டாரத்து நின்று

20. ம் வரும் நெல்லும் புறப்பட்டு

21. . . உழவு முற்றூட்டு ஆகப்பயி

22. ர் ஏற்றித் திருநாமத்துக் காணியாய்

23. ப் போதுகிற நிலத்தைப் பின்பு இந்

24. நாயனார் கோயில் தானத்தாரிலே சில

25. ர் இவர்கள் பக்கலே [விலை கொண்]

26. டோமென்று மூன்றாவது கார் வரை

27. யும் அனுபவித்து வந்தமையில் இந்

28. நாள் கன்னடியக் காலமாய் இருந்

29. த[ப]டி கேட்டுக் கணக்கு வழக்காக

பகுதி 3

30. , , படி செவ்விப்பாரு இலாதபடி

31. யாலே பின்பு இக்கோயில் பற்று

32. பிடித்த பிள்ளை அரைசூருடையா

33. ரான பரவமத்திதரரான வீரகங்கற்கு

34, இது கணக்கு வழக்கு ஆனபடி கேட்டு

35. நிலம் விடுவித்து அருள வேணும் . . .

36. கோயில் தேவர்கன்மி கோயில்கணக்க

37. னும் விண்ணப்பஞ்செய்து சீமாகேசுரரு

38. ம் அறிவித்தமையில் இருந்தபடி கேட்டு

39. இவர்க(ள்)ளுக்கு இருபத்துனாலாவது அனுப

40. வித்து நெற்க்குன்றமுடையான் உள்ளிட்டார்

41. பேரிலே நெடுங்காசு நெல்லும் [சி]*கை கிடக்க இவ்

42. ர்கள் விலைகொண்டு அனுபவிக்க நம் ப்ரா

43. தி இல்லாமையில் இவர்கள் னாயனார்க்கு

44. நீர் வா[ர்த்]*து இன்னிலங்கள் விட்டமையில் . . . .

பகுதி 4

45. டியாக விட்டபடியில் இன்னி

46. ல(ம்)த்துக்கு கல்வெட்டி விட்ட

47. தென்று பிள்ளை வீரகங்கர் திருவெ

48. முத்து இட்ட ஓலை வருகையில் இப்படி

49. க்கு னாயனார்க்கு நீர் வா[ர்]*த்து விட .

50. . . . . தேவந் ஆன அழகிய மாதேவ ப[ட்]*டன் நிலம்

51. இரண்டு மாகாணி அரைகாணி முந்திரிகையும் ஆளவன்

52. தாந்னான திருக்களாவுடையாந் பட்டன் நிலம் அ

53. ரைமாவும் நீறணிந்தான் தேவ[ர்]*கள் தேவ

54. பட்டன் நிலம் ஒரு மாவும் தேவபெருமா

55. ள்ளான . . . . . பட்டன் நிலம் அரைமா மு

56. ன்த்திரிகையும் னெடுவாயில் உடையா

55. ன் விதியும் சீரன் திருவுணாழிகை பிள்ளை அரை

58. மாவும் பால் அற[ா]*வாயன் ஆன செ[ய]*ங் கொ

59. ண்ட [போ]சன் நிலம் அரைமாவும் திருநல்லூரு

பகுதி 5

50. டையான் கற்ப்பகம் நிலம் அ

61. ரை மாவும் அரைசு உடையான்

62. மாதன் நிலம் அரைமாவும் னா

63. ங்கல முடையான் உடை

64. யான் விடையான் நிலம் அரைமாவு

65. ம் வேளூ[ர்]* கிழவன் தாழி நிலம் அரைமா

66. வும் ஸ்ரீ பூதி உடையான் திருவாய்க்குல

57. ம் உடையான்னான கோயில் கணக்க

68. ன் மாஹேஸ்வரப் பிரியன் நிலம் [ஒ]ரு மா

69. வும் . . .

மாவட்டம் : தஞ்சாவூர்
வட்டம் : பாபநாசம்
ஊர் : உடையார் கோயில்
மொழி : தமிழ்
எழுத்து : தமிழ்
அரசு : சோழர்
மன்னன் : இரண்டாம் குலோத்துங்கன்

ஆட்சி ஆண்டு : 7
வரலாற்று ஆண்டு : கி.பி. 1140
இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை : 267/1968 69
முன் பதிப்பு : —
ஊர்க் கல்வெட்டு எண் : 2

இடம் : அருள்மிகு கரவந்தீஸ்வரர் கோயில் மகா மண்டப வடசுவர், பட்டிகை, குமுதம் மற்றும் ஜகதி

குறிப்புரை : நித்தவிநோதவளநாட்டுக் காந்தார நாட்டுத் தியாக சமுத்திரச் சதுர்வேதி மங்கலத்துச் சபையார், வீரசோழவளநாட்டு ஸ்ரீபூதியான ராஜநாராயணச் சதுர்வேதிமங்கலத்துத் திருக்களாவுடையார் கோயிலுக்கு இறையிலி நிலம் வழங்கிய செய்தி சொல்லப்படுகிறது. திருக்களாவுடையார் என்ற தமிழ்ச் சொல்லின் சமஸ்கிருதப் பெயரே இன்று கரவந்த ஈஸ்வரர் என்று இறைவனுக்குப் பெயராக உள்ளது. 'ந' எழுத்துக்கள் சில இடங்களில் 'த' எழுத்துப்போல உள்ளன. மூன்று பகுதிகளாக உள்ள இக்கல்வெட்டின் தொடக்கப்பகுதிகள் சுவரினுள் மறைந்துவிட்டன.

Summary : Gift of tax free land to the temple of Tirukkaḷāvuṭaiyār at Srībhūti alias Rājanārāyana Caṭurvēdimangalam in Vīracōlavalanāṭu, by the assembly of Tyāgasumuttiraccaruppēṭimangalam. The gifted land is stipulated in *matakku*, a land tax assessment system prevailed during the mediaeval period. Beginnings of the inscription is build in.

கல்வெட்டு :

1. . . . [மே]வ தலைமகள் நிலம் பெரிது சிறப்ப விஜய மாமகள் வெற்
புயத்திருப்ப இசையுஞ் செல்வியும் எண்டிசை விளங்க நிருபர் . . .
2. . . . வந சக்ரவத்திகள் ஸ்ரீ குலோத்துங்க சோழ தேவற்கு யாண்டு
ஏழாவதுநாள் நானூற்று முப்பத்தைஞ்சு பெற்ற ஸிம்ஹ தாயிற்று[1]

பூர்வ்வபக்ஷத்து ஏகாதசியும் சநிக்கிழமையும் பெற்ற பூராடத்தி நாள் நத்த[2]விநோதவ்ளநாட்டு காந்தார நாட்டு **ப்ரஹ்மதேயம்** ஸ்ரீ தியா [கசமுத்திரச்]சருப்பேதி மங்கல

3. . . . ருவில் நடுவில் நாராச(ந)த்து சந்தியிலே இற்றை நாளால் தந்மி செய்து பெருங்குறி கூடியிருந்து பணித்த எழுத்து இந்நாட்டு வீர சோழவளநாட்டு **ப்ரஹ்மதேயம்** சிபூதியாந ராஜநாராயணச் சருப்பேதி மங்கலத்து உடையார் திருக்களா உடையார் கோயிலில் ஆதிசண்டேச்வரர்[க்கு]

4. . . . இறையிலி செய்து குடுத்த பரிசாவது நம்மூற்கு இப்போது ஆவச்யகமாயிருக்கும் திரவிய வினியோகங்கள் வேண்டின இடத்து முன்பேய் குடிதரகு மாவீய்ந்து இறை தண்டுகையால் இந்[த] மாவீந்து உற்பத்தி பண்ண ஒண்ணாமையா

5. . . . . ம வினியோகத்துக்கு உடலில்லாமையால் ஆதி சண்டேசுவரர் பக்கல் [பிடாரி நிலம் வி]ழுந்ததில் கீழ்முக்காலே மூன்றுமா முக்காணியரைக்காணி முந்தரிகை நிலம் இறையிலியாக இறைவிழுத்தாக குடுக்க கடவதாகப் பிரேம . ற் . . .

6. . . . . தநுக்கு கைகொண்ட காசு $32\frac{3}{4}$ முப்பத்திரண்டே முக்காலும் கைகொண்டு நம்மூரில் இத்தேவர் இலமாய்[3] இறை விழுத்திந நிலம் சீதரவதிக்கு கிழக்கு விச்வேஸ்வர வாய்காலுக்கு வடக்கு இரண்டாந் . . .

7. . . . இது பத்தாந்தர படக்க நிலம்[4] கீழ் நாலுமா முந்திரிகை கீழ் முக்காலும் இங்கே மூன்றாங்கண்ணாற்று இரண்டரந் துண்டத்து மேற்கடைய நிலம் இரண்டு மாக்காணி அரைக்காணி நீக்கி இதன் கிழக்கு இலம்[3] ஒருமா இது பத்தாந் [தரம்]

8. . . . . கடைய் நிலம் ஒருமா இதுதன்ப[டு] தரத்து மடக்கு நிலம் கீழாறுமா முக்காணி அரைக்கா[ணி]யும் இதன் கிழக்கு நிலம் ஒரு மா இது தன் படு தரத்து மடக்கி நிலம் கீழ் எட்டு மா முக்காணி[யு]*ம் இச(த்)திரத்து கிழக்கடைய நிலம் மாக்காணி முந்திரிகை இது தன் படுதரத்து வடக்கு நிலம் கீழரையே . . .

9. . . மேற்கடைய நிலம் முக்காணி அரைக்காணி முந்திரிகை இது பத்தாந்தரம் மடக்கு நிலம் கீழிரண்டு மாக்காணி முந்திரிகைக் கீழரை ஆக நிலம் ஆறுமா முக்காணி அரைக்காணிக் கீழ் மூன்றுமா மடக்கு நிலம் முந்திரிகைக் கீழ்முக்காலே மூன்றுமா முக்காணி அரைக்காணி முந்திரிகை

10. . . . வுயக் கொண்டான் பக்கல் முப்பத்திரண்டே முக்கால் காசும் கைக்கொண்டு ஆசந்திரதாலம்[6] இறையிலியாக விட்டு இறை அந்தராயம் பெருவரி சில்வரி வெள்ளான் வெட்டி [த]ண்டம் திருவாசல் போந்தகுடிமை எப்பேர்ப்பட்டனவுங் காட்டுவாரும் காட்டுவிப்பாரும் திருவாணை புவன முழுதுடை . . . .

11. . . . ல் போந்து பணித்தா[ர்]* ஸ்ரீ தியாகசமுத்திரசேரி குரவசரி கண்டபொன்மேனி பட்டர் பணியாலும் மும்முடிசோழசேரி . . . டுந்தூர் இளைய கே[ர]ணேஸ்வர பட்டர் பணியாலும் விக்கிரம சோழ சேரி பட்டிணை பெரிய நம்பி பட்ட[ர்] பணியாலும் திரிபுவன முழுதுடைச் சேரிச் செய்யலூர்

12. . . [வி]நமலிச்சேரி புரங்க . . . [வி]வண்காடு பட்ட[ர்] பணியாலும் [வி]வண்காடு பட்டர்(ர்) பணியாலும் இராஜேந்திர சோழச் சேரித் துறும . . . டூர் மஹாதேவ[ப]*ட்டர் பணியாலும் இவர்கள் பணிப் (பணிப்) பணியால் இவை ஊர்க்கணக்கு மருகலூருடையாந் மஹாஜநப் பிரியந்

13. . . . **ஸ்ய** பெரிய நம்பி **பட்டஸ்ய ஸர்வக்ருதுயாஜி பட்டஸ்ய** திரு வெண்காடு **பட்டஸ்ய** மகாதேவ **பட்டஸ்ய** இது ஸ்ரீமாஹேச்வரர் **ரக்ஷை**

அடிக்குறிப்புகள்

1. "நாயற்று" எனப்படிக்கவும்
2. "நித்த" எனப்படிக்கவும்
3. "நிலம்" எனப்படிக்கவும்
4. "மடக்கு நிலம்" எனப்படிக்கவும்
5. "காலம்" எனப்படிக்கவும்

க. நா. அ. தொல்லியல் துறை

தொடர் எண் : 44/ 1986

மாவட்டம் : தஞ்சாவூர்

வட்டம் : பாபநாசம்

ஊர் : உடையார் கோயில்

மொழி : தமிழ்

எழுத்து : தமிழ்

அரசு : சோழர்

மன்னன் : மூன்றாம் குலோத்துங்கன்

ஆட்சி ஆண்டு : 18

வரலாற்று ஆண்டு : கி.பி. 1196

இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை } 408/1902

முன் பதிப்பு : தெ. இ. க. தொகுதி 7 எண் : 1041

ஊர்க் கல்வெட்டு எண் } 3

இடம் : அருள்மிகு கரவந்தீஸ்வரர் கோயில் மகாமண்டப வடசுவர் மற்றும் அதிட்டானப்பகுதிகள்.

குறிப்புரை : கல்வெட்டு ஆதிசண்டேஸ்வரர் குறித்த பாடலுடன் தொடங்குகிறது. இறைவனது பீடம் சுதையாக இருந்ததாகவும் ஆண்டாண்டு தோறும் அதனைப் புதுப்பிக்கின்ற சிரமம் இருந்ததாகவும், பூசை செய்யும் சைவாசாரியர்கள் வேண்டிக் கொள்ள, விக்கிரம சோழப் பிரமராயர் 1000 காசு கொடுத்துக் கிள்ளியூர் மலையிலிருந்து கல் கொண்டு வந்து கற்பீடம் அமைக்கச் செய்ததையும், அப்பணி செய்த தச்சாசாரியருக்குச் சிறப்பும், நிலமும் அளித்ததையும் இக்கல்வெட்டு குறிப்பிடுகிறது

Summary : This inscription Commences with a laudatory verse on Caṇṭeśvara. It is said that the pedestal of the diety, which was in lime mortar, was replaced with stone. One Vikramacōlā Brahmarayar paid the cost of 1000 kāsu and the raw stone for the Pedestal was brought from killiyur mountains. The mason was felicitated with special rights and land.

கல்வெட்டு :

1. ஸ்வஸ்திஸ்ரீ தண்டீச்சுரன் ஓலை சாகரஞ் சூ

2. ழ் வையத்து தண்டீச்சுரன் கரும

3. ம் ஆராய்மின் பண்டே அறஞ்

4. செய்தான் செய்தான் அறங் கா

5. த்தான் பாதந் திறம்பாமல் சென்னி

6. [மேல்] வைத்து ஆதி தண்டேச்வ[ரன்]

7. ஆதேசம் நாயனார் திருக்கிளாவுை

8. டயார் உலகுடைய பெருமாளுக்

9. கு நன்றாகப் பூஜை கொண்டருளுகிற [நா]

10. யனா[ர்] சுதையாலே பீடமாய் இரு[ந்த]

11. மையில் **த்ரிபுவனச்சக்ரவத்தி** மதுரையும் ஈழ

12. மும் [பாண்டியன்] முடித்தலையுங் கொண்ட

13. ருளின ஸ்ரீ குலோத்துங்க சோழ தேவர்[க்]கு யா

14. ண்டு பதினெட்டாவது மார்கழி மாஸவரை

15. யும் ஸ்ரீபீடஞ் சாத்தாதே எழுந்தருளி இருக்கை

16. யாலும் ஆட்டாண்டு தோறும் பசுங் கூட்டா

17. லே ஜீர்ண்ணோத்தார[ண]*[1]ம் பண்ண வேண்டுகையா

18 & 19 . . . .[1]

20. பிறிந்த மணலூர் வாதுலன் ஆராவமுது மாதவரான விக்கிரம சோழ

21. ப்பிரமமாராயர்[க்]*கு இக்கோயில் சைவாசாரியம் செவ்வார்கள் சதாசிவ பட்டர் பலநாளும் நிர்மா

22. லிய [கை]ங்கரியமாய் இராநிற்கெந்று அறிவித்தமையில் இவ் விக்கிரம சோழ

23. ப் பிரமாராயர் தேவர் சுவாமி தேவற்கும் உலகுடைய நாயகர்க்கும் விண்

24- ணப்பம் செய்து திருவிள்ளமாய் சைவச் சக்கரவத்திகளும் சைவாச

25. ாரியம் [செ]வ்வார்கள் கையப் யோலையும் கணித சக்கரவத்திகளும் குே

26. லாத்துங்கசோழ கணிகாதராயரும் இட்ட நாளிலும் கா[ல]*த்திலு[ம்]* சிலையா

27. லே சீபீடம் சாத்துக எந்று திருவிள்ளமானமையில் இச்சீபீடத்துக்கு உடலா

28. க விக்கிரமசோழ பிரமமாராயர் சரக்கில் நிந்றும் ஆயிரங் காசு தந்து

29. இக்காசு நீக்கி வேண்டுவது சீ பண்டாரத்தே இட்டுச் செய்க எந்று சொந்நமை

30. யில் நொடியூர் பட்டணத்து கிள்ளியூர் மலையில் நிந்றும் சிலை கொண்டு வந்து

31. சாத்திராத்தமானபடியே ஸ்ரீபீடம் செய்து சாத்தடக்கமையில் ஆசாரி

32 & 33 . . . .[1]

34. த்துக . . . என்றமையில் தானத்தாரு இவனுக்கு வேண்டு சிறப்பு தன்து

35. சீபீடம் சா[த்]தினபடிக்கு இறையிலி . . . நிலமும் தருகிறோ மென்று வே

36. ண்டி கொண்டமையில் இவனு[ம்]* இவன் மக்களனைவருமாக இச்சீபீடம் ஒரு ஒரு

37. . . . இரா . . மின்றியே சாத்திவிட்டமையில் இவனுக்கு இறையிலி யாக ஷிற்படி அரை ம

38. ா நிலம் (ட) பண்ணுகவென்று கோயில்(யில்) பற்று பிடித்த பிள்ளை விக்கிரம சோழ பிரமா

39. (ம)ராயர் ஓலை வந்தமையில் இவனுக்கு இறையிலியாக விட்ட பூதத்தா[ர்]* ஆன திரிபுவன மாதேவி சதுப்

40. பேதி மங்கலத்துப் பொன் கொண்டு பொலிசைக்கு பொலியூட்டு . . . . பலி இவூர் பிடாகை வீ(வீ)ரசோழநல்லூரில் கவுசி

41. லைவதிக்கு மேற்கு கங்கைகொண்டசோழ வாக்கால்லுக்கு வடக்கு அஞ்சாங்கண்ணாற்று மூன்றாம் சதிரத்து மேற்கடைய மருகலூருடை யாந் பிறாந்

42. . . ாற்படி நிலம் அரைமா இந்நிலம் அரைமாவும் மாத்தால் முட்டி தன் கலமாக வந்த நெல்லு பெற கடவந் ஆகவும் பெறு

43. மிடத்து கோயில் தரவிறையிலே கையீடு குடுத்து கொள கடவன் ஆகவும் [இப்படியே] குடிமக்களுக்கு சிலவிடுவத[ா]*கவும் இப்படி ச[ந்]*திராதி

44. த்தவற் செல்[வ]தாக கல்லும் வெட்டிக் கொழ்க இவனுக்கு[ம்] இவன் வற்கத்தாற்கும் இப்பூமி பெறுவா[ர]ாக

45. யில் கனகந் ஸ்ரீபூதி உடையான் திருக்களாவுடையானடிகள் திருவாய் குலமுடையானான பிள்ளை வேளான் எழுத்து

---

1. *சிமெண்ட் பூச்சால் மறைந்துவிட்டது.

மாவட்டம் : தஞ்சாவூர்
வட்டம் : பாபநாசம்
ஊர் : உடையார்கோயில்
மொழி : தமிழ்
எழுத்து : தமிழ்
அரசு : சோழர்
மன்னன் : இரண்டாம் குலோத்துங்கன்

ஆட்சி ஆண்டு : 4
வரலாற்று ஆண்டு : கி. பி. 1137
இந்திய கல்வெட்டு ஆண்டு அறிக்கை } 405 / 1902
முன்பதிப்பு : தெ. இ. க. தொகுதி7, எண் 1038
ஊர்க் கல்வெட்டு எண் } 4

இடம் : அருள்மிகு கரவந்திஸ்வரர் கோயில் மகாமண்டப வடபுறச் சுவர்

குறிப்புரை : திரிபுவன மாதேவிப் பேரேரியில் இருந்த கணபதியார் என்ற பெயருடைய தூம்பு உடைந்த போது, அதைச் சீர் செய்யப் போதிய பணம் இல்லாத நிலையேற்பட்டது. இவ்வூரின் மேல் பிடாகையான வீரசோழநல்லூரில் இருந்த திருவெண்காடு பட்டன், குரோவி ஐயப்ப பிராந் பட்டன், இவனது தம்பிகள், திருவெண்காடு பட்டன், உருத்திரபட்டன் ஆகியோருக்கு உரிமையுள்ள 2 மா முக்காணி அளவுள்ள நிலத்தினைத் தந்ம தாவளர் என்னும் வணிகப் பிரிவினர், 25 காசு கொடுத்து வாங்கி அளித்தனர். அக்குறிப்பிட்ட நிலத்திற்குத் திரிபுவன மாதேவிச் சதுர்வேதி மங்கலத்துச் சபையார் வரிவிலக்கு அளித்ததையும், அதனை முடிவு செய்யும் கூட்டம், இவ்வூர் நடுவேயமைந்த ஸ்ரீ முடிகொண்ட சோழ விண்ணகர் ஆழ்வார் கோயிலில் (திருமால் கோயில்) நடந்ததையும் இக்கல்வெட்டுத் தெரிவிக்கின்றது. மேலும், புறம்பு நின்றும் சேவிக்க வந்த அடியார்களுக்கு (வெளியூரவர்) இரண்டு திருவிழா நாள்களில் உணவு வழங்கவும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

Summary : The inscription begins with the prasasti "Pumannupatumam" in praise of Kulottunga Cola II. It deals with the gift of a tax free land to the temple by the mahasabhaiyar of Tribhuvana madeviccaturvedi mangalam, a brahamadeya situated in Viracolavalanadu, a teritorial division in Nittavinodavalanadu, a larger politico-geographical division. The temple is mentioned as Tiruviraiyankudit Tirukkilavudaiyar koyil situated inside the Tribhuvanamadevipereri.

It records the decision of sabaiyar of Tribhuvanamadevi mangalam to exempt the taxes for the land of 2 Ma and Mukkani which was originally bought from four individuals of Viracholanallur a western hamlet by Danma Dāvalar (a group of merchants) for 25 Kācu for the expenses of repairing the sluice called Ganapathiyar in Tiribhuvanamadevippereri. It is said that the meeting was held in the Courtyard of Sri Mudikonda Chola vinnakar of that village.

கல்வெட்டு :

1. **ஸ்வஸ்திஸ்ரீ** பூமன்னு பதுமம் பூத்த ஏழுல
2. கும் தாமுன் செய்த [தவ]த்தால் பருதிவழித்தே(ா)
3. ன்றிந [ெ]நடுமாலிவனென நெடுமுடி சூடி இரு
4. [நி]ல மகளை உரிமையிற் புணர்ந்து திருமகள்வ[ளர்]
5. முலைச் செஞ்சான்தளைந்து பருவரை மார்வம் பனிவ
6. ரை நிகற்ப ஜெயமகள் செழுஞ் சன்தனச் சுவட்டால் புய
7. ப் பொருப்பெனத் தோ[ன்ா]ற நாமகள் நானமுங் கோமகள்
8. பவள சேய்ஒளி படைத்தனநியநெனத் தவள
9. . . . . ந்தனியுடையோநெனப் புகழ்மகள் . . . . .
10. நா இன்று மொ[ற்*]ரு குடை நிலவும் [பொரு படைத்] திகிரி [வெயி]
11. லினுங் கருங்கலி இருளினைத்துரப்ப . . . . . கட
12. ல் புறத்திலும் கோச்சென்தனி[க் கோனிலிதுலாவ மீன]முஞ் சிலை
13. யுஞ் சிதைந்து வானு . , ... ருவிற் புலி வீற்றிருப்ப
14. [உ]ம்பரி யானையோ ரெட்டினுக்குந் [கும்பமென்னத் தனித்தனித் திசை தொ
15. று விசையத்தம்ப நிற்ப பசி பகையாதியானது நீங்க மன்னுயிர் தழைப்ப
16. மனுவாறு விளங்க மாதவர் தவமும் மங்கையர் கற்பும் ஆதியந்[தணரா]

17. குதிச்சுடருமீதெழு கொண்டல் . . . . . மேதிநி வளனுஞ்சாதி

18. ஒருக்கமும் நீதியறம் பிறழா நிகழப் பாவும் பழனப் பரப்பும் ப

19. ணைக்கை மாவினல்லது வன்றளைப் படுதல் கனவிலுங் காண்டற்கரி தென

20. வரநெதிப் புடையிலும் பல்வேறு புள்ளின மல்லது சிறையெந

21. ப் படுதலன்றி நிறைபெறுஞ் செல்வமோடவனிவாழ் பல்லவர் கே

22. தலுங்கர் மாளவர் கலிங்கர் கோசலர் கந்னடர் கடாரர் தெந்னவர் கேர

23. ளர் சிங்களர் கொங்கணர் சேதிபர் திரிகத்தர் வங்கவரங்கவர் வத்தவர்

24. மத்திரர் கங்கர் சோனகர் கைக்கயர் . . . ஜீனரென் றறைகழல் வேந்

25. தரும் பல்லாணை சூழ முனை[றா]யில் பரிந்திறை குணந் திறைஞ்ச

26. வம்பொந் மலற்கொடி செம்பியந்கிழாநடி ஒரு மருங்குடநமர்ந்

27. திருப்ப அரம்புரி சிமையப் பொற்கோட்டிமையப் பாவை

28. யுஞ் சிவனும் போலச் செம்பொந் வீரஸிம்மாஸநத்துப் புவநமு[ழு]*து

29. டையாள்ளொடும் வீற்றிருந்தருளிய கோவிராஜகேசரி பற்மரான

30. . . . , [யா]ண்டு ச நாலாவது நித்த விநோத வளநாட்டு வீரசோழ வளநாட்டு [ப்ரஹமே]

31. [த]யம் திரிபுவனமாதேவிச் சதுர்வேதிமங்கலத்து பெருங்குறி மகா சபை யோ

32. ம் சிம்ம நாயற்று அபர பக்ஷத்து திங்கள் கிழமையும் சதுர்த்தியும் பெற்ற இரேவதி நா[ள்]

33. இவ்வூர் நடுவிற் திருமுற்றமான ஸ்ரீ முடிகொண்டசோழ [விண்ணக] ராழ்வார் கோயிலி

34. லே தன்மிசெய்து கூட்டங் குறைவறக் கூடியிருந்து இவ்வூர் திரிபுவன மாதேவிப் பே

35. ரேரியுள் எழுந்தருளி இருக்கும் திருவிறையான்குடி திருக்கிளா வுடைய மஹாதேவர் ஆதிசண்

36. டேஸ்வர[ர்*]க்கு நாங்கள் இறையிலி செய்து குடுத்த பரிசா[வ]து

37. எங்களூர் திரிபுவன மாதேவிப் பேரேரியில் கணவதியார் தூம்புடைந்து இது படுக்கைக்கு

38. சில சாதரணத் திரவிய மில்லாமையால் இவ்வூர் மேல்பிடாகை வீர சோழ

39. நல்லூர் கவிசிலைவதிக்கு மேற்கு கங்கை கொண்ட சோழ வாய்க் காலுக்கு

40. வடக்கு நா[லா]ங் கண்ணாற்று மூந்றாஞ் சதிரத்து மேற்கடையக் கா . . ற்றைத்

41. திருவெண்காடு பட்டந் பக்கலும் குரோவி ஐயப்ப பிராந் பட்டனும் இவந் த

42. ம்பி திருவெண்காடு பட்டனும் இவந்தம்பி உருத்திர பட்டனும் பக்கலும்

43. தந்ம தாவளர் திருக்கிளாவுடையா ராதிசண்டேஸ்வர பேராலே இக் கோயி[லி]

44. ல் இரண்டு திருநாளைக்கும் புறம்பு நின்றும் சேவிக்க வந்த அடியார்க்கு சோறு இறைக்கு

45. விலை கொண்டுடைய நிலம் உபரூ இந்நிலம் இரண்டு மா முக்காணியும் இறையிலி

46. செய்கைக்கு இத் தன்ம தாவளர் பக்கல் கொண்ட காசு உடுரு இக்காசு இருபத்தைஞ்சுக்கு

47. ம் காசு ஒன்றுக்கு திங்கள் கால[ாந்தரம்] பலிசையாக வந்த பலிசை பொலி

48. வதாகவும் பொலிந்த பலிசைக்கு செலவாக இந்நிலம் இரண்டு [மா] முக்கா

49. னியும் இறையிலியே அனுபவிக்க கடவார்க்கு இக்காசு இருபத்தை [ஞ்]சு மித்

50. தன்ம தாவளர் பக்கல் கொண்டு சந்திராதித்தவற் சாஸ்வதிகமாக இ

51. றையிலி செய்து குடுத்தோம் இத்திருவிறையாந்குடித் திருக்கிளா வுடைய

52. ாராதி சண்டேஸ்வர[ர்*]க்கு இத்திரிபுவன மாதேவிச் சருப்பேதி மங்கலத்

53. து பெருங்குறி மகாசபையோம் இந்நிலத்துக்கு அன்தராயம் சில்

54. வரி மேல்வரி வெ[ட்]டி முட்டையாள் திருவாசல் போந்த குடிமை கொ

55. ள்ளக் கடவோமல்லாதோமாகவும் இப்படி யூ[று]

56. . . . செய்வார் திருவாணை புவன முழுதுடையாராணை இ

57. [ப்படி சம்ம]தித்து இறையிலி செய்து குடுத்தோம்

58. இத் திருக்கிளாவுடையா ராதிசண்டேஸ்வரற்கு இப்பெருங்

59. குறி மகா சபையோம் இப்படிக்கு ஸபையுள்[ளிரு]

60. ந்து பணித்தார் ஸ்ரீ இராஜேந்திரசோழச்சேரிக் குரோ

61. வித் திருவெண்காடுடைய[ார்] பணியாலும் திரிபுவனமா

62. தேவிச்சேரிக் குரவசேரி அஜ்ஜி ஜ[ன] பட்டந் பணியா

63. லும் குழுமாழி தேவச்சேரி வெண்ணைக் குறிச்சிப் பு

64. ண்டரிகாக்ஷ பட்டந் பணியாலும் மதுராந்தகச்சேரி [அற]

65. ணைப் புறத்து நராயண பட்டந் பணியாலும் ஜந[நாதச் ே]

66. ரி நாலூர் வாஜபேயி திருவெண்காடு பட்டந் பணியா

67. லும் பவித்திரமாணிக்கசேரிப் பைய்யூர் மாதவ பட்ட[ன்]

68. பணியாலும் பணிப்பணியால் பணி கேட்டு எழுதிநேன் இரும்புதலு

69. டையான் சொக்கந்ஓலைவெந்றாநேன் இவை எந்நெழுத்து இப்படிக்கு அசுகூர்

70. நாராயணந் சந்திராபரண பட்டந் எழுத்து இப்படிக்கு காம்பி செட்டு கங்கை

71. போச திருவெண்காடு பட்டநேந் இவை எந் நெழுத்து இப்படிக்கு நாலூற் சீராமந்

72. நாராயண பதுமந் எழுத்து இப்படிக்கு இவை முரும்புறத்து பொற்றம் பட்டன்

73. எழுத்து இப்படிக்கு இவை நெல்லூர் நன்த

74. பெருமாந் பட்டந் எழுத்து இப்படிக்கு குரவசேரி அஜ்ஜ ஜன பட்டந் னெழுத்து இப்படி

75. க்கு களத்தூர் அழகிய மணவாள பட்டநேன் இப்படிக்கு இவை கரா[ம்]*பி [செ*]ட்டு மாதவ ப

76. ட்டந் எழுத்து இப்படிக்கு இவை வெண்ணைக் குறிச்சிப் புண்டரி காக்ஷ பட்டந் எழு

77. த்து இப்படிக்கு நாலூர் வாஜபேய வெண்காடு பட்டநே எழுத்து இப்படிக்

78. கு இவை நாலூர் லக்ஷண பட்டநேந் இவை எந்நெழுத்து இப்படிக்கு வடுகச் சேரி [பு]

79. ண்டரிகாக்ஷ ப[ட்*]டநே எழுத்து இப்படி அறிவேன் இவ்வூர் ஸ்ரீ புருஷோத்தமத்தாழ்

80. வார் கோயில் காணி உடை ஸ்ரீ வைகாஸனந் ஹரிநாராயணந் ஸ்ரீக்ருஷ்ண பட்டநேன் இவை

81. வ எந்நெழுத்து இப்படி அறிவேன் ஸ்ரீ வைகானஸன் ஸ்ரீ க்ருஷ்ணந் தா . . . . நேன் இப்

82. படி அறிவேந் ஆயிரத்து எண்பத்து நால்வந் எழுத்து இப்படி அறிவேந் இவ்வூர் திருவரங்கமுடையான் திரு . . . .

மாவட்டம் : தஞ்சாவூர்
வட்டம் : பாபநாசம்
ஊர் : உடையார்கோயில்
மொழி : தமிழ்
எழுத்து : தமிழ்
அரசு : பாண்டியர்
மன்னன் : இரண்டாம் மாறவர்மன் குலசேகரன்

ஆட்சி ஆண்டு : 22
வரலாற்று ஆண்டு : கி.பி. 1345
இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை : —
முன் பதிப்பு : —
ஊர்க் கல்வெட்டு எண் : 5

இடம் : அருள்மிகு கரவந்தபுரீஸ்வரர் கோயில் அர்த்த மண்டப வடசுவர்

குறிப்புரை : நித்தவினோத வளநாட்டுத் தென்கால் வீரசோழ வளநாட்டு பிரமதேசம் ஸ்ரீபூதியான நாராயணச் சருப்பேதி மங்கலத்து சிவன் கோயிலின் ஆதிசண்டேஸ்வர தேவகன்மிகளுக்கு நாகமங்கலமுடையான் ஸ்ரீமான் பிள்ளை யான இராசராச விசயராயன் புத்தூரான திரிபுவன மாதேவிச் சதுர்வேதி மங்கலத்துத் திரிபுவன மாதேவிப் பேரேரியில் தமது காணியான சிற்றேரியின் பாசனம் பெறும் நிலத்தைத் தானமாக வழங்கி, நான்கெல்லையிலும் சூலக்கல் (அஸ்திரதேவர்) நாட்டிக் கொடுத்த செய்தி கூறப்படுகிறது.

Summary : Mentions gift of land, irrigated by Cirrrei inside Tiribuvana madevippereri in Puttur alias Tiribhuvanamadevi ccaturvedimangalam by Nagamangalamudaiyan Srīman Pillai alias Rasarasa vicaiyarayan to the temple of Tirukkalavudaiyanayanar. Boundary stones with the trident symbol (astradeva) were also planted to earmark the land.

கல்வெட்டு

1. ஸ்வஸ்தி ஸ்ரீ கோமா[ற]
2. பன்மர் திருபுவன
3. ச் சக்கரவத்திகள் ஸ்ரீ குலசேகர
4. தேவர்க்கு யாண்டு உஉ இருப

5. த்திரண்டாவது துல

6. ா நாயற்று அபர ப

7. க்ஷத்து பஞ்சமியும் புத

8. ன் கிழமையும் பெற்ற பூ[ச]

9. த்துநாள் நித்த வினோத வளநாட்

10. டு தென்கால் வீர சோழ வளநா

11. ட்டு **பிரமதேசம்** ஸ்ரீ பூதியான

12. நாராயணச் சருப்பேதி மங்கலத்து

13. [உ]டையார் ஆ[ளு]டைய நாயனார்

14. ஆதி சண்டேஸ்வர தேவ[கன்மிகளுக்]

15. கு நாகமங்கல முடையான் ஸ்ரீ மா[ன்]

16. [பி]ள்ளையான இ[ர]ாசராச விசையராயநேன்

17. தன்மதான **ப்ரமாணம்** பண்ணிக் குடுத்

18. த பரிசாவது இந்நாட்டு புத்தூரான திருபுவன

19. மாதேவிச் சருப்பேதி மங்கலத்து திரு

20. புவன மாதேவிப் பேரேரியில் எ

21. ன் காணியான சிற்றேரியி[ல்] நா

22. ன் தன்(ந்)ம தானமாக குடுத்த விளை

23. நிலத்துக்கு எல்லையாவது கீழ்ப

24. ாற்க் கெல்லை இந்நாயனார் திருநாமத்

25. துக் காணிக்கு மேற்க்கும் தென்பாற்க்

26. கெல்லை வீரசோழ வடவாற்று

27. க்கு வடக்கும் மீபாற்க் கெல்லை

28. ராஜமஹேந்திரன் பற்று வெட்

29. டி புறங்கரை எல்லைக்கும்

30. தெ . . . . மங்கலத்து எல்லைக்கு மே . . .

31. காலுக்கு கிழக்கும் வீராணநல்லூர் துறையாநல்லூர்

32. கும் இந்நான்கெல்லை[க்கு] நடுஉள்ப்பட்ட நிலம்

33. . . ன **ப்ரமாணம்** பண்ணிக் குடுத்தேன் உடையார்

34. (உடையார்) திருக்கிளாவுடைய நாயனார் கோயில் ஆதிசண்டேஸ்வர தேவர்கன்மிகளுக்கு ஸ்ரீமான் பிள்ளையான இராசராச விசையராய ரேன் இந்நான்கெல்லையுள்

35. நடுவுள்ப்பட்ட நில[ம்] நேராக தன்[ம*]மாக **ப்ர[ம்]மா**ணம் பண்[ணி] குடுத்து அஸ்த்திறதேவரையும் நான்கெல்லையிலும் ஏறி அருளப் பண்ணி குடுத்தேன் உடையார்

36. (உடையார்) திருக்கிளாவுடைய நாயனார் கோயில் ஆதி சண்டேஸ்வர தேவர்கன்மிகளுக்கு நாகமங்கலமுடையான் ஸ்ரீமான் பிள்ளையான இராசராச விசையராயனே[ன்]

37. இப்படிக்கு இவை நாகமங்கலமுடையாநேன் ஸ்ரீமான் பிள்ளையான இராசராச விசையராயநேன் இவை விசையராயன் எழுத்து இப்படி அறிவேன்

38. (இப்படி அறிவேன்) பிள்ளையராயன் நரசிங்க தே[வ]னேன் இப்படி அறிவேன் பூங்குன்றமுடையா[ன்*] ஆவத்துக்காத்தாநேன் இப்படி அறிவேன்

39. (இப்படி அறிவேன்) பெரியநாயந் தொண்டைமானா[ரேன்] இப்படி அறிவேன் திருபுவனவீரபுரத்து சாலிகரில் சங்கன் திருநட்டப் பெருமாள் ளேன் இப்படிக்கு ஸ்ரீமான் பிள்ளை

40. இராசராச விசையராயர் இந்த தன்மதான **ப்ரமா**ணம் [எழு]த சொல்லி வேண்டிக் கொள்ள இந்த **ப்ரமா**ணம் எழுதினேன் இவை பரிசை கிழையான் தேவர் எழுத்து

த. நா. அ. தொல்லியல்துறை **தொடர் எண் : 47/ 1986**

மாவட்டம் : தஞ்சாவூர்

வட்டம் : பாபநாசம்

ஊர் : உடையார்கோயில்

மொழி : தமிழ்

எழுத்து : தமிழ்

அரசு : சோழர்

மன்னன் : இரண்டாம் இராஜராஜன்

ஆட்சி ஆண்டு : 6

வரலாற்று ஆண்டு : கி.பி. 1152

இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை } 407/1902

முன் பதிப்பு : தெ.இ.க. தொகுதி 7 எண் 1040

ஊர்க் கல்வெட்டு எண் } 6

இடம் : அருள்மிகு கரவந்தீஸ்வரர் கோயில் கருவறை வடசுவர் மற்றும் அதிட்டானப் பகுதிகள்.

குறிப்புரை : இக்கோயிலுக்குத் திருவிளக்குப் புறமாகவும், திருவிழா நாள்களில் யாகசாலை மற்றும் இறைவன் எழுந்தருளும் போது, செய்ய வேண்டிய சடங்குகளுக் காகவும் நிலம் வழங்கப்படுகிறது. பாண்டிகுலாசனி வளநாட்டு ஆர்க் காட்டுக் கூற்றத்து ஆழிக்குடையான் குனிக்கும்பிரான் என்பவர். பெருமருதூர் அழகியமணவாளன் விநாயக பட்டர் என்பவரிடமிருந்து இந்நிலத்தை விலைக்கு வாங்கிக் கோயிலுக்கு வழங்குகிறார். இவ்வூர்ப் பெருங்குறி மகா சபையார், இந்நிலத்துக்குரிய வரியினங்களைத் தள்ளுபடி செய்து இறையிலி நிலமாக அறிவிக்கின்றனர்.

Summary : Records a gift of land as Tiruvilakkuppuram for burning lamps, to meet the expenses of certain yagasala ritual during festival days by a Kunikumpiran a native of Alikkudi in Arkaṭṭukkurram a subdivision of Pandiyakulacani Valanadu. The mahasabha, assembly, exempted certain land dues.

கல்வெட்டு :

1. ஸ்வஸ்தி ஸ்ரீ பூமருவிய திருமாதும் புவிமாதும் ஜயமா

2. தும் நாமருவிய கலைமாதும் புகழ்மாதும் .....

3. ..... வருமுறை ....

4. ற வெண்குடை .....

5. ளங்க கருங்கலிப்பட்டியைச் செங்கோல் துரப்ப

6. வளர்த்துடன் .....

7. ..... பணி[ய] .....

8. [ஹாஸ]நத்து புவநமுழுதுடையாளொடும் வீற்றிருந்தருளிய ...

9. பத்மராந **த்ரி**பு[வ]*நச்சக்கரவத்திகள் ஸ்ரீ ராஜராஜதேவற்கு யாண்டு ஆறாவது கு

10. **ம்ப** நாயற்று **அபரபக்ஷத்து ப்ரத**மையும் வியாழக் கிழமையும் பெற்ற மகத்து நாள்[1]

11. திருநுந்தாவிளக்குப்புறமாகவும் இத்தேவர் திருநாட்களில் யாக மண்டபத்து தேவர் எழுந்

12. ..... பண்ணுவார்க்கும் தேவை ஆக திருச்சாந்து சாத்தும் .... புண்ணிய[ாக]

13. ம் பண்ணவும் **அத்ய**நம் பண்ணுவ[ார்]க்கும் பாண்டிகுலாசநி வள நாட்டு ஆற்காட்டுக் கூற்றத்து

14. ஆழிக்குடையாந் குநிக்கும்பிராந் திருநடம்புரிந்தான் பெருமருதூர் அழகிய மணவாளந்

15. விநாயகபட்டந் பக்கல் விலை கொண்டுடையதான நிலமாவது கௌசலை வதிக்கு மேற்கு கங்

16. கைகொண்டசோழ வாய்க்காலுக்கு வடக்கு மூந்றாங் கண்ணாற்று நாலாந்துண்டத்து கிழக்கடைய நி

17. லம் ஒருமா அரைக்காணி நீக்கி இ[த]ந் மேற்கு நிலம் ஒரு மாவரையில் மேற்கை

18. டய நிலம் காணி அரைக்காணி முந்திரிகையில் தெற்கடைய நிலம் காணிக்கு

19. (க்கு) இதந் வடக்கு நத்தநிலம் முந்திரிகையும் ஆறாங் கண்ணாற்று மூந்றாந்து

20. ண்டத்து கிழக்கடைய நிலம் ஒருமா நீக்கி இதந் மேற்கு நிலம் இ[ர]ண்டு மாக்கா

21. ணியும் ஆக விளைநிலமும் நத்தமும் நிலம் இரண்டு மாக்காணி முந்திரிகை இந்நிலம் இரண்டு மாக்காணி முந்திரி

22. (க்)கையும் இவ்வாதி சண்டேஸ்வரதேவர் சிவநாமத்திநால் திருநுந்தா விளக்கொன்றுக்கு திருநுந்தாவிளக்

23. குப்புறமாக இந்நிலம் இரண்டு மாக்காணியில் கிழக்கடைய நிலம் மாக்காணியுமே இதந் மேற்கடைய இத்தேவர் திருநாள்களில் யக்கி[ய]

24. மண்டபத்து [உத்ஸவர்] ஏழுந்தருளி இருக்க அத்யயநம் பண்ணவும் புண்ணி யாகம் பண்ணவும் இத்தேவர் திருச்சாந்து சாத்தும் போது தம் பு

25. ண்ணியாகம் பண்ணவும் பெரும்பற்றப்புலியூரில் ஆத்ரயந் நாதத் தேவநான விநாயகபட்டற்கும் இவந் மகநே துடங்கி அவன் வழி வங்கி

26. ஸவம்மாக இறையிலி செய்த நிலம் ஒரு மாவும் ஆக நிலம் இரண்டு மாக்காணியும் நத்தநிலம் முந்திரிகையும் ஆக நிலம் இரண்டு மாக் காணி முந்திரி[கை]யும் இந்நிலம் இரண்டு மாக்கா[ணி]

27. யும் இறையிலி செய்கைக்கு நம்மூர் வெட்டியுள்ளிட்டு வேண்டுவன அவையிற்றுக்கும் ஸபா விநியோகத்துக்கும் அழிக்குடையாந[2] குநிக்கும்பிராந் திருநடம் புரிந்தான் பக்கல் கொண்ட காசு பதினைஞ் சுக்கு . . .

28. க்குத்திங்கள் காலத்திரம் பலி[சை] பொலிவதாகவும் இப்பலிசைக்குச் செலவாக இந்நிலம் (இந்நிலம்) இரண்டு மாக்காணி முந்திரிகையும் இ[ப்]*படியே அநுபவிக்கப் பெறுவராகவும் இக்காசு பதினைஞ்சு . . . . .

29. குடையாந் குநிக்கும்பிராந் திருநடம்புரிந்தாந் பக்கல் கொண்டு இந்நிலம் இரண்டு மாக்காணி முந்திரிகையும் சந்திராதித்தவற் சாஸ்வதிகமாக இறையிலி . . . . க்கப் பெறுவாராக இப்படி . . . . .

30. ய்து குடுத்தோம் உடையார் திருக்கிளாவுடையார் கோயிலில் ஆதி சண்டேஸ்வரற்கு இத்தீபுவநமாதேவிச்சருப்பேதிமங்கலத்து பெருங் குறி மஹாஸபையோம் இந்நிலம் இரண்டு மாக்காணி முந்திரிகை . . . .

31. வரி பெருவரி அந்தராயக் காசும் வெட்டிமுட்டையாளும் வெள்ளாந் வெட்டியும் மற்று மெப்பேற்பட்ட திருவாசற்போந்த குடிமை காட்டுவாரும் காண்பாரும் திருவாணை புவனமுழுதுடையாராணை சீயாஜ்ஞை எந்று ஸபா . . . . .

32. ஸபையுள்ளிருந்து பணித்த . . ராஜேந்த்ர சோழச் சேரிக்கு கொரோவி அய்யப்ப பிரான் பட்டந் பணியாலும் த்ரீபுவன மாதேவிச்சேரிக்கு குரவசரி அக்னி ஜெந்மபட்டன் பணியாலும் . . . . . தேவச்சேரிக்கு வெண்ணை

33. மாணிக்க பட்டந் பணியாலும் மதுராந்தகச் சேரிக்கு அரணைப் புறத்து நாராயணந் பணியாலும் ஜனநாதச்சேரிக்கு காராம்பிச்செட்டு கற்[ப]*கபோசன் சீ கோவிந்

34. தபட்டந் பணியாலு[ம்] பவித்திரமாணிக்கச்சேரிக்கு வங்கிப்புறத்துச் சீராமபட்டந் பணியாலும் பணிப் பணியால் ஊற்கணக்கு அழுத்திர ஸ[வ]ல்லி உடையாந் எழுத்து இப்படிக்கி

35. வை அசுகூற் சந்திராபரணபட்டந் எழுத்து இப்படிக்கிவை குரவசேரி அக்கிசென்[ம]*பட்டந் எழுத்து இப்படிக்கிவை வெண்ணைக்குறிச்சிக் கருமாணிக்க பட்டந் எழுத்து இப்படிக்கி

36. . . ட் கொண்டநாயகபட்டந் எழுத்து இப்படிக்கிவை வங்கிப்புறத்துச் சீராமபட்டந் எழுத்து இப்படிக்கிவை வங்கிப்புறத்து மாதவபட்டஸ்ய பத்ர பற்றத்து நாராயண பட் . . . . .

மாவட்டம் : தஞ்சாவூர்

வட்டம் : பாபநாசம்

ஊர் : உடையார் கோயில்

மொழி : தமிழ்

எழுத்து : தமிழ்

அரசு : சோழர்

மன்னன் : குலோத்துங்கன்

ஆட்சி ஆண்டு : 1]6]

வரலாற்று ஆண்டு : 12-ஆம் நூற்றாண்டு

இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை — —

முன் பதிப்பு : —

ஊர்க் கல்வெட்டு எண் 7

இடம் : அருள்மிகு கரவந்தீஸ்வரர் கோயில், கருவறை வடசுவர்.[1]

குறிப்புரை : ஆவூர்க் கூற்றத்துப் பிரமதேயம் சோழராஜ்யதிலதச் சதுர்வேதி மங்கலத்துப் பெருங்குறி மகாசபையார், திருக்கிளாவுடையார் கோயிலுக்கு முன்பு கொடுத்த இறையிலிக்கான ஆவணம் தொலைந்து விட்டதால், மீண்டும் 3 காசுகளை ஆவணச் செலவுக்காகப் பெற்றுக் கொண்டு, புத்தாக்கம் செய்து கொடுத்ததை இக்கல்வெட்டு குறிக்கிறது. இவ்வாவணம் கொடுக்கப்படும் போது, எதிர்கால வரிக்காக 43 காசுகள் செலுத்தப்பட்டதையும். அதன் வட்டியிலிருந்து வரியினை ஈடுகட்ட ஏற்பாடு செய்யப்பட்டதையும் குறிக்கிறது. இந்த சபைத் தீர்மானம் 'சபா விவத்தை' என்றும், அரசு ஆணை என்ற பொருளில் 'திருவாணை புவனமுழுதுடையார் ஆணை திருவிரையாக் கலி' என்று ஓம்படைக்கிளவியும் குறிப்பிடப்படுகிறது. ஒன்பது சேரியில் இருந்தும் ஒவ்வொருவர் கையெழுத்திட்டுள்ளனர்.

Summary : It is a duplicate deed given to the temple of Tirukkalaudaiyar by the perunkuri Mahasabhaiyar of Brahmadeyam Cholarajyatilatac catur vedimangalam in Avur Kurram, a sub division of Nittavinoda valanadu. The name of the village where the temple is situated is mentioned as Sriputi alias Iracanarayana caruppetimangalam. As the original deed became extrict (antarapadukai), 3 Kasu were levied as drafting charges for the duplicate (puna pramāṇam). While doing so, 43 Kāsu were collected as deposit and the future taxes could be remitted from its interest. The assembly resolution is mentioned as 'Sabha Vivathai'

and respected as an 'order of the King (Tiruvānai Bhuvanamuḷutuḍaiyār Āṇai Tiruviraiyākkali). Nine persons signed on behalf of 9 sectors (cheris).

கல்வெட்டு :

1. திருபுவனச் சக்கரவத்திகள் ஸி ஸ்ரீ குலோத்துங்க சோழ
2. தேவற்க்கு யாண்டு ஐ[சூ]வது மேஷ நாயற்று அபர பக்ஷ
3. ப்பஞ்சமியும் புத[ன்]கிழமையும் பெ[ற்]ற திருவோணத்து [நாள்]
4. நித்தவிநோத வளநாட்டு ஆவூர் கூற்றத்து **ப்ரம்மதேயம்**
5. சோழராஜ்**ய**திலத சதுர்**வே**திமங்கலத்து பெருங்குறி **ம**ஹா
6. ஸையோம் இநாட்டு . . . ளநாட்டு சீபூதியான
7. இராசநாராயண சருப்பேதிமங்கல[த்து] உடையார் திருக்கிளாவுடை
8. யார் கோயில் ஆதிசண்டேஸ்வர தேவர்கந்[மிகளு]க்கு நாங்கள் இறையிலி கை
9. [யி]டு புனப் பிரமாண[ம்]* பண்ணி குடுத்த பரிசாவது இச்சோழராச [சரும்]பேதிமங்கலத்து வெண்ணூர் குளங்கரை பட்ட படுகை பி[ராணை]
10. பகாரி எந்று பேர் கூவப்பட்ட நிலம் வீரநாராய[ண]வதிக் கீழ்க் குலோத்துங்கசோழ வாய்க்காலுக்கு
11. ம் கூ துண்டமும் எ துண்டமும் . . . .ந்துண்டமும் கூ[து]ண்டமும் இந் நிலத்தை குத்திந படி வெண்ணு[ரும்] அகப்பட நிலம் [உசித]சுமு
12. த்[தி]ர சருப்பேதிமங்கலத்தார் பொ[த்தகப்]படி உள்ள நிலமாகக்கீள் எல்லை உள்பட்ட நிலம் 16மா முக்காணி அரைக்காணி[2] இந் நிலங் கலந்
13. தவாற்றால் மிகுதி குறைவு [அறுப்]பாக செம்பாதி **நிலம்** அமாகாணி அரைக்காணி[2] முந்திரி இந்நிலம் எட்டுமாக் காணி [அரை]க் காணி மு
14. ந்திரிகையும் [இறை]யிலியாக இறை[யி]*லி செ[ய்து] குடுத்தோம் இ ஆதிசண்டேசுர தேவர்க்கு இ[ப்]பெருங்குறி [மஹா]
15. ஸையோம் இந்நிலம் இறை [யிலியாக] கைக்குடுத்து . . . . இத் தேவர்க்கு . . . . . **ஸ்ரா** விநி

16. யோகத்துக்கு . . . புகுதந்த பிரமாணம் அந்தரபடுகையில் இப்போது புனப்பிரமாண

17. ம் பண்ண கைக்கொண்ட காசு ரூம் இக்காசு சய்ங இக்காசு நாற்பத்து மூந்றுக்கும் திங்[கள்] காசு ஒந்றுக்கு காலந்

18. திரம்[ம்]* பொலிசை பொலிவதாகவும் பொலிந்த பொலிசையே இந் நிலத்துக்கு சில்வரி பெருவரி அந்தராயம் வெ

19. ட்டிமுட்டை[யாள்] திருவாசல் போந்த குடிமை [ம]ற்றும் எப்பேர் பட்டதுக்கும் உடலாவுதாகவும் இ[ப்ப]ரிசன்றி இந்நிலத்துக்

20. கு சில்வரி பெருவரி வெட்டிமுட்டையாள் அந்தராயம் மற்றும் எப் பேர் பட்டதுக்கும் உடலாவுதாகவும் இ[ப்ப] ரிசன்றி இந்நிலத்துக்

21. திருவாணை புவனமுழுதுடையார் ஆணை [திரு]விரையாக்கலி எந்றும் **ஸபா** விவத்தை பண்ணி ஸபை உள்ளிருந்து

22. பணித்தார் முதற்சேரிக்கு வெல்வெட்டி [திருவெழுத்திட்டுப்] . . . . பணியாலும் . . .

23. டந் பணியாலும் மூன்றா[ஞ்சேரி]க்கு இராயூர் ஐயப்ப படாரந் பட்டந் [ப

24. ட்டந்] பணியாலும் நாலாஞ்சேரிக்கும் [காங்கேய] பட்டந் பணியாலும் ஐஞ்சேரி வட்டமணி திருவிராம [பிள்ளை] பட்டந் ப

25. ணியாலும் ஆறாஞ்சேரிக்கு சிவ[கே]சரி சீக[யி]* லாஸமுடையாந் பட்டந் பணியாலும் ஏழாஞ்செரிக்கு வங்கிபுறத்துப

26. ரமேசுர பட்டந் பணியாலும் எட்டாஞ்சேரிக்கு மாங்களூர்[ர்] விநாயக பட்டந் பணியாலும் ஒந்பதாஞ்சேரிக்கு மாங்

27. களூர் சோணைய பட்டந் பணியாலும் பணியால் புனப்பிரமாண[ம்*] எழுதிநேந் இரும்புதல் [ஊ]ருடையா

28. ந் நாகந் [இளைய்]யாந்னாந **ப்ரமப்பிரியந்** எழுத்து

---

1. இக்கல்வெட்டு கருவறையின் தென்புறம் பொறிக்கப்பட்டிருப்பதாகக் கல்வெட்டு ஆண்டறிக்கை குறிப்பிடுகிறது.
2. குறியீடாகவும் எழுதப்பட்டுள்ளது.

மாவட்டம் : தஞ்சாவூர்
வட்டம் : பாபநாசம்
ஊர் : உடையார் கோயில்
மொழி : தமிழ்
எழுத்து : தமிழ்
அரசு : சோழர்
மன்னன் : மூன்றாம் இராசேந்திரன்

ஆட்சி ஆண்டு : 3
வரலாற்று ஆண்டு : கி.பி. 1249
இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை : 406/1902
முன் பதிப்பு : தெ. இ. க. தொகுதி: 7 எண் : 1039
ஊர்க் கல்வெட்டு எண் : 8

இடம் : அருள்மிகு கரவந்தீஸ்வரர் கோயில் கருவறை வடசுவர் மற்றும் அதிட்டானப் பகுதிகள்.

குறிப்புரை : இரும்புதலான சோழராஜ்யதிலதச் சதுர்வேதி மங்கலத்தார் ஒரு குறிப்பிட்ட அளவு பொன் பெற்றுக்கெண்டு அதன் வட்டி (பொலிசை)க்காக ஒரு குறிப்பிட்ட நிலத்தைக் கோயிலுக்கு வரி நீக்கிக் கொடுத்திருந்தனர். அத்நிலத்தைக் கோயிலார் திருவேகம்பமுடையான் கேரளராயற்கு கொடுத்து குறிப்பிட்ட வரிகள் செலுத்தும்படி செய்த ஆவணமாக (கடையிடு) இக்கல்வெட்டுள்ளது. வரிகளின் பெயர்களும் அவற்றின் நிர்ணயிக்கப்பட்ட அளவுகளும், நிலத்தின் எல்லைகளும் ஸோயிலுக்காகக் கையொப்பமிட்டோர் பெயர்களும் இக்கல்வெட்டில் குறிக்கப்பட்டுள்ளன.

Summary : It is a document (kataiyiṭu) issued by the temple authorities to one Araiyan Tiruvekampamutaiyan alias Keralarayar, fixing land dues of a particular land. The said land was already given as taxfree to the temple towards the interest of certain amount of gold: Tax terms, land boundaries and the signatories of the document recorded in detail.

கல்வெட்டு :

1. ஸ்வஸ்திஸ்ரீ திரிபு[வ]னச்சக்கரவத்திகள் ஸ்ரீ இராஜேந்திரசோழ தேவ[ர்]ற்கு யாண்டு கூவது மீனநா

2. யற்று பூர்வபக்ஷத்து தசமியும் சனிக்கிழமையும் பெற்ற உரோசனி நாள் நித்தவிநோத வளநாட்டு

3. வீரசோழ வளநாட்டு **ப்ரஹ்மதேயம்** ஸ்ரீபூதியான இராசநாராயண சதுர்வேதிமங்கலத்து உடையார் திரு

4. க்கிளாஉடையார் கோயில் ஆதிசண்டேஸ்வர தேவர்கன்மிகளோம் இராரா வளநாட்டு கீழ்வேங்கை

5. நாட்டு பெருநல்லூர் நல்லூர் அரையன் திருவேகம்பமுடையாரான கேரளராயற்கு நாங்கள் கடையீடு குடுத்த

6. பரிசாவது இந் . . . நாயனாற்கு நித்தவினோத வளநாட்டு ஆவூர் கூற்றத்து இரும்புதலான சோழராஜ்ய

7. த்திலத **சதுர்வேதி**மங்கலத்தார் பொன்கொண்டு பொலி[கா]க்கு பொலிவூட்டு ஊற்கீழிறையிலி

8. யாக இவ்வூர் பிடாகை [தென்னெல்]லைக்கு தெற்க்கு பிராணஉபகாரி நல்லூரில் வீரநாராயணவதிக்கு கிழ

9. . . . வாய்க்காலுக்கு தெற்கு . . . . . அ [துண்டத்து]ம் கு துண்டத்தும் ② துண்டத்து

10. . . . [வெ]முத்திட்ட வெண்ணும் அகப்பட்ட [நிலம்] இந்நிலம் [எட்டு மாக்]காணிக் (காணி) அரை[1]

11. . . . பூவணூருடையார் சோழகங்கனார் காணியாய் இன்னிலம் வெண் புர . . . . நாளில் வே

12. ந்து போதுகையில் இந்தப் பூவணூருடையார் சோழ கங்கை

13. ரயர் உறவனிறையாரும் உள்ளிட்டார் பக்கல் . . . கொள்கையில் இந்நிலம் பயிர்ச் செய்யுமிடத்து இறுக்கலாம்படி நீ[ர்]

14. குலை மடையும் இட்டு பயிரும்மேற்றி கடமை இறுக்கிறோம் என்று சொல்லுகையில் இந்நிலம் எட்டு மாக்காணி அரைக்கா[ணி]

15. பசான முதல் நெல்லில் காரில் இறுக்கும் நெல்லுக்கு ஒன்று முக்கால் மறுவில் இறுக்கவும் நீக்கி நி[ன்*]ற நெல்லு ஒரு பூவு

16. கி இறுக்கும்மிடத்து நாட்டுக்கு இட்ட நினைப்பு ஒன்றா[க]வும் நினைப்பு நீக்கின நெல்லில் ஒன்று பாதியாலுள்ள நெல்லு உள்ளூர்

17. ஊர்க்காலாலே தரவிடு பூக்கைச் சிலவாக்கவும் நீக்கி நின்ற நெல்லுக்கு நிலை அகப்படி காசு இடவும் உறைநாழி கோ[யி]ற்றமப் பேறு

18. உள்ளூட்டு கூட்டுவன கூட்டாதொழியவும் திங்கள்த் திருநாள் ஆட்டைத் தி[ரு]நாள்க்கள்ளுக்கும் மைக்கு மாத்தால் முக்குறுணியா

19. க வன்த நெல்லு தரவீடு நெல்லோட கூட்டிச் சிலவாக்குவதாகவும் கூ[ளை]ர கட்டணங்கள்ளுக்கு இடும் வைக்கோல்லும் கற்

20. றையும் தவிரக்கடவதாகவும் இப்படி செய்யுமிடத்து சந்திராதித்யவர் செய்யக்கடவதாகவும் ச[ம்]மதித்துக் கடைஈடு குடுத்தோம் இப்

21. படி செய்யும் மிடத்து இவ்வாண்டு பசான முதல் இறுக்ககடவதாக சம்மதித்து கடைஈடு குடுத்தோம் மி[ப்]

22. பெருநல்லூருடையார் அரை[ய]திருவேகம்பமுடையாரான கேரள ராயர்க்கு இவ்வாதி **சண்டேஸ்வரதேவர்** கன்மிகளோம் இவை இ

23. . . யில் கணக்கு சீபூதி உ[டை]*யாந் திருக்கிளாஉடையான் திருவாய் குலமுடையானான **ஸ்ரீ மாஹேஸ்வர** பிரியன் எழுத்து இப்படிக்கு இவை கோயில் கண

24. [க்கு] சீபூதியுடையான் மாதேவன் [தி]ருக்கிளாவுடையானான . . . யிரப் பிரியன் எழுத்து இப்படிக்கு இவை சை[வா]

25. சார்யம் [செய்வான்] திருக்கிளாஉடையான் மாதேவனான சதாசிவ பட்டன் எழுத்து இப்படிக்கு இவை **சைவாசார்யம்** . . . . [பி]ரயாகை அழகிய [மாதேவபட்டன்] எழுத்து இப்படிக்கு இவை [சைவாசார்யம்] . . . . .

26. பட்டன் எழுத்து இப்படிக்கு இவை த[த*]வகன்மி பஞ்சநெதிவாண பட்டன் எழுத்து இப்படிக்கு இவை இரா(ச)ரா(ச) பட்டன் எழுத்து இப்படிக்கு இவை [தேவ]கன்மி திருக்கிளாவுடைய பட்டன் எழுத்து

---

1. குறியீட்டிலும் எழுதப்பட்டுள்ளது,

த. நா. அ. தொல்லியல்துறை **தொடர் எண் : 50 / 1986**

மாவட்டம் : தஞ்சாவூர்

வட்டம் : பாபநாசம்

ஊர் : உடையார்கோயில்

மொழி : தமிழ்

எழுத்து : தமிழ்

அரசு : சோழர்

மன்னன் : மூன்றாம் இராஜேந்திரன்

ஆட்சி ஆண்டு : —

வரலாற்று ஆண்டு : கி. பி. 13 ஆம் நூற்றாண்டு

இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை : —

முன்பதிப்பு : —

ஊர்க் கல்வெட்டு எண் : 9

இடம் : அருள்மிகு கரவந்திஸ்வரர் கோயில் கருவறை மேற்குப்புற எழுதகப்படை தொடங்கி பட்டிகை வரை.

குறிப்புரை : நித்த வினோத வளநாட்டு பிரம்மதேயம் ஸ்ரீ பூதியான . . . . மங்கலத்து பெருங்குறி மஹாசபை திருக்கிளாவுடையார் கோயில் ஆதிசண்டேஸ்வர தேவர்க்கு வரிநீக்கி ஆவணம் (இறையிலி கைத்தீட்டு) வழங்கிய செய்தி குறிப்பிடப்படுகிறது. உய்யவந்தான் திருச்சிற்றம்பலமுடையானான வீரசோழப் பல்லவரையன் என்பவரிடம் தேவரடியாள் பூமி திருவுடையாளான திருவகம்படி நங்கை என்பவள் ஒரு குறிப்பிட்ட அளவு நிலத்தை விலைக்கு வாங்கி, இக்கோயிலில் இவள் எழுந்தருளுவித்த ஆளுடைய பிள்ளையார், ஆளுடைய நம்பி, அவர்தம் பிராட்டியார், பெரியதேவர், நாச்சியார், உமாமகேஸ்வர தேவர், அவர் நாச்சியார் ஆகிய இறைவர்களுக்குப் பயன்படும் வண்ணம் மகாசபையாரிடம் 250 காசு கொடுத்து அந்நிலத்தை இறையிலியாக்கி வழங்குகிறாள்.

Summary : A dancing girl (devaradiyal), by name Bhumi Tiruvudaiyal alias Tiruvakambadi nangai, purchased a land with certain measurement from Uyyavandan Tiruccirrambalamudaiyan alias Viracolappallavaraiyan and gifted it as tax free land to the temple (Adhicandeswara of Tirukkilavudaiyār). The conversion of the land as tax free was through the perunkuri mahasabhai of brahmadeyam Sri Puti alias . . . . . mangalam, for which she remitted 250 kacu in advance to the Tanattar. The gift was intended for the deities Aludaiyapillaiyar (GnanaSambandar) etc. consecrated by the devaradiyal. The deed is named as Irayili kaittittu.

கல்வெட்டு :

1. . . . . புவியனைத்தும் தாமருவிய குளிர்வெண் குடைத் தரள வெண்ணிலாக் குளிர்வெண்

2. குடை சக்கர கிரி[க்]* கப்புறத்[து]தியங்க தெண்டிரை தடம் பாற்கடல் மீகெழுந்தெந . . . வடி கலி இருள் துரப்ப போராடிய

இப்ரமான இசைவுத்தீட்டு எழுதினேன் ஊர்க்கணக்கு நெற்புக்கை உடையான் நாற்பத்தெண்ணாயிரப் பிரியன் எழுத்து இப்படி இந்நிலம் ஒந்றே யரைக்காணி யரைகாணிக் கீழ் மூன்றுமா வரைக்காணியும் இறையிலி நத்தம் மனை இரண்டும் ஆதி சண்டேஸ்வரதேவர் திரு நாமத்துக்காணியாவதாக [இந்நாயநாருக்கு] இந்நிலமும் மனையும் விற்றுக்[குடுத்]தேன் கோட்டூருடையான் நகரீஸ்வரமுடையான் விசைய கங்கன் எழுத்து இப்படிக்கு இவை அரசூருடையான் அரையன் பெரியவுடையாரான சேரபாண்டியன் தம்பிராநணுக்கன் எழுத்து

5. இப்படி அறிவேன் பூண்டி உடையான் சூரியன் கற்பகத்தாழ்வான் எழுத்து இந்நாயநார் திருக்கோயில் தானத்த[ா*]ரும் கும்பிட்டு எழுந் தருளி இருக்கும் நாநாந்தூர் உடையார் புகலி வேந்தரும் அருளிச் செய்ய கல்வெட்டி வித்தேன் இக்கோயில் தச்சவாசாரியக் காணி உடைய திருவெனப்பேறுடையான் திருவெழுச்சிஅழகியாநாந திருவெனப் பேற்றாசாசிரியனேன் இவை என் எழுத்து

மாவட்டம் : தஞ்சாவூர்
வட்டம் : பாபநாசம்
ஊர் : திருவைகாவூர்
மொழி : தமிழ்
எழுத்து : தமிழ்
அரசு : சோழர்
மன்னன் : மூன்றாம் குலோத்துங்கன்

ஆட்சி ஆண்டு : 33
வரலாற்று ஆண்டு : கி.பி. 1211
இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை : 58/1914
முன் பதிப்பு : —
ஊர்க் கல்வெட்டு எண் : 3

இடம் : வில்வநாத சுவாமி கோயில் - மகாமண்டப வடபுற ஜகதிப்படை (ஊர்க் கல்வெட்டு எண் 2-ஐத் தொடர்ந்து பொறிக்கப்பட்டுள்ளது.)

குறிப்புரை : கல்வெட்டு முற்றுப்பெறவில்லை. அந்தப்புலப்பெருமாளும் உய்யவந்தாளும் திரிபுவனமாதேவிச் சதுர்வேதிமங்கலத்து நிலம் ஒன்றினைத் திருவைகா வுடையார் கோயிலுக்கு விற்று வழங்குகின்றனர்.

Summary : Incomplete Records a sale deed similar to the one mentioned in inscription no. 2 of this village. The individuals involved were the same, but the land mentioned in this inscription was situated in devatanam Tribhuva[na]* madevic caturvedimangalam, and measured three kani- and fraction.

கல்வெட்டு :

1. ஸ்வஸ்திஸ்ரீ திரிபுவநச்சக்கரவத்திகள் மதுரையும் ஈழமுங் கருவூரும் பாண்டியன் முடித்தலையுங் கொண்டு வீரா(அ)பிஷேகமும் விசையா (அ)பிஷேகமும் பண்ணியருளிய ஸ்ரீ திரிபுவனவீரதேவற்கு யாண்டு முப்பத்து மூன்றாவது மிதுந நாயற்று பூர்வ பக்ஷத்து நவமியுந் திங்கள் கிழமையும் [பெற்ற] இரேவதி நாள் வடகரை விக்கி[ர]*ம சோழ வளநாட்டு அண்டாட்டுக் கூற்றத்து திருவைகா . . .

2. அரையன் பொய்யாத்தமுழூரநான [அ]னபாய்யணுக்கற்கு புக்க [அந்தப்புலப்]பெருமாளேனும் என் மகள் கோட்டூருடையான் அரையன் நகரீஸ்வரமுடையாந் விசையகங்கனுக்குப் புக்க உய்ய வந்தாளேனும் இவ்விருவோம் என்னுடன் பிறந்த பாண்டிகுலாசனி வளநாட்டு ஆற்காட்டுக் கூற்றத்து அரைசூருடையான் பெரியவுடையா நான சேரபாண்டியன் தம்பிரானணுக்கரை முதுகண்ணாக கொண்டு நிலவிலை ப்ரமாண இசைவுதீட்டு இற்றை நாளால் நாங்கள் சண்டேஸ்வரப் பெருவிலையாக விற்றுக் குடுத்த நிலமாவது இந்நாய நார் தேவதாநம் திரிபுவ[ந]*மாதேவிச் ச[துர்]*வேதிமங்கலத்து எங்கள் மாதாக்கள் அந்தப்புலப்பெருமா[ள்*] பக்கல் ஸ்ரீதனம் பெற்று [டையேனாய்] என்னுதாயனுபவித்து வருகிற பொத்தகப்படி ரூ இந்நிலம் முக்காணிக் கீழ் இருபத்து நாலு . . . . .

த. நா. அ. தொல்லியல்துறை

தொடர் எண் : 64 / 1986

மாவட்டம் : தஞ்சாவூர்

வட்டம் : பாபநாசம்

ஊர் : திருவைகாவூர்

மொழி : தமிழ்

எழுத்து : தமிழும் கிரந்தமும்

அரசு : விஜயநகரர்

மன்னன் : வீரப்பிரதாபதேவராயர்

ஆட்சி ஆண்டு : —

வரலாற்று ஆண்டு : சகம் 1351; கி.பி. 1429

இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை } 59/1914

முன் பதிப்பு : —

ஊர்க் கல்வெட்டு எண் } 4

இடம் : வில்வநாதசுவாமி கோயில் - மகாமண்டப வடபுறச்சுவர்.

குறிப்புரை : விக்கிரமசோழ வளநாட்டு இன்னம்பர் நாட்டு ஸ்ரீ பராந்தக நாட்டுச் சபை யாரும், வலங்கை இடங்கைச் சாதியிவரும் கூடி, வழுதலம்பேடு உசாவடியில் நாட்டுவரி, இராசகர (அரண்மனை) வரி ஆகியவை குறித்துத் தங்களுக்குள் சம்மதித்து எடுத்த முடிவு குறிப்பிடப்படுகிறது, கன்னடியர் (ஹொய்சளர்) ஆட்சியின் விளைவாக ஏற்பட்ட குழப்பநிலை காரணமாக ஏற்பட்ட சீர் கேட்டினைச் சரிசெய்யுமுகமாக இந்த முடிவு எடுக்கப்பட்டதாகக் குறிப்பிடப் படுகிறது. இராயவிபாடன் என்ற கோலால் அளக்கப்பட்ட ஒரு வேலி நிலத்தைத் தேவதான இறையிலியாக வழங்கிப் பெரியநாட்டார்சந்தியில் வழிபாடு செய்யப் பயன்படுத்துவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டது.

Summary : The Sabhaiyar of Sri Parantakanadu in the sub division of Innambarnadu of the larger politico geographical division Vikkiramacola valanadu, and the people belonging to the right hand and left hand caste assembled and took some decisions regarding the tax payable to the nadu and the palace (nattuvari and iracakaravari). The disturbed conditions due to Kannadiyar (Hoysalas) reign are also mentioned. The arrangements were made for the Periyanattar Sandhi. The gifted land measuring one veli, measured by the 'Irayavibhatan Kol'.

கல்வெட்டு

1. ஸ்வஸ்தி ஸ்ரீ மந்மஹாமண்டலேஸ்வரந் ஹரிஹரராய விபாடந் பாஷைக் குத்த

2. ப்புவராயர் கண்டன் மூவராய கண்டன் கண்டநாடு கொண்டு கொண்ட நாடு கொடாதான்

3. **பூர்வ தக்ஷிண பஸ்சிம** உத்தர சதுஸ்ஸமுத்ராதிபதி ஸ்ரீவீரப்ரதாபதேவ ராயர் **ப்ரிதிவிரா**

4. **ஜ்யம்** பண்ணி அருளாநின்ற **சகாத்தம்** சூகூராகுக்க-ன் மேல் செல்லா நின்ற **ஸௌம்ய ஸம்**வற்சரத்து

5. **வ்ருஸ்சிக** நாயற்று **அபரபக்ஷத்து** தெசமியும் சோமவாரமும் பெற்ற அத்தத்து நாள

6. சுப தி[ன*]த்தி[ல்] விக்கிறமசோழ வளநாட்டு இன்னம்பர் நாட்டு ஸ்ரீ பராந்தக நாடு **ஸ[பயா]**ரும்

7. வலங்கை தொண்ணூற்று எட்டும் இடங்கை தொண்ணூற்று எட்டும் குறைவறக் கூடி நிறைவற நி

8. றைந்து நம்மில் ஒரிமை[1] ஒத்துச் செய்து கொண்ட படி வழுதலம்பேடு உசாவடியில் நாட்டுக்கும் இராச

9. கரம் இறைமுறைமைக்குத் தங்களில் ஒத்து ஒரிமை[1] இட்டுக் கொண்டு கல்வெட்டினபடி ஆலே

10. நம்முடைய நாடு கன்னடிய வர்ணம் ஆனநாள்முதல் சீவிதப்பற்று ஆக நடக்கையில் நடந்த சீவித[க்*]காறர்

11. ஒ[ருத்தர்]காண்ட கரம் ஒருத்தர் கொள்ளாமல் அடை ஓலை ம[றை]ந்து புறவரி கூட்டி அன்னி

12. ய[ாய]ம் செய்து தேசம் பாழாய்ப் போனபடியாலே நம்மில் ஒத்து . . . . [இராசகரம்] இறைமு

13. றைமைக்கும் கல்வெட்டினபடி ஆலே திருவைகாவூர் உடை[ய நயி னார்க்கு]ப் பெரிய

14. நாட்டார்சந்தி அமுது செய்தருள அமுதுபடிக்கு இன்னாட்டு குத் [தொ]கை ஊரில்

15. இராயவிபாடனால் வேலி[யும்] தேவதான இறையிலி ஆக நடக்கக் கடவதாகவும் இன்னாட்டில் தானமானியம் இ

16. றையிலி சந்திறாதித்தவரையும் நடக்கக்கடவது ஆகவும் இன்னாட்டில் இறையிலிபற்றுப் பண்டாரக்கடை சீவிதப்ப

17. ற்று அடைப்பு மத்த குத்தொகை சேர்வை என்று கொள்ளக்கடவது அல்லவாகவும் கடமை கொள்ள அறுதிஇட்

18. ட வகைப்படி காணிஆளர் பேர்க்கு இராசவிபாடனால் அளந்து

19. கு . . . . . கண்ட நிலத்துக்குடி[தீர்வு] இனத்துக்கு நெல் முதலுக்குக் கூட்டும்

20. அரசு பேறு . . . . உட்பட வைய்ப்பு நெல்லு உட்பட வேலி ஒன்றுக்கு நெல்லு

21. ஐம்பதின் கலமும் பணமுதலு . . . காணிக்கை [நெ]ராலைச் சம்மா கம்பட்ட வட்டம் தக

22. னை கலிகால . . . . . பல உபாதியும் உட்பட வேலி ஒன்றுக்கு நெல்லுக்கு முப்பதின் கலமு

23. . . . . ஞ்சைக்கும் தரிசுக்கும் . . . . க்கு வேலி ஒன்றுக்கு நெல்லுக்கு முப்பதின் கலமு

24. ம் பணம் பதினெட்டும் காடுவெட்டு விழல்வெட்டுக்கு வேலி ஒன்றுக்கு நெல்லு இருபதின் கலமும் பணம்

25. இருபத்தெட்டும் பூவுக்கும் இறைப்புப்பற்றுக்கும் வேலி ஒன்றுக்கு நெல்லு இருபதின் கலமும் பணமா

26. க இவ்வகைப்படி நெல்லுக்கு நெல்லும் பணத்துக்கும் பணமும் இறுக்கக் கடவதாகவும் நெல்லு நாட்டுக்காலால் [கு]

27. டிதரவிட்டு ஊருங் கொட்டாரத்திலே அளக்கக் கடவது ஆகவும் புன் பயிர் கமுகு ஒன்றுக்கு ஆயிரத்து அறுநூறு பாக்கு

28. கலவரிசை ஆகக் கொண்டு கொடி நட்டுப் பயிர் கண்ட கமுகு உரு அஞ்சுக்கு அரசுபேறு உட்பட பணம் இட்டு

29. இறுக்கக் கடவது ஆகவும் சுற்று மரத்துக்குக் கடமை இறுக்கக் கடவது அல்லவாகவும் தென்ன மரத்துக்கு

30. மனையுள்க் கண்ட மரம் நீக்கிக் காயாக்கன்று பலமிலி நீக்கி நின்ற மரத்துக்கு நாற்பது காய்க்கு மேற்படக் காச்

31. ச மரம் ஒன்றுக்கு வாச[ல்]பேறு உட்படப் பணம் அரையும் பலாவுக்கு பலமிலி நீக்கி இருபது காய்க்கு . . . . .

32. . . . அரசுப்பேறு காணிக்கை . . . . . நானூற்றுப் பத்தொன்ப துக்கு இதில் ஒன்றின் . . .

33. . . . . கொழுந்துக்கு முதல் . . . . . வாழை கரும்புக்கு அரசுபேறு . . .

34. . . . உபாதியும் உட்பட விலை . . . . . வாழை கரும்புக்குப் பணம் அறுபதும் படுகைக்கு . . .

35. . . . வாழை கரும்புக்குப் பணம் எண்பதும் செங்கழுநீர்க்கு வேலி ஒன்றுக்குப் பணம் . . .

36. . . . . உட்படப் பணம் . .

37. . . . . உட்படப் பணம் முப்பத் . .

38. . . . . பணம் முப்பதும் . .

39. . . . . வேலி கோதும்பை குதம்பை ஏரிவாய் தாங்கல் வாயிலும் . . .

40. . , ... ஆக இவ்வகைக்கு [ஏல்வை] அரசுபேறு காணிக்கை நேரோலையும் . .

41. . . . . கம்பட்டவட்டம் . . . . . கூலி . . . . . ஒன்றுக்குப் பணம் இருபதும் கொள்ளு பயறு . . .

42. ஆமணக்கு . . . . . வகைக்கு வேலி [ஒன்]

43. றுக்குப் பணம் பதிநெ . . எள்ளுக்கு முதல் வரிசையில்

44. முக்காலும் ஆக இ . . . . . வது ஆகவும் . . . . தானத்துக்கு

45. . . . , ... புன்பயிருக்கு வகை . . . . . .

46. க்குப்பத்து . . வரை துண்டம் நெல்லும் பணமு . . . .

47. . . . பா[ர்]வைக்குப் பற்றாத பயிர் மூன்றில் ஒன்று குடிக்கு வாரம் பெறக் கடவது ஆகவும் வாசல்மனைக்கு கொள்

48. ளாத மனை நீக்கி நின்ற மனைக்கு விலை ஆசறு வாசல் பணத் துக்குப் பல உபாதியும் உட்பட நாட்டார் பேர்[க்]

49. கு மனை ஒன்றுக்கு பணம் மூன்றும் தந்திரிமார் பேற்கு மனை ஒன்றுக்குப் பணம் ஒன்று அரையும் [கெ

50. ாண்டு] மக்கள்பேற்கு மனை ஒன்றுக்குப் பணம் ஒன்று அரையும் ஆக இவ்வகைக்கு சா[ே]யப்புக்கு இதில் ஒன்றுபாதியா

51. ய் இறுக்கக் கடவதாகவும் பெற்றமைக்குச் செட்டியள் பேற்கு அரசு பேறு வட்டம் காணிக்கை உட்பட முதல்பேறு

52. க்குப் பேர்ஒன்றுக்குப் பணம் மூன்றும் ஆயத்துக்கு முதல்பேற்கு பேர்ஒன்றுக்குப் பணம் நாலும் கை

53. பெத்த தறி ஒன்றுக்கு பல உபாதியும் உட்படப் பணம் நாலும் ஆடை தறிக்கு இதில் ஒன்றுபாதியும்

54. இருவகை கடையார்பேற்குப் பல உபாதியும் உட்படப் பேர் ஒன்றுக்குப் பணம் மூன்றும் சாலிகர் நிலைத்த

55. றியார் பேற்கு பல உபாதியும் உட்படத்தறி ஒன்றுக்குப் பணம் ஒன்பதும் நியாயத்தார் பேற்கு பல உபாதியும்

56. . . . . ஒன்றுக்குப் பணம் அஞ்சும் மன்றாடிகள் பேர்க்கு பேர் ஒன்றுக்குப் பணம் அரை

57. யும் இறைக்கு தறிக்குப் பல உபாதியும் உட்படதறி ஒன்றுக்குப் பணம் மூன்றும் ஆடைதறிக்கு இதில்

58. [ஒன்று] பாதியும் இறுக்கக்கடவதாகவும் கொல்லன் தச்சன் தட்டான் இவர்கள் பேற்கு கொத்துக் கீற்று அச்சு

59. . . . . உட்படப்பேர் ஒன்றுக்குப் பணம் அஞ்சும் குசவன்பேற்கு திருக்கை ஆயம் உட்பட்ட முதல்

60. . . . . பேர் ஒன்றுக்குப் பணம் அஞ்சும் நாவிதன்பேற்குக் கருவி ஆயம் உட்பட்ட முதலுக்குப் பேர் ஒன்று

61. க்குப்பணம் நாலும் வண்ணான்பேற்கு கல்லாயம் உட்பட்ட முதலுக்கு பேர் ஒன்றுக்குப் பணம் நாலும்

62. [சு]ன்னத்தார் பேற்கு பல உபாதியும் உட்படப் பேர் ஒன்றுக்கு பணம் ஆறும் செக்கு வாணியர்பேற்கு

63. செக்குஆயம் உட்பட முதலுக்கு பணம் இருபதும் குளவடை மடு வடைக்குப் பணம் ஏழும் பறையர் பேர்த்தறி ஒன்றுக்கு பணம் மூன்றும் அடைத்தறிக்கு ஒன்று பாதியு[ம்*]

64. ஒவ்வினைப் பறையர் நீக்கி . . . . வினைப்பறையர்பேற்கு பேர் ஒன்றுக்குப் பணம் அரையும் ஆக இவ்வகைப்படி நீ

65. க்கக் கடவது ஆகவும் சார்வலைக்காரர்பேற்கு . . . கண்டு இறுக்கக் கடவது ஆகவும் படைப்பற்று சீவிதப் பற்றுக்கு

66. . . , . ஒன்று முக்கால் இறுக்கக் [கடவதாகவும்] . . . . . பெருமாள் . . . . . .

67. இராசவிபாடனால் அரை நிலம் திரு[வி]

68. டைஆட்டம் இறையிலி ஆக நடக்க கடவது ஆகவும் இந்தக் கல்வெட்டுப்படி சந்திராதித்தவரையும் நடக்கக் கடவது ஆக

69. வும் இந்த கல்வெட்டுப் படியில் ஒழிந்துமணைந்து[ங்*] கொண்டா ருண்டானால் மண்டலஞ் சேர்ந்த படிச் செய்துகொ[ள்ள]

70. கடவது ஆகவும் இந்த மண்டலத்தில் இயாவர் ஒருவர்க்கு தொகை நடத்த தேவை என்று கொண்டு நிற்கக் கடவது[அ]

71. ல்லவாகவும் . . . நம்மில் ஒரிமை[1] ஒத்துச் செய்து கொண்ட கல்வெட்டுக்கு அகுதம் செய்தாருண்டானால்

72. கங்கைக்கரையிலே காராம்பசுவை கொன்ற பாபத்திலே போகக் கடவத்தன் ஆகவும்.

---

1. 'உரிமை' எனப் படிக்கவும்.

மாவட்டம் : தஞ்சாவூர்
வட்டம் : பாபநாசம்
ஊர் : திருவைகாவூர்
மொழி : தமிழ்
எழுத்து : தமிழ்
அரசு : சோழர்
மன்னன் : மூன்றாம் குலோத்துங்கன்

ஆட்சி ஆண்டு : 20
வரலாற்று ஆண்டு : கி. பி. 1198
இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை : 54/1914
முன்பதிப்பு : —
ஊர்க் கல்வெட்டு எண் : 5

இடம் : வில்வநாத சுவாமி கோயில் – மகாமண்டபத் தென்புறப் பட்டிகை மற்றும் முப்பட்டைக் குமுதம்.

குறிப்புரை : விக்கிரமசோழ வளநாட்டு அண்டாட்டுக் கூற்றத்துத் திருவைகாவுடையார் கோயிலில் கும்பிட்டிருக்கும் "திருமுடியால் நடந்தாள் திருக்குகை" (காரைக் காலம்மையார் பெயரால்அமைந்த மடம்) யில் எழுந்தருளியுள்ள, நானாந்தூர் உடையார் புகலிவேந்தர்க்கு உபயத்திட்டு வழங்கப்படுகிறது. 65 குழி நிலத் திலிருந்து வட்டியாக மட்டும் ஆறுகலனே முக்குறுணி நெல் கிடைக்கிறது.

Summary : It is a gift deed (Ubhayattittu) conferred on Nanandur udaiyar Pukalivendar the pontif of the mutt called "Tirumudiyal nadandal Tirukkugai' (The guha named after the one who walked with her head. This might refer to Karaikkalammaiyar who, out of utmost reverence, walked upside down at Palaiyanur Tiruvalangadu). Land measuring 65 kulis is endowed. Out of the produce, the interest at the rate of one padakku and one nali paddy for one kalam of paddy, had to be utilised for masonry charges.

கல்வெட்டு :

1. ஸ்வஸ்திஸ்ரீ திரிபுவனச்சக்ரவத்திகள் மதுரையும் பாண்டியனை முடித் தலையுங் கொண்டருளிய ஸ்ரீகுலோத்துங்கசோழ தேவற்கு யாண்டு

இருபதாவது விக்கிரமசோழ வளநாட்டு அண்டார்ட்டுக் கூற்றத்து திரு[வைகா]வுடையார் . . . . . காரியன் செய்வாரும் ஸ்ரீ மாஹேஸ்வரக் கண்காணி செய்வாரும் தேவக[ன்]மி கோயில் கணக்கனும் இவ்வனை வோம் இந்நாயநார் திருக்கோயில் கும்பிட்டு இருக்கும் ஆண்டார் நாநாந்தூர் உடையார் புகலிவேந்தற்கு உபையத்தீட்டுக் குடுத்த பரிசாவது இ[வர் எழுந்]தருளியிருக்கிற திருமுடியால் நடந்தாள் திருக் குகை

2. கீழைத் திருவீதியில் கீழ்சிறகில் ச[ந்]நதி திருக்குளத்துக்கு வடக்கு திருவீதிக்குக் கிழக்கு வடபாற்கெல்லை நாநாந்தூர் உடையார் இந்மையே தருவார்[1] மனைக்குத் தெற்கு கீழ்பாற்கெல்லை கழுகு திரு[ந*]ந்தவனத்துக்கு மேற்கு யிப்படி பெருநான்[கெல்லை] . . . . . இக்குழி அறுபத்தஞ்சுக்கும் ஆட்டைக்கு ஸ்ரீபண்டாரத்து இறுக்கக் கடவதான இந்நெல் அறுகலநே முக்குறுணியும் ஆட்டைக்கு இறுக்கு மடத்து[2] இந்நெல்லுக்கு உபையய பொலிசை செல்வுதாக இல்வாட்டை சித்திரை மாஸத்து ஆட்டைக்குக் கலத்துக்குப் பதக்கு நாழி நெல்லு பொலிசை

3. பொலிவதாக . . . . . இந்நெல்லு முப்பதின் கலமும் இந்நாயநார் கோயில் நி[ரு*]த்த மண்டப திருக்கற்றளி திருப்பணி வடக்கில் . . . . . இத்திருப்பணி செய்கிற தச்சற்கு பணிக்கூலிக்கு சிலவாக குடுத்து இந்நெல்லால் வந்த பொலிசை நெல் அறுகலநே முக்குறுணியும் ஆட்டைக்கு இக்குகைக்கு இதுவே இறுப்பாவதாகவும் இப்படி சந்ராதித் தவரை செல்வதாகவும் இக்குகை இவற்கும் இவர் சந்தாநத்தில் உள்ள மாஹேஸ்வரற்கு[ம்*] இப்படி ஸெ(ா)ம[மா]வதாகவும் இக்குகையில் மேநோக்கின மரமும் கீழ் நோக்கின கிணறு எற்பேர்ப்பட்ட ஊ[பாதி] களும் அனுபவித்து

4. . . . . ராக இப்படி சந்ராதித்தவரையும் செல்வதாக இத்திருக் கோயில் திருக்கற்றளியிலே [கல்வெட்டி]க் கொள்ளக்கடவதாகச் சொன்னோம் இக்கோயில் தானத்தோம் இவ[ர்*]கள் அருளிச்செய்ய இவ்வுபைய தீட்டு எழுதினேன் இக்கோயில் கணக்கு வைகாவூருடை யான் திருவைகாவுடையநான திருவகம்படிப்பிரியன் எழுத்து இப்படிக்கு இவை இக்கோயில் கணக்கு ஆதனூருடையான் தேவர்கள்நாதன் திருச்சிற்றம்பலமுடையானேன் இவை என் எழுத்து இப்படிக்கு இவை இக்கோயில் தேவகன்மி [வையகளத்தூர்] பட்டன் எழுத்து இப்படிக்கு இவை இக்கோயில்

5. ஸ்ரீமாஹேஸ்வரக் கண்காணிக் கணக்கு பருத்திக்குடையான் திருவைகாவுடையான் எழுத்து இப்படிக்கு இவை ஸ்ரீமாஹேஸ்வரக் கண்காணி அடையதிருவுத்தரனேன் இவை என் எழுத்து இப்படிக்கு இக்கோயில் ஸ்ரீகாரியம் கருப்புடையான் ஆற்காட்டு வேளான் எழுத்து இப்படி அறிவேன் இக்கோயில் சைவாசாரியம் புல்லாலி உய்யக்கொண்டான் திருச்சிற்றம்பலமுடையான் பட்டனேன் இப்படி அறிவேன் இக்கோயில் பூஜிக்கு நம்பிமாரில் அரணைப்புறத்து ஆளுடையாந் பட்டனேன் இந்நாயநார் திருக்கோயில் தானத்தார் அருளிச் செய்ய இவ்வுபையதீட்டுக் கல்வெட்டி வித்தேன்

6. இக்கோயில் தச்சவாசாரியக் கா[ணியு]டைய திருவெளப் பேறுடையான் திருவெழுச்சி அழகியான் திருவெனப் பேற்றாசாரியனேன் இவை என் எழுத்து

---

1. ''இம்மையே தருவார்'' என்று படிக்கவும்.
2. ''இறுக்குமிடத்து'' என்றுபடிக்கவும்.

த. நா. அ. தொல்லியல் துறை

தொடர் எண் : 66/1986

மாவட்டம் : தஞ்சாவூர்

வட்டம் : பாபநாசம்

ஊர் : திருவைகாவூர்

மொழி : தமிழ்

எழுத்து : தமிழ்

அரசு : சோழர்

மன்னன் : —

ஆட்சி ஆண்டு : 7

வரலாற்று ஆண்டு : 13-ஆம் நூற்றாண்டு

இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை } 55/1914

முன் பதிப்பு : —

ஊர்க் கல்வெட்டு எண் } 6

இடம் : வில்வநாதசாமி கோயில் - மகாமண்டப மேற்குப் புறச்சுவர்.

குறிப்புரை : துண்டுக் கல்வெட்டு. தந்தையுடைய மரணத்துக்குப் பின்னர் அவர் காலத்திய செய்தி தெரிவிக்கப்படுகிறது [பர]வை சுற்று பூண்டிஉடையான் தில்லை நாயகன் கணவதிநம்பியான மதுராந்தகன் இச்செய்தியுடன் தொடர்புடையவன் எனத் தெரிகிறது.

Summary : Fragmantary inscription. Seems to be a gift of some property (details lost). bequeathed by a father. Thillainayakan Kanavati Nambi alias Madurantaka . . . of [Para]vaicurru Pundi is mentioned.

கல்வெட்டு :

1. [யா]ண்டு ஏழாவது விக்கிரமசோழ வளநாட்டு அண்டாட்டுக் கூற்றத்து உ . . . .

2. வைசுற்று பூன்டிஉடையான் தில்லைநாயகன் கணவதிநம்பியான மதுராந்தக . . .

3. [கு]டுத்த பரிசாவது இவன் பிதாக் கொண்டுடையராய் இவர் அபாபத்தில் . . .

மாவட்டம் : தஞ்சாவூர்
வட்டம் : பாபநாசம்
ஊர் : திருவைகாவூர்
மொழி : தமிழ்
எழுத்து : தமிழ்
அரசு : சோழர்
மன்னன் : இரண்டாம் இராஜராஜன்

ஆட்சி ஆண்டு : 17
வரலாற்று ஆண்டு : கி.பி. 1163
இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை : 53/1914
முன் பதிப்பு : —
ஊர்க் கல்வெட்டு எண் : 7

இடம் : வில்வநாத சுவாமி கோயில் - மகாமண்டபத் தென்புறச்சுவர்.

குறிப்புரை ; விக்கிரமசோழ வளநாட்டு அண்டாட்டுக் கூற்றத்து உடையார் திருவைகாவு டையார் கோயில் தானத்தார்கள் வசம், அணுக்கியார் அனங்கபதாகையார் மகள் உடையநாச்சி என்பவர், தாம் எழுந்தருள்வித்த நித்தவிநோத கல்யாணசுந்தர தேவர்க்கும் நாச்சியார்க்கும் திருப்பணி செய்வதற்காக 200 காசு வழங்குகின்றார். இக்காசுக்கு ஒரு மாதத்திற்கு ஆறேகால் காசு வட்டி யாகக் கிடைப்பதால், இவ்வட்டிக் காசுக்குச் சமமான அளவு அரிசி, கறியமுது உள்ளிட்ட வியஞ்சனம், வெற்றிலை, பாக்கு ஆகியனவற்றைக் கோயில் ஸ்ரீபண்டாரத்தில் செலுத்தத் தானத்தார் ஒப்புகின்றனர்.

Summary : Udaiyanacci, daughter of Anukkiyar Anangapatakaiyar installed the deity Nittavinoda kalyanasundara devar and his consort in the temple and deposited 200 kasus with officials of the temple (tanattar). The interest for the capital of 200 kasus is worked out as six and a quarter kasus per month. The tanattar agree to supply rice, dish inclusive of pepper, betel leaves and areca nut daily at the temple treasury, to be offered to the deities.

கல்வெட்டு :

1. ஸ்வஸ்திஸ்ரீ பூமரு[விய திருமாதும்] புவிமாதும் ஜயமாதும் நாமருவிய கலைமாதும் புகழ்மாதும் நயந்து புல்க அருமறை வி

2. தி நெறியனைத்து[ந் தழைப்ப] வருமுறை உரிமையில் மணிமுடி சூடிச் செங்கோல் சென்று [திசைதொ]றும் வளற்ப்ப வெங்கலி நீ

3. க்கி மெய்யறந் தழைப்ப கலிங்கமெரியக் கட(ல்)மலை நடாத்தி வலங் கொள்ளாழி வரையாழி நட[ப்ப இரு]சுடரளவும் ஒருகுடை நிழற் கீழ் செ

4. ம்பொன் வீரஸிம்ஹாஸநத்து புவனமுழுதுடையாளொடும் வீற்றிருந் தருளிய கோப்பரகேசரி வந்மரான திரிபுவனச்சக்கரவத்திகள் ஸ்ரீ ராஜ ராஜதேவற்கு

5. யாண்டு ௰எ-வது விக்கிரமசோழ[வளநாட்டு] அண்டாட்டுக் கூற்றத்து உடையார் திருவைகாவுடையார் கோயில் ஸ்ரீ மாஹேஸ்வர கண்காணி செய்வார்க

6. ளும் ஸ்ரீகாரியம் செ[ய்*]வார்களும் தேவர் சந்மிகளும் கோயில் கணக்கனும் உள்ளிட்ட தாநத்தோம் அணுக்கியார் அனங்கபதாகையார் மகள் உடைய

7. [நாச்சி] இக்கோயிலில் எழுந்தருளிவித்த நித்தவிநோத [கல்]லியாண சுந்தர தேவற்கும் நாச்சியாற்கும் அமுதுபடிக்கும் விஞ்சனத்துக்கும்

8. . . . [யமுதுக்கும்] இவள் ஒடுக்கிந காசு உள இக்காசு இருநூறும் தி[ருப்பணிக்கு] உடல்லாக கைக்கொண்டு [காசு ஒன்றுக்கு நியதி] அரைக்கால் சின்னம் பலிசை

9. யாக[மாஸம் ஒன்றுக்கு முதல்லாங் காசு ஆறேகாலுக்கும் . . [நெலும்] நிரவி இமாஸ முதல் நாள் ஒன்றுக்கு அரிசி . . று நாழியும் [கறி]ய

10. முது உட்பட்ட விஞ்சநம் அடைக்காயமுது இலையமுதுகழும் ஸ்ரீ[பண்டாரத்]திலே சந்திராதித்தவற் செலுத்தக் கடவோமாக இப்படி உபைய[ஞ் செய்]து குடுத்தோம் இ

11. ந்த உடைய நாச்சிக்கு இத்தாநத்தோம்

மாவட்டம் : தஞ்சாவூர்

வட்டம் : பாபநாசம்

ஊர் : திருவைகாவூர்

மொழி : தமிழ்

எழுத்து : தமிழ்

அரசு : சோழர்

மன்னன் : இராஜராஜன்

ஆட்சி ஆண்டு : 7

வரலாற்று ஆண்டு : கி.பி. 12–13 - ஆம் நூற்றாண்டு

இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை } 52/1914

முன் பதிப்பு : —

ஊர்க் கல்வெட்டு எண் } 8

இடம் : வில்வநாத சுவாமி கோயில் - மகாமண்டபத் தென்புற ஜகதி

குறிப்புரை : திருவைகாவுடையார் கோயிலில் எழுந்தருள்விக்கப்பட்ட திருமாளிகைப் பிள்ளையார் என்ற இறைத் திருமேனிக்கு மூன்று சந்திவிளக்குகள் எரிப்பதற் காக பழவாலங்குடியுடையார் நக்கன் இராமன் என்பவர் சிவப்பிராமணர்கள் வசம் பொன் வழங்குகிறார். அப்பொன்னின் வட்டியால் விளக்கெரிக்கச் சிவப்பிராமணர்கள் ஒப்புகின்றனர்.

Summary : Nakkan Iraman of Palavalangudi in Vilainadu in Jayangondacola valanadu, deposits gold with the Sivabrahmanas of the temple stipulating that the interest which accrues out of the capital should be utilised for three Sandhivilakkus (twilight lamps) to be burnt before the deity "Tirumalikaippillaiyar" installed in the temple of Tiruvaikavudaiyar.

கல்வெட்டு :

1. திரிபுவநச்[சக்]கரவர்த்திகள் ஸ்ரீராஜராஜ தேவர்க்கு யாண்டு ஏழாவது விக்கிரமசோழ வளநாட்டு அண்டாட்டுக் கூற்றத்து

2. உடையார் திருவைகாவுடையார் கோயிலில் எழுந்தருளிவித்த . . . திருமாளிகைப் பிள்ளையார்க்கு ஜயங்

3 கொண்டசோழ வளநாட்டு விளைநாட்டுப் பழவாலங்குடிப் பழவாலங் குடையான் நக்கன் இராமன் பக்கல் முப்பது

4. வட்டத்துச் சிவப்பிராமணரோம் பொந் கொண்டு [பொலிசைக்கு] சந்திராதித்தவற் செலுத்தக் கடவோமாக வைத்த ஸந்தி ஈக்கு விளக்கு ச்ஆக ஸந்தி ஈக்கு விளக்கு மூன்று

மாவட்டம் : தஞ்சாவூர்
வட்டம் : பாபநாசம்
ஊர் : திருவைகாவூர்
மொழி : தமிழ்
எழுத்து : தமிழ்
அரசு : சோழர்
மன்னன் : இரண்டாம் குலோத்துங்கன்

ஆட்சி ஆண்டு : 5
வரலாற்று ஆண்டு : கி.பி. 1138
இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை : 49/1914
முன் பதிப்பு : —
ஊர்க் கல்வெட்டு எண் : 9

இடம் : வில்வநாத சுவாமி கோயில் - மகாமண்டபத் தென்புறச் சுவர்.

குறிப்புரை : இரண்டாம் குலோத்துங்க சோழனின் மெய்க்கீர்த்திப்பகுதி - கோவிராஜகேசரி என்பதற்குப் பதிலாகக் கோப்பரகேசரி எனத்தவறாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. நாட்டுப் பிரிவுப் பெயருக்குப் தொடரவில்லை.

Summary : The inscription starts with the meykkirtti of Kulottunga Cola II, proceeds to mention the politicogeographical division and stops abruptly.

கல்வெட்டு :

1. ஸ்வஸ்திஸ்ரீ பூமேவு வளர் திருப்பொந்மாது புணர நாமேவு கலை
2. மகள் நலம் பெரிது சிறப்ப விசையன் மா
3. மகள் வெல்புயத்திருப்ப இசையுஞ் செல்வி யெண்டிசை விளங்க நிருபர்
4. வந்திறைஞ்ச நீண்ணில மடந்தையை திருமண
5. (மண)ம் புண[ர்*]ந்து சீர்வள[ர்*] திருமணிமுடி கவித்தென அணிமுடி
6. சூடி மல்ல[ல்*] ஞாலத்து பல்லுயிற்கெல்லா மெல்லையில்
7. லின்பம் மியல்வினில்லெய்த வெண்குடை நீழல் செங்கோல்லோச்சி
8. வாழியூழி யாழி நடப்ப செம்பொன் வீரசிங்காஸனத்து பு
9. வனமுழுதுடையாள்ளொடும் வீற்றிருந்தருளிய கோப்பரகேசரி பந்ம
10. றா(ா)ன திரீபுவன[ச]க்கரவத்திகள் ஸ்ரீகொலோத்துங்க சோழ தேவற்கு
11. யாண்டு ஐஞ்சாவது வடகரை விக்கிரமசோழ வளநாட்டு இன்னம்ம
12. நாட்டு[1] உடையார் திருவைகாவுடையாற்கு ராஜராஜ வளநாட்டு
13. . . . . நாட்டு . . . . ருடையான் . . .

1. "இன்னம்பர் நாட்டு" என்றிருக்க வேண்டும்.

மாவட்டம் : தஞ்சாவூர்
வட்டம் : பாபநாசம்
ஊர் : திருவைகாவூர்
மொழி : தமிழ்
எழுத்து : தமிழ்
அரசு : சோழர்
மன்னன் : முதற் குலோத்துங்கன்

ஆட்சி ஆண்டு : 40
வரலாற்று ஆண்டு : கி.பி. 1110
இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை } 51/1914
முன் பதிப்பு : —
ஊர்க் கல்வெட்டு எண் } 10

இடம் : வில்வநாத சுவாமி கோயில் - மகாமண்டபத் தென்புறச் சுவர்.

குறிப்புரை : ராஜராஜ வளநாட்டுப் பரவைச்சுற்றுப் பூண்டி உடையான் சூரியன் பவழக் குன்றினாரான வன்னாடுடையார், இக்கோயில் செங்கற்கோயிலாக இருந்த நிலையை மாற்றிக் கற்றளியாகக் கட்டி, களப்பாக்குடியில் நிலமும் அதன் மூலம் 1200 சின்னம் நெல்லும் தேவதானமாக வழங்குகிறார்.

Summary : Records the conversion of the brick structure of the temple into a stone and land was gifted to it. The individual responsible for this munificence was one Suriyan Pavalakkunrinar alias Vannadudaiyar of Paravaiccurruppundi of Rajaraja Valanadu.

கல்வெட்டு :

1. **ஸ்வஸ்திஸ்ரீ** புகழ்மாது விளங்கி ஜெயமாது விரும்ப நிலமகள் நிலவு மலர் மகள் புணர உரிமையிற் சிறந்த மணிமுடி சூடி மீநவர் நிலை கெட வில்லவர் குலை

2. தர ஏனை மன்நவர் இழியலுற்றிழிதரத் திக்கனைத்துந் தன் சக்கர நாடாத்தி வீர ஸிங்காஸநத்து அவனிமுழுதுடையாளொடும் வீற்றிருந் தருளிய கோப்பர[ர]

3. கேசரி பற்மரான திரிபுவனச் சக்கரவர்த்திகள் ஸ்ரீகுலோத்துங்கசோழ தேவற்க்கு யாண்டு நாற்ப்பதாவது ராஜராஜ வளநாட்டுப் பரவைச் [சுற்று]ப் பூ

4. ண்டி உடையான் சூரியன் பவழக்கு[ன்*]றினாராந வன்னாடுடையார் உலகுய்யவந்தசோழ வளநாட்டு அண்டாட்டுக் கூற்றத்து உடையார் திருவைகாவுடை

5. ய மஹாதேவர் கோயில் முன்பு இஷ்டிகையாய் ஜீ[ர்*]ந்நித்தமையில் இக்கோயில் இழிச்சித் திருக்கற்றளியாக செய்கைய்க்கு யாண்டு முப்பத்திரண்டாவ

6. து விண்ணப்பஞ் செய்து இஷ்டிகை இழிச்சிவிச்சு திருக்கற்றளியும் திருவிடைக்கட்டும் திருமண்டபமும் செய்வித்து இத்தேவர் பழந் தேவதாநம[ா]

7. ந நிலத்து நெல்லுத் திருப்படி மாற்றுக்கும் நிமந்தத்துக்கும் போதாமை யில் தேவதாநம் பெறுகைக்கு விண்ணப்பம் செய்து உலகுய்யவந்த சோழ வள

8. நாட்டு விறைக்கூற்றத்துக் களப்பாக்குடி பொத்தகப்படி நிலம் இருபதே சிந்நத்தால் நெல்லு ஆயிரத்து இருநூற்றுச் சிந்நமும் தேவதாநம[ா]

9. க இடுவித்து நிவந்தஞ் செல்லப் பண்ணுவித்தார் ராஜராஜ வளநாட்டுப் பரவைச்சுற்றுப்பூண்டி உடையார் சூரியன் பவழக்குன்றினாரா

10. ந வன்னாடுடையார் இவர் ெ[சா]ல்ல இத்திருப்பணி செய்வித்தார் இக்கோயிலில் ஸ்ரீமாயேஸ்வரர் திருவெண்காடுடையார் திருச்சிற்றம்பல முடையா

11. னான தந்தை விரதமுடி[த்த]ார் உ

மாவட்டம் : தஞ்சாவூர்

வட்டம் : பாபநாசம்

ஊர் : திருவைகாவூர்

மொழி : தமிழ்

எழுத்து : தமிழ்

அரசு : பல்லவர்

மன்னன் : நந்திவர்மன்

ஆட்சி ஆண்டு : 22

வரலாற்று ஆண்டு : கி.பி. 9 ஆம் நூற்றாண்டு*

இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை } 48/1914

முன் பதிப்பு : —

ஊர்க் கல்வெட்டு எண் } 11

இடம் : வில்வநாதசுவாமி கோயில் - மகாமண்டபத் தென்புற ஜகதிப்படை

குறிப்புரை : இக்கல்வெட்டு, கி.பி. 12ஆம் நூற்றாண்டுக்குரிய எழுத்தமைதியில் அமைந்துள்ளது. 9ஆம் நூற்றாண்டில் ஆட்சி செய்த நந்திவர்மபல்லவனால் வழங்கப்பட்ட கொடையைக் குறிப்பிடும் இக்கல்வெட்டு, சோழர் காலத்தில் பொறிக்கப்பட்டுள்ளது. எனவே, முதலாம் இராஜேந்திரன் காலத்தில் முதன் முதலாக தோற்றுவிக்கப்பட்ட திரிபுவனமாதேவிச் சதுர்வேதிமங்கலத்துக் குரியவராக இவ்வூர் சபையார் குறிக்கப்படுகின்றனர்.

Summary : This inscription is a copy of a 9th century record, engraved in the characters of the 12th century A.D. The name of the king is mentioned as 'Nandipanmarajan' probably Nandivarmapallava III. The name Tribhuvanamadevic caruppetimangalam which was created by Rajendra Cola I is mentioned while reengraving this inscription as a fault. The authorities responsible for burning the perpetual lamp as well as offering sacred food are mahasabaiyar.

கல்வெட்டு :

1. ஸ்வஸ்தி ஸ்ரீ நந்[தி]ப[ந்*]மராஜற்கு யாண்டு இருபத்திரண்டாவது திருவைய்காவு

2. டைய மஹாதேவற்குத் திருநொந்தா விளக்கு[க்கு*]ம் அமுதுபடிக்கும் உபையம் வை

3. ய்க்க சந்திப்பொலியா[க] திரிபுவனமாதேவிச் சருப்பேதிமங்கலத்

4 து ஸபையார் பக்கல் பொன் குடுத்துப் பொலிகூலிக்குச் செல

5. வாக காசு கொள்ளா ஊற்கீழ் இறையிலியாக மனலீடில் விட்ட வே[லி]

6. யாகக் கொண்டுவிட்ட வண்ணக்கவிளாகம் நிலம் க . . இன்னிலம் ஒன்ற

7. ரையு[ம்*] இறக்காதாந் திருவடி இரண்டு மெந்தலை மேலின இது
இறக்கு[வா]ந் தங்க

8. ளம்மைக்குத் தாநேய் மினாளன் இது கல்வெட்டுப் படி உ

---

* கல்வெட்டுச் செய்தி 9ஆம் நூற்றாண்டினது. ஆனால் பொறிக்கப்பட்ட காலம் கி.பி. 12ஆம் நூற்றாண்டு.

த. நா. அ. தொல்லியல் துறை

தொடர் எண் : 72 / 1986

மாவட்டம் : தஞ்சாவூர்

வட்டம் : பாபநாசம்

ஊர் : திருவைகாவூர்

மொழி : தமிழ்

எழுத்து : தமிழ்

அரசு : சோழர்

மன்னன் : இரண்டாம் இராஜராஜன்

ஆட்சி ஆண்டு : 15

வரலாற்று ஆண்டு : கி.பி. 1161

இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை } 50/1914

முன் பதிப்பு : —

ஊர்க் கல்வெட்டு எண் } 12

இடம் : விஸ்வநாதசுவாமி கோயில் - மகாமண்டபத் தென்புறச்சுவர்.

குறிப்புரை : திருவைகாவுடையார் கோயிலில் மாதத்தின் முப்பது நாள்களும் பூசை செய்யும் காணி(உரிமை)யுடைய சிவப்பிராமணர்கள், கோயில் தேவரடியாரான தாயெனக்கொண்டாள் சடைமேலிருந்தாளான பதினெண்ணாயிர நங்கை யிடம் 30 காசு பெற்றுக் கொண்டு, அதன் வட்டித் தொகையில் ஒரு நந்தா விளக்கு எரிக்கும் பொறுப்பை ஏற்கின்றனர்.

Summary : The Sivabrahmanas of the temple of Tiruvaikavudaiyar, who had the right of conducting pujas on all the days of a month, accept the responsiblity of burning one perpetual lamp, out of the interest that accrues to the capital of 30 kasus, gifted for this purpose, by one Tayenakkondal Cadaimelirundal alias Padinennayiranangai, a danseuse belonging to the temple.

கல்வெட்டு

1. ஸ்வஸ்திஸ்ரீ பூமருவிய திருமாதும் புவிமாதும் செயமாது[ம்*] நாமருவிய கலைமாதும் புகழ்மாதும் நயந்து புல்க அருமறைவி

2. தி நெறியநைத்தும் தழைப்ப வருமுறை உரிமை மணிமுடிசூடி திங்கள் வெண்குடை திசைகளிறெட்டுந் தங்கு தனிகூடன் ▒தானென வி

3. ளங்க கருங்கலி பட்டியை செங்கோல் துரப்ப பொருங்கதி[ரே]ழ் பு[ல] வளத்துடன் வர வில்லவரிட்ட மீனவ சிங்கணர் பல்லவ[ர்]

4. நுதலியர்[1] வா[ழ்*]த்திப்பணிய எண்ணருங் கற்பில் மண்ணகம் புரந்து செம்பொன் வீரசிங்காஸநத்[து] புவநமுழுதுடையா

5. ளொடும் வீற்றிருந்தருளிய கோப்பகேசரி பந்மராந திகிபவநச் சக்கர வத்திகள்[2] ஸ்ரீ இராஜராஜதேவற்கு யா

6. ண்டு ய்கு[3]ஆது விக்கிரமசோழ வளநாட்டு அண்டாட்டுக் கூற்றத்து உடையார் திருவைகாஉடையார் கோயில் முப்பது வட்டத்து

7. சிவப்பிராமணரோம் இக்கோயில் தேவரடியாள் தாயெந[க்]கொண்டாள் சடைமேலிருந்தாளாந பதிநெண்ணாயிரநங்கை பக்கல்

8. நாங்கள் கொண்டகாசு கூ இக்காசு முப்பதுக்கும் பொலிகூலிக்கு செலவாக யாண்டு ய்க ஆவது அற்பிகை விஷூ முதல் எரிக்கக் கடவோ

9. மாந திருனுன்தாவிளக்கு க இத்திருனுன்தாவிளக்கு ஒந்றும் ஸன்திராதித்த வரை எரிக்கக் கடவோமாத[4] ஸம்மதித்தோம்

10. முப்பது வட்டத்து சிவப்பிராமணரோம் இது [பன்மாஹேஸ்வர இ[ர*] க்ஷை]

---

1. "முதலியர்" எனப் படிக்கவும்.
2. "திரிபுவநச்சக்கரவர்த்திகள்" எனப் படிக்கவும்.
3. ஆண்டறிக்கையில் 11 என உள்ளது.
4. "கடவோமாக" எனப் படிக்கவும்.

மாவட்டம் : தஞ்சாவூர்
வட்டம் : பாபநாசம்
ஊர் : திருவைகாவூர்
மொழி : தமிழ்
எழுத்து : தமிழ்
அரசு : சோழர்
மன்னன் : —

ஆட்சி ஆண்டு : —
வரலாற்று ஆண்டு : 12ஆம் நூற்றாண்டு
இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை } —
முன்பதிப்பு : —
ஊர்க் கல்வெட்டு எண் } 13

இடம் : வில்வநாதசுவாமி கோயில் - முதற் கோபுர வாயில்.

குறிப்புரை : துண்டுக் கல்வெட்டுகள். ஒரு துண்டுக் கல்வெட்டில் "உடையார் சுங்கந் . . . .' என்ற குறிப்பு காணப்படுகிறது. இது சுங்கந்தவிர்த்தருளிய முதற்குலோத்துங்க சோழனைக் குறிக்கக்கூடும்.

Summary : Fragmentary inscriptions. The names of individuals Nulambadarayan a dignitory, Neriyudai (muvendavelan), a Tirumantiraolai, Candeswara nambi and Aritannaludaiyan of Tirukkottiyur are mentioned.

கல்வெட்டு :

I

1. யாய் இராராப் பெருந் . . .
2. டி நாள் நூற்றொருபத் . . .
3. காணிக்கும் இவை புரவ[ரி]
4. இவை நுளம்பாதராயன் எழுத்து இவை . . .

II

1. து நாள் இருபத்தைஞ்சினாலும் . . .
2. ளில் பல ஊர்களிலும் உடையார் சுங்கந் . . .

III

1. களிலும் படுகை ஆக்கி விளை நிலமும் கமுகும் . .

2. விலை மதித்த காசுக்கு இராஜராஜப் பெருவிலை விற் . . .

3. நாட்டு விற்கிற நிலத்துக்கு திருமந்திர ஓலை நெறியு[டை] . . .

IV

1. . . . . யாண்டு பதின் ஒன்றாவது குலோத்துங்க சோழ வ . . .

2. வது அளவில் நீங்கலா . . .

3. . . லூர் திருவுடை மகாதேவர் கோயில் ஆதிசண்டேசுர தே . . . .

இடம் : அம்மன் சன்னதி-துர்க்கை கோட்ட வேதிகை.

V

1. . . . . பின்னி சண்டேசுரநம்பியும் திருக்கோட்டியூர் ஆரிதந் னாளுடையான் யென் பற்று . . .

தொடர் எண் : 66/1986

மாவட்டம் : தஞ்சாவூர்

வட்டம் : பாபநாசம்

ஊர் : சக்கரப்பள்ளி

மொழி : தமிழ்

எழுத்து : தமிழ்

அரசு : சோழர்

மன்னன் : முதல் இராஜராஜன்

ஆட்சி ஆண்டு : 3*

வரலாற்று ஆண்டு : கி.பி. 988

இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை } 308/1966

மூன் பதிப்பு : —

ஊர்க் கல்வெட்டு எண் } 1

இடம் : சக்ரேஸ்வரர் கோயில் - அந்தராளத் தென்புறச் சுவர்.

குறிப்புரை : கிழார்க் கூற்றத்து அகழிமங்கலத்துச் சபையார், அவ்வூரைச் சேர்ந்த திருச்சக்கரப்பள்ளியில் வெட்டக்குடையான் ஆதித்தன் சூர்யனான செம்பியன்பொய்கை நாடுகிழவன் எடுப்பித்த சூர்யதேவர்க்கு இறையிலி நிலம் வழங்கியதையும், அமுதுபடிக்கு ஏற்பாடு செய்ததையும் குறிக்கிறது, சபை நிர்வாகத்தின் கீழ் ஊர் அமைந்திருப்பதை அறியமுடிகிறது. பொன் மாளிகைத் துஞ்சின தேவரான சுந்தரசோழ தேவரின் 3 ஆவது ஆண்டில் காவிரியில் வெள்ளம் ஏற்பட்டுத் திருச்சக்கராப்பள்ளியில் கரையுடைந்து பயிர் நிலம் வீணான செய்தியும் உள்ளது.

Summary : Records the gift of land to Surya deva, a diety set up by Adittan Suryan alias Sembian Poykainadu kilavan for daily offerings. The reference for the 'Ur' which was administered by 'Sabai' is known by this record. Incidently it refers to the flood which occured during the 3rd regnal year of Sundara Chola (Pon maligai tunjina devar) and destroyed the cultivated lands with boundaries.

கல்வெட்டு

1. ஸ்வஸ்திஸ்ரீ கோ இராஜ

2. கேஸரி பந்ம[ர்']க்கு யாண்டு[ஈ]

3. ஆவது கிழார்க் கூற்றத்து ப்ர

4. ஹ்மதேயம் அகழிமங்கலத்து ஸபை

5. யோம் எங்களூர் திருச்சக்கரப்பள்ளியில்

6. வெட்டக்குடையான் ஆதித்தன் ஸூர்யனான செ

7. ம்பியன் பொ[ய்*]கைநாடுகிழவன் எடுப்பித்த

8. ஸூர்யதேவர் கோயிலில் ஸூர்யதேவர்க்கு

9. [ச]ந்தராதித்தவல் இறையிலி நாங்கள் கு

10. டுத்த நிலம் இவ்வூர்க் கீழ்பிலாற்று

11. . . . . மணலிட்டு புன்செய்யாய்

12. க் கிடந்த . . . . .ழக்கு இன்னிலம் கீழ்பாற்க்கெ

13. ல்லை மங்க . . . . . நிலத்துக்கும் புள்ளம

14. ங்கலத்து [நிலத்துக்கும் மேற்கு]ம் தென்பாற்

15. கெல்லை ஸூர்ய . . . . . யுழுகின்ற

16. [ந]ாகர் செய்க்கு [வடக்கும்] மேல்பாற்க்கெல்லை

17. பிலாற்றுக்கு கிழக்கு வடபாற்கெல்லை ஏகம்ப வா

18. ய்க்காலுக்கு தெற்குமாக இவ்வி[சந்த பெருநா]

19. ன்கெல்லை யிலகப்பட்ட நிலந் பத்து . . . . .

20. பொன்மாளிகைத்துஞ்சின கோ இராஜகே[ஸரிபன்ம]

21. ற்க்கு யாண்டு ரு ஆவது திருச்சக்கரப்ப[ள்*]ளி ஸ்ரீகோயிலின் தே

22. மல் பக்கத்து காவேரி குலையுடைந்து மணலிட்டு வர

23. ம்பு கெட்டு வாய்மாறி நீர்பூசி நெல் விளையு எழுறுட்டு

24. . . ம் கடல் முள்ளியும் புக்கு எழுந்து . . . .

25. . . . . வித்து

26. . . . . .

27. ந்தராதித்தவல் இறையிலியாக விற்ற . . .

28. ருள முற்றும் ஆவணக்களியே கைச் . . . .

29. . . ல்லைக்குமகப்பட்ட . . . . . பள்ளமும் பாழும் சந்த்ராதித்தவல்

30. இலிய[ாக] . . . . . ஸூர்யதேவர்க்கு அகழிமங்கலத்து மஹா ஸபை

31. யோம் பொது இருனா . . . . . யமிதுக்கும் இருநாழிக்கும் கறி அமிதுக்கும்

32. . . . அமிதுக்கு ஆக நெல்லு . . பதக்கும் . . . . . ன்னுக்கு [குறு] ணியும் மா . . .

33. ன்னுக்கு னெ[ல்*]லுகுறுணியும் நிசதம் தூணி . . . ஆக நெல்லு னூற்று[இருபதின் க]லம் சந்தராதித்த . . .

34. **ந்மாஹேஸ்வர ரக்ஷை இதம்மம்** ரக்ஷிப்பார் [ஸ்ரீ]**பாதம்** என்தலை மேலாம் ஒ

---

* கல்வெட்டு ஆண்டறிக்கை மூலம் ஆண்டு குறிப்பிடப்பட்டுள்ளது.

மாவட்டம் : தஞ்சாவூர்

வட்டம் : பாபநாசம்

ஊர் : சக்சுரப்பள்ளி

மொழி : தமிழ்

எழுத்து : தமிழும் கிரந்தமும்

அரசு : சோழர்

மன்னன் : முதல் இராஜேந்திர சோழன்

ஆட்சி ஆண்டு : 8

வரலாற்று ஆண்டு : கி.பி. 1020

இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை } 309/1966

முன் பதிப்பு : —

ஊர்க் கல்வெட்டு எண் } 2

இடம் : சக்ரேஸ்வரர் கோயில் - கருவறை தென்புறச் சுவர்.

குறிப்புரை : நித்தவினோத வளநாட்டுக் கிழார்க் கூற்றத்து பிரம்மதேயம் அகழிமங்கலத்து மகாசபையார் கோயில் தேவதான நிலங்களுக்கு அவர்கள் இறுத்து வந்த இருபது காசு மற்றும் வட்டி (பொலிசை) ஆகியவற்றை நீக்கி இறைவிலக்கு வழங்கிய செய்தி குறிப்பிடப்படுகிறது.

Summary : Records the examption of taxes for the devatana lands of the temple by the Mahasabaiyar of Akalimangalam, in Kilar kurram of Nitta vinodha valanadu. The yearly tax amount which was previously paid was 20 kasus.

கல்வெட்டு :

1. ராஜராஜந்ர மன*

2. to 5. சிதைந்து விட்டன.

6. [செயப்]பாவையுஞ் சீர்த்[த]

7. [னிச்]செல்வியுந் தந் பெ[ருந்]

8. [தேவிய]ராகி இந்புற [நெடிதியல்]

9. ஊழியுள் [இடைதுறை நாடுந் து]

10. டர்வன வேலிப் படர்[வனவ]

11. ாசியுஞ் சுள்ளிச் சூழ் மதி[ட் கெ]

12. ாள்ளிப் பாக்கையு[ம்] நண்[ணற்க]

13. ருமுரண் மன்னைக் கட

14. . . லீழத்தரசர் தம்

15. . . தேவியரோங்கெழி[ல்]

16. . முன்னவர் பக்கல் தெ[ன்]

17. & 18. சிதைந்து விட்டன.

19. . . . . [குலதன]

20. மாகிய [பலர் புகழ்]

21. முடியும் செங்கதி

22. ர் மாலையுஞ் சங்க

23. திர் வேலைத் தொ

24. ல் பெருங்காவல் ப

25. ல் பழந்தீவுஞ் செரு

26. விற் சினவிலிருபத்தொ

27. ருகாலரசு களைகட்ட பரசு

28. ராமர் மேல்வருஞ் சாந்திம

29. த்தீவரண் கருதி இருத்திய

30. செம்பொற்றிருத்தகு முடியுமாப்

31. பெருந்தண்டாற்கொண்ட கோப்பர

32. கேஸரி **பந்மராந** ஸ்ரீராஜேந்த்ரசோள தே

33. வர்க்கு யாண்டு **அ** ஆவது நித்த **விநோத** வளநா

34. [ட்டுக் கிழார்க்கூற்றத்து **ப்ரஹ்மதேயம்**]

35. அகழி மங்கலத்து

36. . . . . .

37. . . . . .

38. [ர]ா தித்தவல் . . . . .

39. **மஹாதேவர் தேவதா**நமாக

40. . . . அநுபவித்து இறை யிறு

41. . . . . யாண்டு அ

42. . . . . இறுத்து இறைகாசு இ[ரு]

43. [ப]து இக்காசு இருபதுஞ் சேர ஆட்டாண்டு தோறு

44. ம் பொலிசைக் காசு இருபது பொலியக் காசு

45. . . இப்பூவில் அரைக்கால்க் காசு பொலிகை . .

46. புலிய இதேவர்க்கு . . . . . உள்ள எண்பது . . . .

47. ஞ இத்தேவர் நிலம் **சந்தராதித்தவத்** இறையிலி

48. யாக முன்பு அநுபவித்து வருகிற நிலத்து

49. பொக . . . . . மங்கலத்துன்னில . . . . . இரஷை

50. வழுத்தூ[ர்] . . . . . ரத **க்ரமவித்தன்** ஆநந்த நிலத்துக்கு . . . . துட வைக்கும்

51. லத்து **பா** . . . . . லத்தூற் . . . **வித்தன்** னிலத்து ஏத்தினமிழ

52. . . . . வடபா[ற்*] கெல்லை குரவஸரி **மாப க்ரமவித்தந்**

53. . . கேஸரி . . . . . ம் வந்த இறை எப்பேற்பட்டதற்கு எங்கள் . . . . . .

54. . .டுத்து னாங்கள் சந்த்ராதித்தவத் இறையிறுத்துக் குடுப்பதாக இசைந்த இறையிழிச்சு இறை[யி*]லி செய்து குடுத்தோம்

55. மஹாதேவர்க்கு அகழிமங்கலத்து ஸபையோம் இந்த ஸபையார் இக் கோயில் . . . . யார் கோயிலில் முன் கூட்டக் குறைவற

56. க் கூடியிருன்து பணிப்பணியால் பணிக்க இந்த ஸிலாலேகை எழுதி னேன் . . . . எழுத்து ஆசார்யன் கரிகாலசோழ . . . . . .

57. ப்பெருன்தச்சனேன் இந்த எழுத்து வெட்டினேன் சிவ . . . . . காஷ்ட காரி . . . . . .வைமானி வீதிவிடங்க . . . . . இது பந்மா ஹேஸ்வர ரக்ஷை.

தொடர் எண் : 76/1986

மாவட்டம் : தஞ்சாவூர்

வட்டம் : பாபநாசம்

ஊர் : சக்கரப்பள்ளி

மொழி : தமிழ்

எழுத்து : தமிழ்

அரசு : சோழர்

மன்னன் : முதல் இராஜேந்திரன்

ஆட்சி ஆண்டு : 9

வரலாற்று ஆண்டு : கி.பி. 1021

இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை — —

முன் பதிப்பு : —

ஊர்க் கல்வெட்டு எண் 3

இடம் : சக்ரேஸ்வரர் கோயில் - கருவறை மேற்குப்புறச் சுவர், பட்டி.

குறிப்புரை : அகழிமங்கலம் ஆளும் கணத்தாருள் குரவசரி மாதவக்கிரமவித்தன் என்பவர் திருச்சக்கரப்பள்ளி இறைவர்க்கு 35 காசுகளுக்கு நிலம் விற்றமைக்கான ஆவணம் இது.

Snmmary . Records the sale deed of land for 35 kasu by Kuravasri Madhavak kramavittan, one among the Alunkanam of Akalimangalam, to the temple of Tiruccakkarappalli Mahadevar.

கல்வெட்டு :

1. திருமன்னிவள
2. ர இருநில மடந்தை
3. யும் போர்ச்சயப்பா
4. வையுஞ் சீர்த்தனிச்
5. செல்வியுந் தன் பெருந்[தே]
6. வியர்[ராகி]யின்புற நெடி
7. [திய] . . . . . .
8. [னவே] . . . . . .
9. [வாசியுஞ்] . . . . . .
10. மதிட் கொள்[ளிப்] . . . .

11. கையுந் நண்ணற்கருமுரண் மண்ணை . . . .
12. கடலீழத்தரைசர் த முடி . . . . .
13. . . . ஓங்கெழில் முடி . . . . .
14. [ன்னவந் ை]வத்த சுந்தர . . . . .
15. [தெண்டி]ரை ஈழ மண்ட[ல] . . . . .
16. கேரளன் முறைமையிற் சூடும் . . . , .
17. லர் புகழ் முடியுஞ் செங்கதிர்
18. வேலைத் தொல்பெருங்காவல் . . . .
19. செருவிற் சினவி இருபத்தொரு [கால்]
20. அரசு களைகட்ட பரசுராமன் . . . . .
21. சாந்திமற்றீவரண் கருதி . . . . .
22. செம்பொற்[றிருத்தகு முடி . . . . . மாப்ி[பாரு த/
23. ண்டாற்[கொண்ட கோப்]பரகேஸரி **பந்மரான**
24. ராஜேந்த்ர[சோள] தெவர்க்கு யாண்டு [ஒந்பதா]
25. [வது] நித்தவினோத வளநாட்டுக் கிழா[ர்*]க் கூற்றத்
26. து ப்ரஹ்மதேஸம்] அகழிமங்கலம் யாளும்கண
27. த்தாருள் குரவசரி **மாதவக்ரமவித்தனேந் இவ்வூர்**
28. த் திருச்சக்கரப்பள்ளி மஹாதேவர்க்கு நான் விற்று
29. க்குடுக்கும் நிலமாவது இந்நிலத்துக்குக் கீழ்பாற்
30. கெல்லை நீலமங்கலத்து நிலத்துக்கு மேற்கு
31. தென்பாற்கெல்லை இத்தேவர் நிலத்துக்கு
32 to 34 சிதைந்துவிட்டன.
35. ழிவின்றி மிகுதிக் குறை . . . . . .
36. த்துக் கொண்ட காசு முப்பத்தைஞ்சு
37. இக்காசு முப்பத்நைஞ்சும் இதுவே . . .
38. . . . . மேல்பட்ட . . . . . விற்றுக் குடுத்த நிலம்
39. . . . . ம்யி[றை இழிச்சு] விற்றுக்குடு . . .
40. . . . . இது . . . . . நிலம் . . . பொந் . . . . . .
41. லவோலை[யாவ]து வே[பெ]று . . . . வதாகவும் . . . . . து வேறு பொருண்மாவறுதிப் பொருள் சில[வோலை கா]
42. ட்டக் கடவரல்லாதாராகவும் இப்பரிசு ஒட் . . . . . சும் . . . .
43. விலையாவணஞ் செய்து குடுத்தேன் இத்திருச்[சக்கரப்பள்]ளி [மஹாதேவர்]க்கு . . . . . .

மாவட்டம் : தஞ்சாவூர்

வட்டம் : பாபநாசம்

ஊர் : சக்கரப்பள்ளி

மொழி : தமிழ்

எழுத்து : தமிழ்

அரசு : சோழர்

மன்னன் : முதலாம் இராஜேந்திரன்

ஆட்சி ஆண்டு : —

வரலாற்று ஆண்டு : 11-ஆம் நூற்றாண்டு

இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை } —

முன் பதிப்பு : —

ஊர்க் கல்வெட்டு எண் } 4

இடம் : சக்ரேஸ்வரர் கோயில் - கருவறை மேற்குப்புற வெளிச்சுவர்.

குறிப்புரை : ஆகழிமங்கலத்து சபையார், அவ்வூருட்படும் திருச்சக்கரப்பள்ளி இறைவர்க்கு நிலம் இறையிலி செய்து வழங்கியுள்ளனர். நிலத்தினை ஸ்ரீகோயிலுடையார்கள் வேறொருவரிடம் ஒப்புவித்து, அமுதுபடி, மற்றும் சில வழிபாடு நடப்பதற்கான செலவினை ஏற்கச் செய்தனர். அவர்கள் செய்யத் தவறும் நிலையில், அகழிமங்கல சபையாரும், கோயில் மகேஸ்வரரும் தண்டித்து வசூலிக்கலாம் எனவும், அப்போது ஸ்ரீ கோயிலுடையார்களே அவ்வழிபாடுகளைச் செய்தல் வேண்டும் எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

Summary : Records the Tax free land donation to Tiruccakkarapalli Alwar by the Sabaiyur of Akalimangalam. The donated land was entrusted to some individual by Thirukkoiludaiyarkal and arrangements were made for worship and food offerings. In the event of their failure to do so, the Sabhaiyar and Maheswaras were empowered to collect it by hard measures and the worship could be made by Srikoiludaiyar themselves who had the right of management.

கல்வெட்டு :

1. ஸ்வஸ்தீஸ்ரீ . . . . . [ம]ன்னி வளர
2. யும்மு . . . . . தெந்நவ
3. வைத்த சு . . , . . முடியும் தெ

4. ண்டிரை ஈழ . . . . எறிபடைக்கே
5. ரளர் முறைமையிற் . . . . னமாகிய ப
6. லர் புகழ் முடியும் . . . . மாலையுஞ் சங்கதிர் வே
7. லைத் தொல்பெருங்[கா]வல் பல்பழந்தீ . . . .
8. த்திய செம்பொ
9. ற்றிருத்தகுமுடி . . .
10. மாப்பொரு தண்[டால்] . . . .
11. கோப்பரகேசரி . . . .
12. . . ராஜேந்த்ர சே[ாழ]
13. (சிதைந்துள்ளது)
14. . . . . நித்த வினோ
15. த வளநாட்டு கிழார்க்கூ
16. ற்றத்து ப்ரஹ்மதேய
17. அகழிமங்கலத்துட்படு
18. . . திருச்சக்கரப்பள்ளி ம
19. ஹாதேவ . . . .
20. ல் உடையா . . .
21. ஹ்மணர் புல . . .
22. தேவன் இ . . .
23. யிரத்தனா . . .
24. ண்டு எட்டாவ . . .
25. . . அகழிமங்க . . .
26. லத்து ஸபைய . . .
27. க்கல் இறையிலி . . .
28. . . . பயிர் செல்
29. & 30. சிதைந்துள்ளது
31. ச் செய்[ா*]ராகவும் . . .
32. லஸ்வகம் இரக் . . .
33. நின்று திருந . . .
34, 35, 36 — சிதைந்துள்ளன
37. தனம் புகல் இய்யா
38. ண்டு விலை கொண்டு . . . .
39. மாக சிவயோக கன்டரர் பட்டர்க்கு

40 . . . . புழுக்குக்கறி

41. அரிசிபூத . . . . . உண்டாய் மிளகு

42. [க்]கும் நெய் அஞ்சு . . . . க்கும் நிசதம் குசக்கலமும் உட்பட . ற் றுட்டன பரிசுக்கு வேண் . .

43. நெல்லுக்குறுணி ஆக . . . . நிசதம் நெல்லு ஐய்ங்குறுணி . . . . . டுவா[ர்*]க்கு நிசதம் நெல்லு நானாழியும் ஆக

44. னாழியும் நித்த . . . . . க **சந்த்ராதீதவத்** இவ்வகழிமங்கல . . . . . ஸபையார் கண்காணியோடும் செலுத்த

45. குறையச் செலுத்தல் இவ்வகழிமங்கலத்து ஸபையாரும் **பந்மாஹேஸ்வர** ரும் **தண்டிச்சுச்** செலுத்துவித்துக் கொள்ள

45. . தாரும் மற்றும் இந்த ஸாஸநம் பற்றி அநுபவிக்கும் ஸ்ரீகோயிலுடை யார்களும் இப்படி இந்நிவந்தம் செலுத்தக்கடவார்

47. . . . ன்மாய் ஸ்ரீராஜராஜ

48, 49, 50. சிதைந்துள்ளன.

51. த்திராண்டும் யிரு செல்லா

52. . . த்திருவிளக்கு இறையான்

53. [குடி] நிலன் எழுமாவும்

54. . . தில் திடல்களும் கல்ல

55. . . பத்தைஞ்சு குடுத்துக்கீழ்

56. . . . . ன ஆரூர் மரு . .

57. . . . . சோழக்க . . .

58. கவும் இப்படி . . . . . சக்கரப்பள்ளி . . . தேவர்க்கு இ ஸ்ரீகோயி லுடைய புல்லாலி மாதேவன் இரணியும் சாத்தனூரும் தாழி மாறனு

59. ம் சூற்றிநீலவிடனும் . . . . . சங்கனும் உள்ளிட்ட இவ்வனைவோம் இத்தளி முன் சொல்லப்பட்ட இவ்வனைவரும் சொல்ல இஸி[ல]ாலேகை எழுதிநேன் ஊதி

60. யூ[ர்*] மாத்தாண்டன் மனிப்பா . . யனேன் இந்த எழுத்து வெட்டி னேன் சிறுதனத்துக் காட்டகாரி தேவ்டி கருமாணிக்கனேன் இது **பந்மாஹேஸ்வர** ரகை.

மாவட்டம் : தஞ்சாவூர்

வட்டம் : பாபநாசம்

ஊர் : சக்கரப்பள்ளி

மொழி : தமிழும், சமஸ்கிருதமும்

எழுத்து : தமிழும் கிரந்தமும்

அரசு : பாண்டியர்

மன்னன் : முதல் சடையவர்மன் சுந்தரன்

ஆட்சி ஆண்டு : 17

வரலாற்று ஆண்டு : கி.பி. 1266

இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை } 156/1989

முன் பதிப்பு : —

ஊர்க் கல்வெட்டு எண் } 5

இடம் : சக்கரேஸ்வரர் கோயில் - கருவறை, அந்தராள வடசுவர்.

குறிப்புரை : திருச்சக்கரப்பள்ளி இறைவரின் உற்சவமூர்த்தங்களைக் கண்ணனூர்க் கொப்பம் இரண்டு கரைநாடு ஆகியவற்றைச் சேர்ந்த வாணிக நகரத்தார்கள் எழுந் தருள்வித்தனர். சித்திரைத் திருவிழாவில் உற்சவமூர்த்தங்களின் திருவீதி உலாவுக்கான திருவெழுச்சித் தேவை எனப்பட்ட செலவினத்தை ஏற்றனர். சக்கரப்பள்ளிக் கோயில், வாணிகன் பெருவழிக்கு மேற்கில் உள்ளது என்ற குறிப்பு உள்ளது.

Summary : It records the instalation of Bronze images of God and Goddess and the endowment to conduct the sacred procession at the festival in the month chaittra by merchant guilds belong to Padinenbhumi of Kannanur Koppam and Irandukarainadu. It is mentioned that the temple of Chakkarappalli Udaiya Nayanar situated on the western side of traders Highway (Vanikanperuvali).

கல்வெட்டு :

1. ஸ்வஸ்திஸ்ரீ ஸமஸ்த ஜகதாதார ஸோமகுலதிலக
2. மதுரா
3. புரிமாதவ கேரளவம்ச நிர்மூலன லங்கா[த்*]வீப

4. லுண்டந [த்*]விதீயா ராம சோளகுல ஸை
5. லகுலிச கர்நாடராஜ வித்யா[ப]
6. ண காடக கரிகூட பாகல விவித
7. ரிபு துர்க்கா[ர்*]தந வீரகண்ட கோ
8. பால விபிந தாவ [த*]ஹந காஞ்சீபு
9. ராதீஸ்வ[ர*] கணபதி ஹரின [சார்தூல] நெல்லூர் புர
10. விரசித வீராபிஷேக ப்ரணதராஜ ப்ரதிஷ்டாபக
11. மஹா ராஜாதி ராஜ பரமேஸ்வர கோச்ச[ட பன்மரா]
12. ன திரிபுவனச்சக்கரவத்திகள் [ஸ்ரீ சுந்தரபாண்டிய] . . . .
13. யாண்டு ஏள வது நாள் வ்ருச்சிக நாயற்று அபர பக்ஷத்து
14. சதுர்த்தியும் புதன் கிழமையும் பெற்
15. ற ரோசணி நாள்
16. கண்ணனூற் கொப்பத்து பதினெண்
17. பூமியில் வாணிக நகரத்தோமும் இர[ண்*]
18. டுகரை நாட்டில் வாணிய நகரத்தோ
19. மும் நம் வாணிகன் பெருவழிக்கு மேல்பால் உ
20. டையார் திருச்சக்கரப்பள்ளி உடைய நாய
21. னா[ர்*]க்கு முதலியரையும் நாச்சியாரையும் ஏ
22. றியருளப் பண்ணிவித்து இவர் எழுந்தருளு[ம்*] சித்
23. திரைத் திருநாளில் திரு(ெ)வழிச்சி தேவையும்
24. குறைவறுப்பதாகவும் சம்மதித்தோம் கண்ண
25. னூற் கொப்பத்து பதினெண்பூமியில் வாணி
26. க நகரத்தோமும் இர[ண்*]டுகரை நாட்டில் வா
27. ணிக நகரத்தோமும் உ

மாவட்டம் : தஞ்சாவூர்

வட்டம் : பாபநாசம்

ஊர் : சக்கரப்பள்ளி

மொழி : தமிழ்

எழுத்து : தமிழ்

அரசு : விஜயநகரர்

மன்னன் : சாளுவத் திருமலைராயர்

ஆட்சி ஆண்டு : —

வரலாற்று ஆண்டு : சகம் 1397
கி.பி. 1475

இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை } 157/1989

முன் பதிப்பு : —

ஊர்க் கல்வெட்டு எண் } 6

இடம் : சக்ரேஸ்வரர் கோயில் - மகாமண்டப வடசுவர்

குறிப்புரை : அரசர் திருச்சக்கரப்பள்ளிக் கோயிலுக்கும் அரியலூர்க் கோயிலுக்கும் பூசைத் திருப்பணி நடத்துவதற்காக வரியினங்கள் பலவற்றைச் சர்வமானியமாக அறிவித்துள்ளார். இட்டிகை, சூலவரி, கொத்து இலக்கை, புலவர் கரணீகர் சோடி, ஆதானி சோடி, இளஞ்சோடி, வீர சோடி, அதிகாரி சோடி, தஞ்சாவூர் ஓலை எழுத்து வர்த்தனை, பிரதானி சோடி முதலிய பல வரியினங்கள் குறிப்பிடப்படுகின்றன. இதற்கான அரச ஓலை (நிருபம்) திருவனந்தாழ்வார் ஆசுகவிராசர் என்ற அதிகாரி மூலம் பெறப்பெற்றுள்ளது.

Summary : It records that the expenses for conducting worship and doing repairs to the temples of chakkarattalvar and Ariyilidankonda nayanar of Ariyalur are to be met with the tax amount collected by the Government. It is mentioned that the royal order (நிருபம்-letter) concerned was sent through the Gov't official named Tiruvanantalvar Asukavirayar.

கல்வெட்டு

1. ஸ்வஸ்திஸ்ரீ சகாப்தம் சதுஸ்ளகாவ இதன் மே
2. ல்(மேல்) செல்லா நின்ற மன்மத சம்வ[த்*]ச
3. ரத்து ஸிம்ஹ நாயற்று பூர்வபக்ஷத்து த

4. ஸமியும் சுக்கரவாரமும் பெற்ற மூலநக்ஷத்ர நாள்

5. ஸ்வஸ்திஸ்ரீ மந் மஹாமண்டலேஸ்வரந் மேதினி மீ

6. சுரகண்ட . . . கட்டாரிசாளுவ இராசயக்ஷி சாளுவ பகைத்த

7. வன்னியர் குலைகால சம்பூராய . . . ஸாபநாசாரிய சங்கா[பி]

8. ஷேஹ ஸமராங்கவைரி ஸ்ரீரங்க ஸ்தாபநாக்ஷாரிய

9. சாளுவத் திருமலைதேவ மஹாஇராசா திருச்சக்கரப்பள்ளி

10. உடைய நயினார் திருநாமத்துக்காணி திருச்சக்கரப்பள்ளிக்கு[ம்]

11. அரியலூர் அரியிலிடம் கொண்ட நயினார் [கோயில்] பற்றுக்

12. கும் பூசைத் திருப்பணி நடத்த வேணும் என்று இற்றை நாள்

13. நிருபம் திருவுள்ளம் பற்றி [நட்டம்] இட்டிகை சூலவரி கொத்து

14. இலக்கை புலவர் கரணிக்கசோடி ஆதானிசோடி இளஞ்

15. சோடி வீ[ர*]சோடி அதிகாரிசோடி தஞ்சாவூர் ஓலைஎழுத்துவத்த

16. னை ப்ரதாநிசோடிக்கு மடக்குவரி கட்டுமாவிலை குளவடை நாட்டு

17. காணிக்கை நாடு தலையாரிக்கம் வாசலில் அதிகாரி சோடி முத

18. லாக ஸர்வமாந்யமாக உடையவற்கு மஹாபூசைக்கும் திங்கள் திவ

19. ஸம் திருப்பணிக்கும் கழித்தபடி ஆலே சந்திராதித்தவரையும் ஸர்வம

20. ாநியம் ஆக நடத்தத்தக்கது ஆக நித்தவினோத வளநாட்டு மண

21. லூர் ஆராவமுது பட்டர் திருவனந்தாழ்வார் ஆசுகவிராசர் கையில்

22. நிருபம் திருஉள்ளம் பற்றி [அ*]ருளுகையில் என்று என்றைக்கும் ஸர்வ

23. மாநியம் ஆக பூசை திருப்பணியும் நடத்திக் கொண்டு சுகஇத்திலே இ

24. ருக்கவும்

மாவட்டம் : தஞ்சாவூர்
வட்டம் : பாபநாசம்
ஊர் : சக்கரப்பள்ளி
மொழி : தமிழ்
எழுத்து : தமிழ்
அரசு : சோழர்
மன்னன் : குலோத்துங்கன்

ஆட்சி ஆண்டு : —
வரலாற்று ஆண்டு : 12ஆம் நூற்றாண்டு
இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை : —
முன் பதிப்பு : —
ஊர்க் கல்வெட்டு எண் : 7

இடம் : சக்ரேஸ்வரர் கோயில் - கருவறை மேற்குப்புறச் சுவர்.

குறிப்புரை : துண்டுக் கல்வெட்டு. குலோத்துங்கன் பெயரும், 37 என்ற ஆட்சி ஆண்டும் (எந்த மன்னன் ?) மட்டுமே தெரிகிறது.

Summary : Fragment. Only the name Kulottunga and the regnal year 37 (whose?) could be ascertained.

கல்வெட்டு

1. சக்கரவர்த்தி வீரஸிமாஹாஸத்து . . -
2. கேசரி பந்மரான . . . . . குலோத்துங்க . . .
3. [கூ]ற்றத்து அவளி . . . .
4. னும் பலரை . . . .
5. யான் சிங்க பட்டனும் . . . .
6. யானும்[ம்*] இவ்வனைவோம் . . . . . ருடையான் தேவந்கனக . . .
7. யாண்டு கூ[ள] ஆவது புரட்டாதி மாஸத்து இவரிடை . . . .

த நா. அ. தொல்லியல் துறை

தொடர் எண் : 81 / 1986

மாவட்டம் : தஞ்சாவூர்

வட்டம் : பாபநாசம்

ஊர் : திருமண்டங்குடி

மொழி : தமிழ்

எழுத்து : தமிழும் கிரந்தமும்

அரசு : சோழர்

மன்னன் : மூன்றாம் இராஜராஜன்

ஆட்சி ஆண்டு : 25

வரலாற்று ஆண்டு : கி.பி. 1241

இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை — —

முன் பதிப்பு : —

ஊர்க் கல்வெட்டு எண் 1

இடம் : சிவன் கோயில் - கருவறை வடக்கு, மேற்கு, தெற்குச் சுவர்கள்.

குறிப்புரை : குலோத்துங்கசோழ வளநாட்டு திருநறையூர் நாட்டு அகரம் ஸ்ரீஇராசராசச் சதுர்வேதி மங்கலத்து மகாசபையார், எழுதிக் கொடுத்த ஆணை (நியோகப்) இது. வன்னியர்கள் வரிதண்டுகிற போது தவறாக (பட்டர்கள் இறுக்க வேண்டிய வரியினையும் குடிகளிடம் வசூலித்தல். அதிக குடிமை வசூலித்தல்) வசூலித்ததால், குடிகள் முறையீடு செய்ய மூன்றாம் குலோத்துங்க சோழன் காலத்தில் கடைப்பிடித்த நடைமுறைகளை, மாற்றாமல் கடைப்பிடிக்க வேண்டும் என்று செய்யப்பட்ட முடிவினைத் தெரிவிக்கிறது. நான்காண்டு களுக்கொருமுறை, நிலப்பங்கீடு (கரை செய்தல்) செய்யப்பட வேண்டும் என்ற விவரமும் தெரிவிக்கப்படுகிறது.

Summary : The decision (niyogam) taken by the mahasabha of Agaram Sri Rajaraja ccrupetimangalam in Tirunaraiyur nadu in kūlottunga chola valunadu is recorded. The circumstances which led to take this decision was mentioned as that the vanniyar (tax collecters) collected the tax dues of the Bhattas also from the land owners and excess in kudimai. On their representation, this decisīon was made and it insist the same pattern adopted at the time of Periadevar i.e. Kulottunga chola III be followed. Review of the reallocation of land (karai ceytal) once in four years is also mentioned. A preparatory document (Ayattappattiram) was drafted in advance.

கல்வெட்டு :

1. ஓம் ஸ்வஸ்திஸ்ரீ: த்ரபுவனசக்கரவத்தி ஸ்ரீராஜராஜ தேவற்கு யாண்டு உயரு ஆவது ரிஷபநா[யற்று] அப[ர]பக்கூத்து துவாதெசியும் புதந் கிழமையும் பெற்ற ரேவதி நாள் குலோத்துங்க சோழ வளநாட்டு திரு நறையூர் நாட்டு அகரம் சிரி இரா[ச*]ராச சருப்பேதி மங்க . . யார் கோயிலிலே தந்மி செ . . . . கொட்டி கூட்டங் குறைவறக்கூடி இருந்து மஹ . . .

2. நாட்டு குடிமக்களுங் கண்டு நம்மூரி[ல]வ[ர்]கண்டு வன்னியர் பற்றி கடமை குடிமை தண்டுகிற இடத்து மு . . . துங் . . டி அன்றிக்கே குடிமைகளை ஏறக்கொண்டும் காசு தண்டியும் பட்டகள் பேரில் வரி களை எங்களை தண்டியும் இப்படி செய்கையாலே தரிப்பற்று பயிரேற் . . ஞாற்றறுபத்திரண்டுமா மு . . . . . டகள் குடியிருப்பு ரூ உய் கூ நீக்கி மடக்கு ரூ ஞாற்றறுபதி

3. நாலும் குடிமை கொள்ளுமிடத்து பெரியதேவர் காலத்து உடையார் திரிபுவனவீரீசுரமுடையார் கோயிலுக்கு திருநாள்களுள்ளிட்ட கோயில் குடிமை செய்யவும் காவேரி கரை உள்ளிட்ட செந்நீர் வெட்டி செய்யவும் பட்டகள்பேரால் வரிக்கு எங்களைப் பிடியாதொழி . . . மைக்காசெ . . . ன்றெங்கள் பேர் . . . . . .ண்டு தண்டாதொழியவும் மாறும் காசுவற்க மென்[று]

4. இதுக்கு சொல்லப்பட்[ட*] தேவைகள் செய்யக் கடவதல்லாதாகவும் கரை செயுமிடத்து ஓராட்டை நாள் நிந்று தவிர . . .ந்பு நாலாட்டை நாள் கழிச்சு ஊருக்கிரையக் கரையிடக் கடவதாகவும் இப்படி தவிரச் செய்தார்களாகில் கிராமத்துரோகிகளும் நாட்டுத்துரோகிகளுமாகவும் இப்படி . . . வித்தமையில் இப்படி செய்யு . . . . மிடத்து முந்பு குடிமை தவிர எழுதிந ஆயத்[த]பத்திர படி

5. தேவை செய்வா[ரோம்] இப்படி செய்க: இவர்களருளிச் செய்க. ந[த்*] தமுந் தலமும் . . . நேன் இவை எந் எழுத்து[2] இப்படிக்கு மகா ஸபையையு[ம்*] நம்மூ[ரு]டையாரும் எழுதி எழுத்திட்ட மகாசபையார் நியோகப்படி கல்வெட்டித்து

1. மாங்களூர் இலே
2. ாகநாயக பட்டஸ்ய
3. உமியூர் எச்சமுத்
4. தி பட்டஸ்ய
6. அசுவூர் தெக்கணா
7. மூத்தி பட்டஸ்ய
8. இராயூர்ச் செரும
9. டை அகில நாயக
10. பட்டஸ்ய இர[ர*]ம
11. நா . . . .
12. [கண]ஞ்சை தில்லை
13. நாயக பட்டஸ்ய
14. குரோஷி ஆழ்க்
15. கொண்ட வில்
16. லி பட்டஸ்ய
17. க[ண]ஞ்சை திரு[ந]
18. ட்டமாடி பட்டஸ்ய
19. கராம்பி செட்
20. டி கந்தாடை மக
21. ாதேவ பட்டஸ்ய
22. பூவணூர் மகா
23. தேவ பட்டஸ்ய
24. அட்டாம் புறத்து
25. மகா தேவ பட்டஸ்ய
26. பரந்தூர் விநா
27. யக பட்டஸ்ய
28. பெருமருதூர்
29. சூரியதேவ பட்[டஸ்ய]
30. பொல . .
31. ற தே . .
32. ல திரி . .
33. ட்டஸ்ய . .
34. ம் புறத் . .
35. பகபட் . .
36. கண்டேற்று [பெரி]
37. யபிராந் பட்ட அ
38. திராத்திரியாஜிந:
39. திருக்கடவூர் ச
40. வாபதி பட்டஸ்ய
41. நின்ம்பை நீலக்
42. கிரீவ பட்டஸ்ய
43. சேநலூர் திருச்
44. சிற்றம்பலமு
45. டையான் பட்
46. டஸ்ய பெரும
47. குதூர் நச்சிநார்
48. க்கிநியாந் ப
49. ட்டஸ்ய
50. இராயூர் முகட்டவ
51. லநாயக பட்டஸ்ய
52. புள்ளூர் தேவ[ர]
53. ாச பட்ட ஆகிதாக்
54. நி :- இராயூர் செ
55. ாட்டை னாயக . .
56. வேண்
57. டு பட்டஸ்ய

மாவட்டம் : தஞ்சாவூர்
வட்டம் : பாபநாசம்
ஊர் : திருமண்டங்குடி
குறிப்புரை : திருநல்லூர் நாயனார் கோயில்தானத்தாரும் கேசவவிண்ணகர் எனப்பட்ட திருமால் கோயில் தானத்தாரும், பிணம் எடுத்துச் செல்லும் வழி தொடர்பாக, நிலம் பரிவர்த்தனை செய்ததில் தங்களுக்குள் செய்து கொண்ட ஒப்பந்தம் குறிப்பிடப் படுகிறது. [ஊர்க் கல்வெட்டு எண். 2-இனைக் காண்க].

கல்வெட்டு :

1. ஹர[திரி]புவனச்[சக்கரவத்திகள்] ஸ்ரீராஜராஜதேவற்கு(யாகு) யாண்டு கூஹது(வது) கன்னி நாயற்று வெள்ளிக்கிழமை சதுற்தெசியும் புதன் திருமை[1]யும் பெற்ற சதையத்து நாள் நித்தவினோத வளநாட்டு நல்லூர் நாட்டு உடையார் திருநல்லூர் [நாயனார் கோயில்] ஆதி சண்டேசுர தேவர் திரு அ[ரு*]ளால் இந்நாயனார் கோயில் தானத் தாரும் நல்லூரான பஞ்சவன்மாதேவிச் சருப்பேதிமங்கலத்து கேசவ விண்ணகர் எம்பெருமான் கோயில் தானத்தாரும் எங்களில் இசைந்து இசைவு தீட்டு இட்ட பரிசாவது உடையார் திருநல்லூர் நாயனார் கோயில் மேலை திருமடை விளாகத்து

2. எல்லைக்கு [மேற்கு] இந்த கேசவ விண்ணகர் எம்பெருமான் திருவிடை யாட்டத்து எல்லைக்கு கிழக்கும் ஊ(ர்)ரில் நின்றும் வடக்கு நோக்கி போகிற பலாற்றுப் பெருவழியில் தெற்கடைய நல்லூரான பஞ்சவன்

மாதேவிச் [சதுர்வேதி மங்கலத்து] ஹோஸலையாருடன் பரிவற்தனம் பண்ணி திருநாமத்துக்காணியான ஒழுக்கை நிலத்து தெற்கடைய தென்கை வடகை கோல் இரண்டுக்கும் கைமிகைகோல் பதினைஞ்சே முக்காலே முன்று மாவினால் பெருங்குழி முப்பத்தெ[ா*]ன்றே முக்க[ா*]லே ஒகு²மாவும் இந்த கோவ³

3. [விண்]ண[கர்] ..... திருவிடையாட்டத்துடனே சேர ஸெ[ள]கனி யாற்தமாக திருமடைவிளாகத்து எல்லை உற கிழக்கே திருவிடை யாட்டமாக சேர நிற்கவும் இக்குழி முப்பத்தொன்றே முக்காலே ஒரு மாவுக்கு தலைமாறாக இந்த கேசவ விண்ணகர் எம்பெருமான் திருவிடையாட்டத்து எல்லைக்கு வடக்கு திருநல்லூர் நாயனார் செண்(வு)பகத் திருநந்தவனத்துடனே சேர நி[ற்க]விட்ட தென்கை வடகை கோல் எட்டே காலுக்கு கீழ்கை மிகைகோல் மூன்றே முக் காலே இரண்டு⁴ மாவினால் பெருங்கு

4. ழி மு[ப்பத் தொ]ன்றே முக்காலே ஒருமாவும் உடையார் திருநல்லூர் நாயனார் திருநந்தவனத்துடனே திருநாமத்துக் காணியாய் சேர நிற்கவும் இப்படி ஸம்மதித்து பரிவற்தனை இசைவு தீட்டு இட்டோம் உடையார் திரு[ந*]ல்லூர் நாயனார் கோயில் தானத்தாரும் கேசவ விண்ணகர் எம்பெருமான் கோயில் தானத்தாரும் இவ்வ[ை*]ன வோம் இப்படிக்கு இவை கேசவ விண்ணகர் எம்பெருமான் கோயில் கணக்கு பனந்தாளுடையான் உத்தம பிரியனெழுத்து இந்த கேசவ விண்ணகர் எம்பெருமான் [கோ*]யில் திருவடி இதுக்கு தலைமாறாக இன்னாய னார் [மே]லைத் திருமடைவிளாகத்தா(ா)லே வழியும் சவமும் முன்பு.. ..பிலாற்றுப் பெருவழி உறப்போகக் கடவாராக இக்கோயில் தானத் தார் தந்த தானநியோகப்படியே போகவும் இப்படிகள் சந்திரா(ா)

5. தித்தவரை செல்லக் கடவதாகவும் பரிவ[ர்*]த்தனை விவஸ்தைப்படியே இந்நாயனார் திருமாளிகையிலே கல்வெட்டக் கடவதாகவும் இப்படி ஸம்மதித்து பரிவ[ர்*]த்தனை விவஸ்த்தை பண்ணிக் குடுத்தோம் உடையார் திருநல்லூர் நாயனார் கோயில் [ஆதி சண்டே]சுர தேவர் கன்மிகளுக்கு ந[ல்*]லூரான பஞ்சவன் மாதேவிச் சரு[ப்*]பேதி ம[ங்*]க [ல*]த்துப் பெருங்குறி மஹாஸபையோம் இப்படி பணியால் ஊர் கணக்கு பனந்தாளுடையான் உத்தமப்பிரியன்னே[ன்*] இவை என்னெழுத்து இப்படிக்கு இவை பார்த்துவாசி திருவெண்காடு பட்ட னே[ன்*] எழுத்து இவை சேளுலூர்

6. [வீர]ராக்ஷதப் [பி]ரம[ம*]ராயனெழுத்து இப்படிக்கு[1] இவை மணலூர் திருவம்பல நம்பி எழுத்து இவை வாச்சியன் பொன்னம்பல நம்பி எழுத்து இப்படிக்கு இவை கெழுதவன் திருமழுவாடி பட்டன் எழுத்து இவை பா[ரத்து வா]சி மாதேவ.....பட்டன் எ[ழு*]த்து இவை காப்பியன் கேரளாந்தக பீரம[ம*]ராயன் எழுத்து இவை பாரத்துவாசி அவினாசி பட்டன் எழுத்து இவை முல்லூர் பாண்டவதூத பட்டன் எழுத்து இவை பொன் மே[ய்*]ந்த சோழப் பிரம[ம*]ராயன் எழுத்து இவை நாகமதுகலத்து[5] சிரீராமன் சங்கரநாராயண பட்டனெழுத்து.

---

1. ''கிழமையும்'' எனப் படிக்கவும்.
2. ''ஒரு'' எனப் படிக்கவும்.
3. ''கேசவ'' எனப் படிக்கவும்.
4. ''இரண்டு'' - என்று இருத்தல் வேண்டும்.
5. ''நாக மங்கலத்து'' எனப் படிக்கவும்.

மாவட்டம் : தஞ்சாவூர்
வட்டம் : பாபநாசம்
ஊர் : நல்லூர்
மொழி : தமிழ்
எழுத்து : தமிழ்
அரசு : சோழர்
மன்னன் : மூன்றாம் இராஜராஜன்

ஆட்சி ஆண்டு : 26
வரலாற்று ஆண்டு : கி.பி. 1241
இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை } 59/1911
முன் பதிப்பு : —
ஊர்க் கல்வெட்டு எண் } 4

இடம் : கல்யாண சுந்தரேஸ்வரர் கோயில் - இரண்டாம் திருச்சுற்றுக் கிழக்குப்புறச் சுவர்.

குறிப்புரை : திருநல்லூர் நாயனார்க்கு உச்சிவேளையில் நிகழும் பூசையில் அமுது படைத்து, மாகேஸ்வரர்களுக்கு வழங்க (திருமுன்பு ஒடுக்கு குடுக்க), பளியங்குடையார் ஆண்டார் திருப்பரமனார் என்பவர் நிலம் வழங்கிய செய்தி கூறப்படுகிறது. இக்கல்வெட்டில் குறிப்பிடப்படும் "கோவணன் சாமியான திருச்சிற்றம்பல மயக்கல்" என்ற நிலத்தின் பெயர் அமர்நீதி நாயனார் புராணத்துடன் தொடர்புடைய பெயராகும்.

கல்வெட்டு :

1. ஷஷ்ரீ திரிபுவனச் சக்கரவத்திகள் ஸ்ரீ ரா[ஜ*]ராஜ தேவற்கு யாண்டு உஅசு வது இஷவநாயற்று அமரபக்ஷத்து செசமியும் திங்கள்கிழமையும் பெற்ற ரேவதி நாள் நித்த வினோத வளநாட்டு உடையார் திருநல் [லூர்] நாயனார் உச்சி ஸ(ச)ந்தி அமுது செய்தரு(ள்)ளும் போது ஸ்ரீ மாகேஸ்வரர்க்கு

2. திருமுன்பு ஒடுக்கு குடுக்க பளியங்குடையார் ஆண்டார் திருப்பரமனார் விலைகொண்டு இட்ட இந்நாட்டு நல்லூரான பஞ்சவன் மாதேவிச் சருப்பேதி மங்கலத்து பொன் மே[ய்*]ந்த பெருமாள் நல்லூரில் . . . . . திருமாலாண்டாரான காடவராயர் பக்கல் இந்நாயனார் திருநாமத்து

3. விலை கொண்டு இட்ட இருமுடிசோழ வதிக்கு கிழக்கு பஞ்சவன் மாதேவி வாக்காலுக்கு தெற்க்கு ... சத சதிரத்து இதன் கிழக்கடைய கோவணன் சாமியான திருசிற்றம்பல மயக்கல் ரூ ... நிலம் காலே காணிக்கும் இறைமிகுதி கொண்டு இந்நாள் முதல் திருமுன்பு ஒடுக்குக்கு

4. நாள் ஒன்றுக்கு இருநாழி உரியாக வந்த திருவமுது அரிசியும் கறி அமுதும் விஞ்சனமும் விறகும்(ம்) ஒடுக்கு சட்டியும் சந்திராதித்தவரை செல்லக் கடவதாக இந்நிலம் காலே காணிக்கு பிரமாண விலை மய காசுனாலய்யாயிரத்து இருநூற்றைம்பதும் ஸ்ரீபண்டாரத்து ஒடுக்க இந்நிலத்தால் ஊர்

5. இறைமிகுதி கொண்டு இத்திரு முன்பு ஒடுக்கு குடு[க்*]க கடவதான மைக்கு இவை கோயிற் கணக்கு பன[ந்*]தாருடையான் உத்தம பகவன் எழுத்து இப்படிக்கு இவை தேவகன்மி நெற்றிகண் பட்டன் எழுத்து இப்படிக்கு ..... சைவதரர் கா[ப்*]பராகவும் மாராயன் எழுத்து இப்படிக்கு இவை உடையாரைப் பூசிக்கும் கா[ஞ்]சை

6. திருமழுபாடி உடையார் மாதேவ ஐட்டன் எழுத்து இப்படிக்கு இவை உடையாரைப் பூசிக்கும் முதலிப் பிள்ளையா (ணயா) ர(ா)ன பாலேந்திர மவுநபட்டன் எழுத்து இப்படிக்கு இவை ஆதிவிநாயக .... இப்படிக்கு இவை குலோத்துங்க பட்டன் எழுத்து இப்படிக்கு இவை திருமடைப் பள்ளி கங்காணி நாங்

7. [கூரன்] நாமபட்டன் எழுத்து இப்படிக்கு இவை மஞ்சடும் காவல் மணலூர் [கிழ]வன் எழுத்து மண[ங்*]கமழும் கோயில் பி[ச்*]சன் எழுத்து

மாவட்டம் : தஞ்சாவூர்

வட்டம் : பாபநாசம்

ஊர் : நல்லூர்

மொழி : தமிழ்

எழுத்து : தமிழும் கிரந்தமும்

அரசு : சோழர்

அரசன் : இரண்டாம் இராஜாதிராஜன்

ஆட்சி ஆண்டு : 12

வரலாற்று ஆண்டு : கி.பி. 1175

இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை } —

முன் பதிப்பு : "வரலாறு" இதழ் 11 பக். 11, 12

ஊர்க் கல்வெட்டு எண் } 5

இடம் : கல்யாண சுந்தரேஸ்வரர் கோயில் - இரண்டாம் திருச்சுற்றுத் தென்புறச் சுவர்.

குறிப்புரை : கோவண நாடகம் (அமர்நீதிநாயனார் புராண நாடகம்) கற்றாடிய கோயில் தேவரடியார் மாமதலையான நெற்றிக்கண் நங்கைக்கு நாடகப்புறமாக நிலம் வழங்கப்பட்ட செய்தி குறிப்பிடப்படுகிறது. இந்த நாடகம், திருப்புத்தூரைச் சேர்ந்த மாளந்தை பட்டாரகன் வடுகனான உடைய பிள்ளை என்பாரால் எழுதப் பட்டது போலும். கூத்தாட்டுக் காணி என்று இவ்வுரிமை சுட்டப்படுகிறது. கொடை வழங்கிய பெருங்குறி மகாசபையார், நெற்றிக்கண் நங்கையால் ஆட இயலாதபோது வேறொருவரை (substitute) ஏற்பாடு செய்து அவளே ஆடச் செய்ய வேண்டும் என முடிவு செய்ததும் தெரிய வருகிறது.

கல்வெட்டு :

1. ஷஷ்ரீ ஸ்ரீ ஸ்ரீவ [ச சக்கரவர்த்] திகள் ஸ்ரீராஜாஸ்ரீராஜதேவர்க்கு யாண்டு ஐஉ ஆவது நித்த [வினோத வளநாட்டு ந]ல்லூர் நாட்டுத் திருநல்லூரான ஸ்ரீ பஞ்சவன் ஷமாதேவிச் சதுவேதி மங்கலத்துப் பெருங்குறி ஷமாஸபையோம் உடையார் திருநல்லூர் நாயனார் கோயிற் திருநாடகம் இவ்வூர்த் திருப்புத்தூர் மாளந்தைப் பட்டாரகன் வடுகனான

2. உடையபிள் .. ..[தி]காவண நாடகங் கற்றாடின இக்கோயிற் தேவரடியார் .. ..ள் மாமதலையான நெற்றிக்கணங்கைக்குக் கோவண நாடகப்புறமாக விட்ட நிலமாவது இவ்வூர் இருமுடி சோழவதிக்குக் கிழக்கும் பஞ்சவன் மாதேவி வாய்க்காலுக்குத் தெற்கு முதல் கண்ணாற்று

3. இரண்டாஞ் ச[திரத்து]களதமன் இருணீக்கி திருவையாறுடையான் பக்கல் நாங்கள் . . . விட்ட பொத்தகப்படி ரு 2யூகிரு யினால் விரித்து ரு உ ய கூ இந்நிலம் இரண்டுமா முக்காணியும் கூத்தாட்டுக் காணியுங் காசு கொள்ளா இறையிலியுமாக அனுஹவித்து இத்தேவர் திருவிழா விலேய்

4. இக்கூத்தாடக் கடவளாகவுந் தனக்குப் பின்புந் தன்வ ஸத்தாரில் விஜை நல்ல . . . ஆடக்கடவராகவும் தங்களால் ஆட இயலாவிடிற் வூதி குடுத்தாடுவிக்க கடவதாகவுஞ் சொல்லி இந்நிலமித் திருநாடகத்துக்கே கூத்தாட்டுக் காணி[யுங் காசுகொள்ளா இறையிலியுமாகச் சூராதித் தவற் செல்வதாக இறையிலி செய்து குடுத்தோம்]*

5. இப்பெருங்குறி ஊராஸஹையோம் இவ்விறையிலி சூதிவஜ்ஜுவர ரகூஷ பன்னாவேஜ்வர ரகூஷ இப்படிக்கிவை இப்பெருங்குறி ஊராஸஹையோம் . . . . . [ஆவணமாகக் கொண்டருளித் தேவர் தொழக் கறுத்த கண்டத்தான் தூமறையோனாகிய முக்கறுக்கத் தோன்றினான் வந்து]*

---

* இப்பகுதிகள் வரலாறு இதழ் 11 இல் வெளிவந்துள்ள கல்வெட்டின்படி தரப் பட்டுள்ளன.

மாவட்டம் : தஞ்சாவூர்
வட்டம் : பாபநாசம்
ஊர் : நல்லூர்
மொழி : தமிழ்
எழுத்து : தமிழ்
அரசு : சோழர்
அரசன் : மூன்றாம் இராஜராஜன்

ஆட்சி ஆண்டு: 5
வரலாற்று ஆண்டு : கி.பி. 1222
இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை } 57/1911
முன் பதிப்பு : —
ஊர்க் கல்வெட்டு எண் } 6

இடம் : கல்யாண சுந்தரேஸ்வரர் கோயில் - இரண்டாம் திருச்சுற்றுத் தெற்குச்சுவர்.

குறிப்புரை : திருநல்லூர் நாயனார் கோயிலோடு பணித்தொடர்புடைய பலர் (இலக்கர்) இவ்வூரில் உள்ள திருவகம்படிப் பிள்ளையாருக்கு அமுதுபடிக்கும், திருப்படி மாற்றுக்கும் நிவந்தம் செய்ய வேண்டும் என்று விடுத்த வேண்டுகோளின்படி, இக்கோயில் சைவாசாரியம் செய்யும் சைவதிவாகர பிரமமாராயரும், ஸ்ரீமாஹேஸ்வரக் கண்காணி திருவீதி ஆண்டாரும், தேவகன்மி தில்லைநாயக பட்டனும், மாதான மங்கலமுடையாரும் சேர்ந்து செய்து கொடுத்த ஆவணத்தைக் குறிக்கிறது. அதன்படி, திருமடை விளாகத்தில் கிழக்குத் திருவீதியின் வடசிறகில் குடியின்றிக் கிடந்த காலிமனை சண்டேஸ்வரப் பெருவிலையாக (ஏலவிற்பனை) விற்கப்பட்டு, அந்தப் பணத்தின் மூலம், விநாயகரை திருவீதி எழுந்தருளச் செய்தல், அமுது செய்தல் ஆகியன மேற்கொள்ளப்பட்டது. மேலும் பிள்ளையார் பெயரில் நிலம் வாங்கப்படுமானால், அதன் வருவாயில் இருந்து, விஷு, அயனம், சங்கராந்தி ஆண்டுத் திருநாள். மாசித் திருநாள் ஆகிய நாள்களின் சிறப்பு வழிபாட்டுகளும், பரிகலன்கள் மற்றும் அமுதுபடியும் செய்ய ஏற்பாடு செய்யப்பட்டது. அன்றியும், பிள்ளையார் கோயிலின் அருகில் உள்ள நிலம், அக்கோயிலில் பூசை செய்யும் நெற்றிக்கண் பட்டனுக்குக் காணியாக அளிக்கப்பட்டதையும் குறிப்பிடுகிறது.

கல்வெட்டு :

1. ஹர ஹஷ்ரீ திரிபுவன சக்கரவத்திகள் ஸ்ரீராஜராஜ தேவர்க்கு யாண்டு ஐஞ்சாவது மீன நாயற்று ..... சத்தமியும் திங்கள் கிழமையும் பெற்ற உத்திராடத்து நாள் நித்தவினோத வளநாட்டு நல்லூர் நாட்டு உடையார் திருநல்லூர் நாயனார் கோயில் சைவாசாரியம் சை

2. வ திவாகரபிரமமாராயர் ஸ்ரீ மாஹேஸ்வரக் கண்காணி திருவீதி ஆண்டாரும் தேவர்கன்மி தில்லைநாயக பட்டனும் . . . . . மாதான மங்கலம் உடையானும் இக்கோயில் இலக்கராய் உள்ள பலவர் நில . . . . . இக்கோயில் காணி உடைய சிவப்பிராமணந் காசிபன் உத்தமதானீசுர

3. உடையான் மன்றமுடை[யான்] நெற்றிகண் பட்டன்வ . . து உங்கள் பேரால் திருஅகம்படி வினாயக பிள்ளையாரின் . . . . திட்டையான சீகோயி(ல்)லும் திருமுற்றமும் நன்தவனங்களும் குடியிருப்பு மனையும் . . . . . றும் எழுந்தருளினால் அமுது செய்தருள திருப்படிமாற்றுக்கு

4. வேண்டுவ[ன] தரவேணும் என்று சொல்லுகையில் நாங்க(ள்)ளும் இசைஞ்சு இதுக்கு நாங்கள் வியத்தரப[த்திரம்] . . . குடுத்த பரிசாவது இன்நாயனார் திருமடைவிளாகத்து கீழை திருவீதியில் வடதலையி(ல்)லே குடியிருப்பாரன்றிக்கே வெளியாய் கிடக்கிற தரமிலிந் நில மனையிலே சண்டேசுர

5. பெருவிலையாக கொண்டு குடு[க்க*] கடவோம் ஆகவும் இம்மனையில் . . திரு அகம்படிப் [பிள்ளையார்] . . . . சிவநாட . . . . . மேனிக்கு நன்றாக எழுந்தருள்ளுக் கடவது ஆகவும் [எழுந்தருளுகிற] .... அமுது செ[ய்*]தருள .... இரண்டுபடி கழிப்புக் குடு[க்*]க கடவோம் ஆகவும் இது பெறும் இடத்து பிள்ளையார்

6. திருநாமத்தால் கொண்ட காணி உண்டாகில் இதி(ல்) லேதரவே பூ-ந் பெற கடவதாகவும் ... ாத்து அளக்கும் நெல் ... சோறே நிமன்தம் பெறும் சிவப்பிராமணர் உள்ளுட்டார் .. [திருப்பரிகலம்] உள்ளுட்டன வயிற்றுக்கும் திருப்பணி ..... கழிப்புவுள் சோறுபடி அச்சு

7. கொள கடவது ஆகவும் விஷ்ணு ஐயன கிராணம்[1] ஆட்டை திருநாள் மாசி திருநாளைக்கு.....இருநாழி ஆக வன்த ..... கடவதாகவும் இப்படி சத்திர[ாதித்த வரை] செல்லகடவதாகவும் இக்கோயில் முப்பது வட்டமும் காணியும் பிள்ளையார் திருகோயில் அருகு கொண்டு குடுத்த அகமனையும் இந்நெற்றிகண்

8. பட்டனுக்கு காணி ஆக நிச்சயித்து வியத்தர பத்திரம்[2] பண்ணிக் குடுத்தோம் இவனைவோம் இ.....மாதான மங்கலம்[முடையான்] திருச்சிற்றம்பலம்முடையான் தேவக....பிரான் எழுத்து இப்படிக்கு இவை..ரைஞ்சை ந[ல்]லூருள் தாரான் சைவசிவாகர ஸ்ரீஹாராயர் எழுத்து இப்படிக்கு இவை சீமாயேசுர கங்காணி திருவீதி ஆண்டார்

9. எழுத்து இப்படிக்கு இவை தில்லைநாயக பட்டந் எழுத்து இப்படிக்கு இவை ஆதிவினாயக பட்டன் எ[ழு*]த்து.....பட்டன் எழுத்து இவை [குலோத்து]ங்கசோழ பட்டன் எழுத்து இவை பஞ்சநெதிவாண பட்டன் எழுத்து இவை நவனீத பட்டன் எழுத்து இவை பொம்மன் ஆளுடையான் வழிகின்றி வந்தான் எழுத்து இவை வந்தான் மா[நில] முடையான் தேவர்

10. கள் தம்பிரா[ன்*] திருச்சிற்றம்பலமுடையான் எழுத்து இவை மாதான மங்கலமுடையான் வழி கன்னி வன்தான் சீமாயேசுரப் பீரியன் எழுத்து சிபந்தந் தாந்குவாற்....யந் இராரா....ன் கா.ஞ்சை நாயகம் கோவன் .. ச்சன் சயிஞ்ஞை மாதேவ பிச்சன் சயிஞ்ஞை இவை திரு நட்ட பிச்சன் எழுத்து இவை உக்கங்காணி[3] நா....உடையான் நாமப்ப ஊராள் எழுத்து திருமடைப்

11. பள்ளி கங்காணி அந்தரவேலி உடையான் அரையதேவந் எழுத்து .....லூ[ர்*] கிழவன் எழுத்து திருப்பதியம் விண்ணப்பம் செயும் நாங்கூர் உடையான் .... பிள்ளை எழுத்து பார[சிவ]ன் பெரியான் நாநூற்றுவ [மயே]சுரபிரியன் .... திருமுறைய் ஓதும் திருச்சிற்றம்பல முடையான் எழுத்து இவை வானநாயன் திருனானசமத ...ன்[4] எழுத்து ஆவூர் நாடாழ்வாந் சயிச்ஞை

---

1. ''அயன கிரஹணம்'' எனப் படிக்கவும்.
2. ''வியக்த பத்திரம்'' (கூட்டு விற்பனை) ஆகலாம்.
3. ''ஊர்க் கண்காணி'' எனப் படிக்கவும்.
4. ''திருஞான சம்பந்தன்'' எனப் படிக்கவும்.

மாவட்டம் : தஞ்சாவூர்
வட்டம் : பாபநாசம்
ஊர் : நல்லூர்
மொழி : தமிழ்
எழுத்து : தமிழ்
அரசு : சோழர்
மன்னன் : மூன்றாம் இராஜராஜன்

ஆட்சி ஆண்டு : 5
வரலாற்று ஆண்டு : கி.பி. 1219
இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை : 58/1921
முன் பதிப்பு : —
ஊர்க் கல்வெட்டு எண் : 7

இடம் : கல்யாண சுந்தரேஸ்வர் கோயில் - இரண்டாம் திருச்சுற்றுத் தெற்குச் சுவர்.

குறிப்புரை : திருநல்லூர் நாயனார் கோயிலின் பல பணி நிமந்தக்காரர்கள், தங்கள் பெயரால் திரு அகம்படிப்பிள்ளையார் கோயிலும், திருமுற்றமும், திருநந்தவனமும் செய்வித்து, அவரைப் பூசிக்கும் உத்தமதானீசுரமுடையான் மன்றமுடையான் நெற்றிக்கண் பட்டனுக்குக் குடி இருப்பதற்கு நிலமும் வழங்கினர், இந்நிலம் நூறு குழிக்கு நான்காயிரம் காசும் தென்னைமரம் எட்டுக்கு ஆயிரம் காசும் விலையாகக் கொடுத்து வாங்கி வழங்கியுள்ளனர் என்ற விவரம் குறிப்பிடப்படுகிறது. இந்நிலம் இறையிலியாகவும் வழங்கப்பட்டுள்ளது.

கல்வெட்டு :

1. ஹர ஷஷ்டிஸ்ரீ திரிபுவன சக்கரவத்திகள் சீராராதேவற்கு யாண்டு [ஐ]ஞ்சாவது மீன நாயற்று புர்வ பத்து சதமியும்[1] திங்கள் கிழமையும் பெற்ற உத்தராடத்து நாள் நித்தவினோத வளந[ா*]ட்டு உடையார் திருநல்லூர் நாயனார் கோயிலில் ஆதிதண்டேசுர தேவர் திருவருளால் இக்கோயில் தானத்தோம் சண்டேசுர இறை

2. யிலப்[2] பிரமாண இசைவு தீட்டு இக்கோயிலில் பலபணி நிமந்தகாறர் [தங்கள்] பேரால் திருவ[க*]ம்படி வினாயகப் பி[ள்*]யைளாரை எழுந் தரு(ள்)ளிவித்து இக்கோயிலும் திருமுற்றத்துக்கும் திருநந்தவனத்துக்கும் பிள்ளையாரை எழுன்தருளிவித்து இ . . . . குடுத்த காசிவன் உத்தமதாநீசுரமுடையான் மன்றமுடையான் நெற்றிகண் பட்டனுக்கு

3. குடிஇருப்பு மனைக்கு உடலாக நாங்கள் விற்றுக் குடுத்த இறையிலி மனையாவது இந்நாயனார் கீழை திருவீதியில் வடகீழையில் குடி இருப்பு இந்றி இரு[க்*]கிற மனையாய் ரூ . . . . . யிலி ஆக விற்று குடு[த்*]த மனைக்கு மேல்பாற்கெல்லை திருவீதியும் மாதேவந் [ஆ]ச்சன் மனைக்கு [கி]ழக்கும்

4. வடபாற் கெல்லையய் கோடியில் திருசூல தெற்கும் கீ[ழ்*]பாற்கெல்லை பாரத்துவாசி கண் . . . . டையான் ப[ட்*]ட[ன்*] நிலத்துக்கு மேற்கும் தென்பாற்கெல்லை வழி ஒழுக்கைக்கு வடக்கும் ஆக இசைந்த இந்னா[ல்*] எல்லையுள்பட்ட குழி நீ[க்கி] குழி நூறும் இதில் நின்ற காய்தெங்கு சம் கா[யா]கெங்கு[3]சம் ஆக தெங்கு அ

5. இத்தெங்கு எட்டும் இமனைகுழி நூற்றுக்கும் விலைமதித்த குழி ரிக்கு காசு சல ஆக காசு சசூ காசு நாலாயிரமும் காய்தெங்கு நாலுக்கு காசு அறுநூறும் காயாதெங்கு நாலுக்கு காசு நாநூறும் ஆக காசு ஆயிரம் ஆக காசு இகூ இக்காசு ஐய்யாயிரமும் ஆவணக்களரியே காட்டேற்றி கை[ெ]சலவற

6. கைகொண்டு விற்று விலைப்பிரமாண இசைவு தீட்டு குடுத்தோம் இத் திருவகம்படியாற்கு இக்கோயில் தானத்தோம் இக்குழி நூறும் தெங்கு எட்டும் இத்திருவகம்படியார் எழுந்தருளிவிக்கிற திருஅகம்படி வினாயகப் பிள்ளையாற்கு சீகோயிலும் திருமுற்றமும் திருநன்தவன மும் இந்நெற்றி

7. கண்பட்டனுக்கு அகமனையும் அகமுந . . . இந்றிக்கே நின்றபடியே திருவகம்படி வினாயகப் பிள்ளையாற்கு இறையிலி நக்கவும்[4] இப்படி சந்திராதித்த வரை இறையிலியாக நிற்க கடவதாகவும் இப்படி சம்மதிச்சு சண்டேசுர பெருவிலை இறையிலிப் பிரமாண இசைவு தீட்டு குடு[த்*]தோம்

8. இத்திருவகம்படியா[ர்*]க்கு ஆதிசண்டேசுர . . . . . கோயில் தானத் தோம் பிர(ர)மாண விலைப்படி காசு ஐய்யாயிரத்துக்கு . . . னால் நெற்றிகண் பட்டன் ஒடுக்கின காசு ஹத அ-ம் ாஹந்-ஹப னால் ஒடுக்கின காசு ஹத உா . . . . . காசு ஐய்யாயிரமும் இ[ப்*]படி ஒடுக்கி

9. இவை கோயில் கணக்கு மாதாநமங்கலமுடையான் தே(ர)வர்கள் தம்பிரான் திருச்சிற்றம்பலமுடையான் எழுத்து ஸ்ரீமாகேசுரக்கண்காணி [திருவீதி] ஆண்டார் எழுத்து தேவ . . . தலை நாயக பட்டன் எழுத்து ஆ . . . . எழுத்து பஞ்சநெதி வாணர் பட்டன் எழுத்து

---

1. "பூர்வபட்சத்து சப்தமியும் அல்லது தசமியும்" எனப் படிக்கவும்.
2. "இறையிலி" எனப் படிக்கவும்.
3. "தெங்கு" எனப் படிக்கவும்:
4. "நிற்கவும்" எனப் படிக்கவும்.

த. நா. அ. தொல்லியல் துறை **தொடர் எண் : 37/1995**

மாவட்டம் : தஞ்சாவூர்

வட்டம் : பாபநாசம்

ஊர் : நல்லூர்

மொழி : தமிழ்

எழுத்து : தமிழ்

அரசு : சோழர்

மன்னன் : மூன்றாம் இராஜராஜன்

ஆட்சி ஆண்டு : 20

வரலாற்று ஆண்டு : கி.பி. 1237

இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை } —

முன் பதிப்பு : —

ஊர்க் கல்வெட்டு எண் } 8

இடம் : கல்யாண சுந்தரேஸ்வரர் கோயில் - இரண்டாம் திருச்சுற்றுத் தென்புறச்சுவர்

குறிப்புரை : நல்லூர் ஈஸ்வரமுடையார்க்கு ஊர் ஒழுகின் படி ஒட்டில் கழித்த இறையிலி ஐந்து போகம் விளையும் நிலம் வழங்கப்படுகிறது. (ஒழுகு என்பது ஊர் நிலவரிக் கணக்கேடு ஆகும். ஒட்டில் கழித்த இறையிலி என்பது முன்னர் ஊரார் நிர்ணயித்த வரியைக் கழித்து இறையிலியாக்கியது எனப் பொருள்படும்.)

கல்வெட்டு :

1. ஹர : ஸ்வஸ்ரீ திரிபுவனச் சக்கரவத்திகள் ஸ்ரீ இராஜராஜ தேவர்க்கு யாண்டு உ ஆவது நித்த வினோத வளநாட்டு நல்லூர் நாட்டு நல்லூரான பஞ்சவன் மாதேவிச் சருப்பேதி மங்கலத்து கீழ்பால் உடையார் [நல்லூர்] ஈஸ்வரமுடையார்க்கு திருநாமத்துக்காணியாக தரமிலி நீங்கலும் ஊர்கீழ் இறையிலி .. ..

2. ஒட்டில் கழித்த இறையிலிக்கும் ஊர் ஒழுகின்படி அய்போகம் வளவன் வதிக்கு கிழக்கு பஞ்சவன் மாதேவி வாக்காலுக்கு தெற்கு ககூஉ சதிரத்து சீகோயிலும் திருமுற்றமும் திருமடை வளாகமும் ரூ கூ வ இ ட ஏ க ஊ வ ம ஈ ஐ துண்டம் ரூ ரு ஊ உத கி ட டா கூ ஊ ம் ஆக தரமிலி ரூ ரு ரு ஊ னால் விரவு ரூ நு ப வளாகம்

3. இறையிலியும் ஒட்டில் கழித்த இறையிலியுமான வளவன் வதிக்கு கிழக்கு மும்முடி சோழ வாய்க்காலுக்கு தெற்கு ச கூ உ ரூ ஊ யசு சும்

பஞ்சவன் மாதேவி வாய்க்காலுக்கு . . . . . துண்டம் ரூ ரு உத கீ ரு சு கூ கீ ரு ரு இதில் சு ஈகூ ம் ரூ ரு உத கி ரு உ ச உத க கூ ம் ரூ கீ ஊ ரு உத கீ ரு ரு இங்குரு

4. கெ ரூ கூ கீ கூ ஊ கீ வ ப இதில் சு ஈக ரூ ஆ ழ வ எ ந்தரம் ரூ ? கூந்நா . ? ரு கீ ஏத கூ உத கி வ .. வளவன் வ[தி]*க்கு கிழக்கும் பஞ்சவன் மாதேவி வாய்க்காலுக்கு தெற்கு ற் கூ ஈ . . . . . ரூ கூ உத கீ உ ரு உத கீ ஐ ச கூ ம் மும்முடி சோழ வாய்க்காலுக்கு தெற்கு சகூற்று

5. ண்டத்தும் உந்துண்டத்தும் ரூ ஹகீ வரு இதில் எந்தரம் ரூ ? ரு உத னால் இ[து]க்கு . வூல் வச அ ந்தரம் ரூ ச னால் உக்கு கீ ஆ லி க ந்தரம் ரூ ரு கி வரு னால் ப க்கு கி ரு கூ ரு உத ரு உத கி . ஆக ரூ ப உத . . . . க்கு உத கீ ரு ரு கூ ரு உத கீ . ஆக ரூ ரு ? கீ வ ரு உத . கீ ரு சு ஆகத் தரமிலி உள்பட ரூ சு சு ரு கீ வ ரு உத கீ ரு சு னால்

6. விரவு ரூ ற் ஆ ஊ ? கீ ப கூ . . . ரு ஊ இதில் ஸ்ரீ கோயிலும் திருமுற்றமும் திருமடை விளாகமும் (ம்) தரமிலி நீங்கல் ரூ . . ஊர்கீழ் இறையிலி ரூ ற் . . கி . . ? உத கீ ரு உ பூ மல் . . . . இறையிலி ரூ வ கக்கு ஊர் விழுக்காட்டுடந் . . . தடிக்கு உத கீ ரு ரு கூ ரு உத கீ ஆ இப்படிக்கு இவை ஊர் கணக்கு பனந்தா[ரு]டையான்

7. உத்தம பிரியனெழுத்து இப்படிக்கு இவை ஊர் கணக்கு பெரும்பன்றூரு டையான் எழுத்து இப்படிக்கு இவை ஊர்க்கணக்கு மாதான மங்கல முடையான் நெற்றிகண் பிரியன் எழுத்து இப்படி ஒழுகின் படிக்கு ஒக்கும் இவை சேஞலூர் வீரராக்கத [பிரம]மாராயனெழுத்து இப்படிக்கு இவை சோமனா[த*] தேவர் ஆன தியாகசமு[த்*]திரர் ஆசாரியன் எழுத்து

த. நா. அ. தொல்லியல் துறை **தொடர் எண் : 38 / 1995**

மாவட்டம் : தஞ்சாவூர்

வ்ட்டம் : பாபநாசம்

ஊர் : நல்லூர்

மொழி : தமிழ்

எழுத்து : தமிழும் கிரந்தமும்

அரசு : சோழர்

மன்னன் : மூன்றாம் இராஜராஜன்

ஆட்சி ஆண்டு : 25

வரலாற்று ஆண்டு : கி.பி. 1240

இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை : 49/1911

முன் பதிப்பு : —

ஊர்க் கல்வெட்டு எண் : 9

இடம் : கல்யாண சுந்தரேஸ்வரர் கோயில் - இரண்டாம் திருச்சுற்றுத் தென்புறச் சுவர்.

குறிப்புரை : திருமடைவிளாகத்துச் சந்தானத்துக் குடும்பிட்டு இருக்கும் துறைஉடையார் ஈசானதேவர் என்ற மடாதிபதியின் பாரியை (மனைவி) மன்றேறு சான்றாட்டி, அவரது கணவர் இறப்பதற்கு முன்னர் (திருமலை எழுந்தருளுவதற்கு முன்பாக) திருவிடைமருதூர் மாளிகை மடத்தில் இருக்கும் தத்தனூருடையார் ஈசான சிவர் என்பார் அவரினும் மூத்தவர் (சேட்ட முதலியார்) ஆதலின் அவருக்கு மடத்திற்கு நில சாசனம் செய்து கொடுக்க வேண்டும் என்று கூறியதற்கேற்ப நல்லூருடைய நாயனார் கோயில் தானத்தாரிடம் விலைக்கு நிலம் வாங்கி அளித்ததைக் குறிக்கிறது. அடுத்த ஆண்டில், திருவிங்கமலை ஜீயரின் சீடர் (பிள்ளை) தவப் பெருமாளுடன் செய்த நிலப்பரிவர்த்தனை பற்றியும் இறுதியில் குறிக்கப்படுகிறது.

கல்வெட்டு :

1. ஷஷ்ரீ திரிபுவனச்சக்கரவத்திகள் ஸ்ரீராஜராஜ தேவர்க்கு யாண்டு உ[டு]வது நித்த[வினோத வளநாட்டு] நல்லூர் நாட்டு உடையார் திருநல்லூர் நாயனார் திருமடை விளாகத்து

2. கும்பிட்டு இருக்கும் திருவிடைமருதில் மாளிகை மடத்து முதலியார் சந்தாநத்து தத்தனுடையார் ஈசான தேவர்க்கு இதிருமடைவிளாகத்துச் சந்தானத்து கும்பிட்டு இருக்கும் துறை[உடையார்] ஈசானதே[வர்] பாரிகை மன்றேறுசான்றாட்டியேன் [எ]னக்கு சேட்ட

3. முதலியார் ஆகையால் இந்த ஈசான தேவர்[க்]கு எங்கள் முதலியார் திருமலைக்கு எழுந்தருளுவதற்கு முன்பாக இவர்க்கு மடங்குடுக்கென இவர்க்கு சாதனம் பண்ணிகுடுவென ஆவற தேசெயிலே எனக்கு திருவுள மாகையில் இம்மடம் இவ்வாண்டு மார்

4. கழி மாதம் பிறந்த பதினெட்டாந் தியதியான வியாழக்கிழமை பெற்ற மூலத்து நாள் நீர் வார்[த்*]து குடுத்த மடமாவது இந்நாயனார்[க்]கு பதினேழாவது நாளில் நாங்கள் சண்டேசுவர தேவர் திருவருளால் இக் கோயில் தானத்தார் பக்கல் விலை கொண்டுடை

5. (டை)யேனான தெற்கில் திருமடை விளாகத்து மடத்துக்கு மேல்பாற் கெல்லை விழி உடையார் அகோரதேவர் மடத்துக்கு கிழக்கும் கோயில் விள்ளை ஆ[ண்டார்] மடத்துக்கு மேற்கும் திருவீதிக்கு தெற்கேதில் ஒக்க நின்றான் திருநந்தவனத்துக்கு வடக்கும்

6. நான் இவர்க்கு நீர்வார்[த்*]து குடுத்த இறையிலி மடம் தலை அகலம் ருகூஹஹவச க்கு வானனீளம் கோல் அ னால் குழி ஙரு இக்குழி பதினைஞ்சும் இந்நாளில் இ ..... இறையிலி மடம் நீர்வார்த்து குடுத் தேன் இது துறைஉடையார் ஈசானதேவ[ர்*] பாரிகை மன்றேறு சான்றாட்

7. டியார் கைமாட்டங்கானமைக்கு இவை அகோரதேவன் எழுத்து இத்தானப் பிரமாண இசைவு தீட்டு இவர் சொல்ல எழுதினேன் இக் கோயில் ஸ்ரீகாரியக்கணக்கு கூத்தாருடையான் எழுத்து இவை கோயிற் கணக்கு மாதானமங்கலமுடையான் திருச்சிற்றம்பலமுடையான் நெற்றி

8. கண் பிரியன் எழுத்து இவை கோயிற்கணக்கு பெரும் பன்றாருடையா னெழுத்து இப்படி அறிவேன் உடையாரை பூஜிக்கும் காஞ்சை திருமழ பாடி உடையானான [மகாதேவபட்டன்] எழுத்து இப்படி .... தேவர் கன்மி நெற்றிகண் பட்டன் எழுத்து இப்படி

9. அறிவேன் திருமடைப்பள்ளி கண்காணி அரசதேவன் எழுத்து இவை திருமெய்காவல் மணலூர் கிழவன் எ[ழு*]த்து இப்படிக்கு இவை சோ[ம]னா[த*]தேவர் அன்னி.....மடத்துக்கு கிழக்கு இத்துடன் சேர முற்றாவது வைகாசி

10. [மா]தத்து ஒரு நாள் திருவிங்கமலை ஜீயர் பிள்ளைகளில் தவப் பெருமாள் உடன் பரிவர்த்தனை பண்ணின இவர்க்கு மாளிகை மடத்து முதலியார் இறையிலி மனையாக கொண்டு கிழக்கடைய மடமாக விட்ட குழி இருபத்து.. உளிக்கு தலைமாறு....

11. க்கடைய மாளிகை மடத்து முதலியார் மடத்துடன் சேர தவப் பெருமாள் மடமாயபாவத்தி[தி]ல் சேர விட்ட தலை அகலம் கால் உஇக்கு வான் நீளம் கோல் அ னால் குழி உ0உ இக்குழி இருபத்திரண்டும் சேர விட்டு பரிவர்த்த[னை பண்ணி] ....

த நா. அ. தொல்லியல் துறை **தொடர் எண் : 39/1995**

மாவட்டம் :	தஞ்சாவூர்	ஆட்சி ஆண்டு :	15
வட்டம் :	பாபநாசம்	வரலாற்று ஆண்டு :	கி.பி. 1230
ஊர் :	நல்லூர்	இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை	44/1911
மொழி :	தமிழ்		
எழுத்து :	தமிழும் கிரந்தமும்	முன் பதிப்பு :	—
அரசு :	சோழர்	ஊர்க் கல்வெட்டு எண்	10
அரசன் :	மூன்றாம் இராஜராஜன்		

இடம் : கல்யாண சுந்தரேஸ்வரர் கோயில் - இரண்டாம் திருச்சுற்றுத் தென்புறச் சுவர்

குறிப்புரை : கல்வெட்டு முழுமை பெறவில்லை. பாண்டி மண்டலத்துச் சோழ கோனார் அகம்படி முதலிகளில் (அந்தப்புரக் காவல் புரிவோர்களில்) பொன்னன் இராசனான விக்கிரமசிங்கதேவன் என்பவர்க்குத் திருநல்லூர் நாயனார் கோயில் தேவகன்மிகள் உழவு நிலம் விற்றதைக் குறிக்கிறது.

கல்வெட்டு :

1. ஷஷ்ரீ ஸ்ரீஇராஜராஜ தேவற்கு யாண்டு ஐந்து வது விருச்சிக நாயற்று அமர பக்ஷத்து சதுற்[தெசி]யும்[1] செவ்[வா]ய்க் கிழமையும் [பெ]ற்ற ஆயில்யத்து நாள் நித்த வினோத வளநா

2. ட்டு உடையார் திருநல்லூர் நாயனார் கோயில் ஆதிசண்டேசுவர தேவர் கன்மிகளோம் சண்டேசுவர விலைப் பிரமாணம் பாண்டி மண்ட லத்துச் சோழ கோனார் அ[க]ம்ப

3. டி முதலிகளில் பொன்னன் இராசனான விக்கிரமசிங்க தேவற்கு நாங்கள் சண்டேஷ்வர விலையாக விற்றுக் குடுத்த [உழவு நில பாவத்து] நித்த விதோத வளநாட்டு நல்லூர் . . . . .

த. நா. அ. தொல்லியல் துறை **தொடர் எண் : 40 / 1995**

மாவட்டம் : தஞ்சாவூர்
வட்டம் : பாபநாசம்
ஊர் : நல்லூர்
மொழி : தமிழ்
எழுத்து : தமிழும் கிரந்தமும்
அரசு : சோழர்
மன்னன் : மூன்றாம் இராஜராஜன்

ஆட்சி ஆண்டு : 5
வரலாற்று ஆண்டு : கி.பி. 1222
இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை : 45/1911
முன் பதிப்பு : —
ஊர்க் கல்வெட்டு எண் : 11

இடம் : கல்யாண சுந்தரேஸ்வரர் கோயில் - இரண்டாம் திருச்சுற்றுத் தென்புறச் சுவர்.

குறிப்புரை : முடிகொண்டசோழ வளநாட்டுத் துண்டநாட்டுத் துண்டநாடுடையான் ஏகவாசகன் உலகுகண்விடுத்த பெருமாளான வாணகோவரையர் என்பவர், இக்கோயிலில் 174 பலம் எடையுடைய இரண்டு நிலை தரா விளக்கு ஒன்று அளித்து அதனை எரிப்பதற்குத் தினமும் உழக்கு எண்ணெய் கிடைக்கும் வகையில் இருநூற்று நாற்பது காசுகள் இக்கோயில் சிவப்பிராமணர்கள் வசம் வழங்கியுள்ளதையும், அவர்கள் பரம்பரை பரம்பரையாக இதனை எரிய வைக்கச் சம்மதித்ததையும் இக்கல்வெட்டுத் தெரிவிக்கிறது.

கல்வெட்டு :

1. ஷஷ்ரீ ரீஷவன சக்கரவத்திகள் ஸ்ரீராஜராஜ தேவற்கு யாண்டு ஐஞ்சாவது தனு நாயற்று அபர பக்ஷத்து ஷஷ்டியும் சனிக்கிழமையு[ம்*] பெற்ற உத்திரத்து நாள் நித்த விநோத வளநாட்டு . . . . . உடையார் திருநல்லூர் நாயனார் திருமுன்பு எரிய முடிகொண்ட சோழ வளநாட்[டுத் து]ண்டநாட்டு துண்டநாடுடையான் ஏகவாசகந் உலகு கண்விடுத்த பெரு[மாளான வாணகோவரையர்]

2. திருநுந்தாவிளக்கு ரிக்கு நாள் ரிக்கு எண்ணை உழக்காக வந்த எண்ணைக்கு உபையமாக இக்கோயில் முப்பது வட்டத்துக்காணி உடைய ஶிவப்ராஹ்மணரில் காஶ்யபந் சந்திர[சேகரன் திருசிற்றம்பல

முடையான்] இவந் தம்பிமாரும் காஶ்யவன் [அழுது] உய்யவந்தானும் காஶ்யவன் தேவன் மாதனும் எந்தம்பிமாரும் [காஶவன் திருச்சிற்றம்]

3, பலமுடையான் நனைந்தானும் காஶ்யவ கோலமார்வந் திருச்சிற்றம்பல முடையானும் கவுஶியன் சிவபுரமுடையான் பிரமீஸ்ரமுடையானும் வாச்சியன் தில்லைநாயகன் [திரு]ச்சிற்றம்பலமுடையானும் [இவன்] தம்பியும் கவுஶியன் தேவன் தில்லைநாயகனும் கவுசியன் [கோவணவன் தில்லை ந[ர*]யகனும் இல்[வனைவோம்] . . .

4. காசு இருநூற்று நாற்பதுங்கைக் கொண்டு இத்திருநுந்தாவிளக்கு ஒன்றும் செலுத்தக் கடவோமாகவும் இப்படியே எங்கள் வற்கத்தாரும் எங்கள் பக்கற் பெற்றுடையாரும் சந்திராதித்தவற் செலுத்தக் கடவோமாகவும் . . . . . [இவ்]வனைவோம் இத்திருநுந்தாவிளக்கெரிய இவரிட்ட இரண்டு நிலைத் தராத்திருக்குத்தி விளக்கு ஹ னால் எடைாளசெம் நூற்று எழுபத்து நாற்பலம் இது பந்மாஹேமவர[ரக்ஷ]

மாவட்டம் : தஞ்சாவூர்

வட்டம் : பாபநாசம்

ஊர் : நல்லூர்

மொழி : தமிழ்

எழுத்து : தமிழும் கிரந்தமும்

அரசு : சோழர்

அரசன் : மூன்றாம் இராஜராஜன்

ஆட்சி ஆண்டு : 5

வரலாற்று ஆண்டு : கி.பி. 1222

இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை } 47/1911

முன் பதிப்பு : —

ஊர்க் கல்வெட்டு எண் } 12

இடம் : கல்யாண சுந்தரேஸ்வரர் கோயில் - இரண்டாம் திருச்சுற்றுத் தென்புறச் சுவர்.

குறிப்புரை : உலகுகண் விடுத்த பெருமாளான வாணகோவரையர், இக்கோயிலில் திருநந்தாவிளக்கு ஒன்று எரிப்பதற்குத் தினமும் உழக்கு எண்ணெய் கிடைக்கும் வகையில் ஏதோ ஒரு ஏற்பாடு செய்ததையும், இருநூற்றுப் பதினொரு பலம் எடையுள்ள இரண்டு நிலையுடைய தராத்திருகுத்துவிளக்கு ஒன்றை இதற்கெனச் செய்து வழங்கியதையும் அப்பணியினை நிறைவேற்ற இக்கோயில் முப்பது வட்டத்துக் காணியுடைய சிவப் பிராமணர்கள் ஒத்துக் கொண்டதையும் குறிப்பிடுகிறது இக்கல்வெட்டு.

கல்வெட்டு:

1. ஷஷ்ரீ ரீஷ்வனச்சக்கரவத்திகள் ஸ்ரீஇராஜராஜ ஷேவற்கு யாண்டு ஐஞ்சாவது தனு நாயற்றுப் பூர்வ பக்ஷத்து திரையோதெசியும் . . . . . [நித்]தவிநோத வளநாட்டு நல்லூர் நாட்டு [உடையார் திருநல்லூர் உடைய நாய]னார் திருமுன்பு எரிய முடிகொண்ட சோழ வளநாட்டுத் துண்ட நாட்டு . . ,

2. உலகு கண்விடுத்த பெருமாளான வாணகோவரையர் வைத்த திரு நந்தாவிளக்கு ரிக்கு நாள் ரிக்கு எண்ணை உழக்காக வந்த எண்ணைக்கு உபையமாக இக்கோயில் முப்பது[வட்டத்துக்] காணி யுடைய . . . . . காஷ்யஷந் சந்திரசேகரந் திருச்சிற்றம்பலமுடை

யானுமிவந் தம்பிமாரும் காசியபன் அமுது உய்யவந்தானும் காசிபந் [தேவன்மாதனும்]

3. என் தம்பிமாரும் காஶ்யவந் திருச்சிற்றம்பல முடையா(யா)ன் நனைந் தானும் காஶ்யவந் கோலமார்வன் திருச்சிற்றம்பலமுடையானும் காஶ்யவன் சிவபுரமுடையான் பிரமீஸ்ரமுடையானும் வாச்சிய[ன் தில்லை] நாயகன் திருச்சிற்றம்பலமுடையானும் என் தம்பியும் கவுசியன் தேவன் தில்லை நாயகனும் கவுசியன் கோவணவன் தில்லை நாயகனும் [இவ்வனைவோம்]

4. திருநந்தா விளக்கு ஒன்றுக்கு செலு[த்தக்] கடமாவோகவும் இப்படி இவை எங்கள் வற்கத்தா[ரும் எங்கள் பக்கற்] பெற்றுடையாரும் சந்திராதித்தவல் செலுத்தக் கடவோம் . . . . . இவ்வனைவோம் இத்திருநுந்தாவிளக்கெரிய இவரட்டின இரண்டுநிலைத் தராத் திருக்குத்திவிளக்கு எடை உளக லி இருநூற்றுப்பத்துஒன்று [பலம்] இது பன்மா[கேசர ரக்ஷை]

மாவட்டம் : தஞ்சாவூர்

வட்டம் : பாபநாசம்

ஊர் : நல்லூர்

மொழி : தமிழ்

எழுத்து : தமிழும் கிரந்தமும்

அரசு : சோழர்

மன்னன் : மூன்றாம் இராஜராஜன்

ஆட்சி ஆண்டு : 2

வரலாற்று ஆண்டு : கி.பி. 1217

இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை } 50/1911

முன் பதிப்பு : —

ஊர்க் கல்வெட்டு எண் } 13

இடம் : கல்யாணசுந்தரேஸ்வரர் கோயில் - இரண்டாம் திருச்சுற்றுக் கிழக்குப் புறச்சுவர் - வாயிலின் தென்புறம்.

குறிப்புரை : மூன்றரை மா அரைக்காணி முந்திரிகை அளவு நத்த நிலத்தினைப் பாண்டி குலாசனி வளநாட்டுக் கிளியூர் நரிமன்றமுடையான் திருவலஞ்சுழி உடையான் என்பவன் திருநல்லூர் நாயனாருக்கு, ஆதிசண்டேஸ்வரர் பெயரில் 1400 காசுகளுக்கு விலைக்கு விற்றுக் கொடுத்ததை இக்கல்வெட்டுத் தெரிவிக்கிறது. குறிப்பிடப்பட்ட அந்த நிலம், நல்லூரான பஞ்சவன் மாதேவிச் சருப்பேதி மங்கலத்திலிருந்து வேறு பிரிக்கப்பட்ட ராஜராஜன் புங்கனூர்க் கிழவர் ஏனாதியரையர்க்குரிமையாக இருந்து, திருவலஞ்சுழி உடையானின் பெரிய தகப்பனார் நரசிங்கராயரால் விலைக்கு வாங்கப்பட்டுப் பின்னர் தனக்குரிமையாக வந்தது என்ற செய்தியும் தெரிவிக்கப்பட்டுள்ளது. நிலத்தின் எல்லைகளும் குறிப்பிடப்பட்டுள்ளன.

கல்வெட்டு :

1. ஷஷ்ரீ தரிபுவன[1]சக்கர[வத்திகள்] ஸ்ரீராஜராஜ தேவர்க்கு யாண்டு உஷ [கன்னி நாயற்று] அபர வக்ஷத்து ஔதமையும் சனிக்கிழமையும் பெற்ற அசுவதி நாள் நித்த விநோத வளநாட்டு நல்லூர் நாட்டு உடையார் திருநல்லூர் [நாயனார் கோயில்] ஆதிசண்டேசுர தேவர்க்கு பாண்டி குலாசனி[வளநாட்டு] கிளியூர் நரிமன்றமுடையான் திருவலஞ்சுழி உடையான்னே[ன்*] விற்று குடுத்த இறையிலி நத்தமா[வ*]து நல்லூரான பஞ்சவன் மாதேவிச் சருப்பேதி மங்கலத்துப் பிறிந்த ராஜராஜன் புங்கனூர்

2. கிழவர் ஏனாதியரை[யர்]....நீங்கலாகப் பெற்ற நிலமாய் இவர் பக்கல் எங்கள் பெரிய தவப்பனார் நரசிங்கராயர் விலை கொண்டு இவர்..... கொண்டுடையேனாய் எய்ஞ்ஞுதாயிருந்த இவ்வூர்(தி)திருநாராயணவதிக்கு மேற்கு மும்முடி சோழ வாக்காலுக்குத் தெற்கு உசுஉ சதிரத்து விலை[2] நிலத்தூர்வையான கொல்லையும் விளைநிலமும் குளமுமாய்] இருந்த விரிவு ரூசுசூபஅ இந்நில[ம்*]மும்மாவரையே யரைக்காணி முந்திரிகை

3. யும் விற்றுக் கொடுத்துக் [கொள்]வதாக எம்மிலிசைந்த விலைப்பொருள் அன்றாடு நற்காசு சூசா இக்காசு ஆயிரத்து நானூறும் ஆவணக்களரியே காட்டேற்றிக் கைச்செலவறக் கொண்டு விற்று விலைப் பிரமாண இசைவு தீட்டுக் கொடுத்தேன் உடையார் திருநல்லூர் நாயனார் கோயில் ஆதி சண்டேசுரதேவருக்கு நரிமன்றமுடையான் அரையன் திருவலஞ்சுழி உடையானேன் இப்படி சம்மதித்து இந்நில[ம்*] மும்மாவரையே யரைக் காணி முந்திரிகையும் எங்[க]ளுக்கு நீங்கலாகப்பெற்ற

4. படியே விற்றுக் கொடுத்த பிரமாண விலைப்படி காசு ஆயிரத்து நானூறும் ஸ்ரீபண்டாரத்து ஒரு கிழிபடக் கைக்கொண்டு விற்றுக் கொடு[த்]ததுக்கு இவை நரிமன்றமுடையான் அரையன் திருவலஞ்சுழியுடையானெழுத்து இப்படிக்கு இவை நரிமன்றமுடையான் அரையன் பொன்னம்பலக் கூத்தனெழுத்து இப்படிக்கு இவை நரிமன்றமுடையான் அரையன் சிவதவனப் பெருமானான நரசிங்கராயனெழுத்து இப்படி அறிவேன் சேஞலூர் வீரராகூதப் பிர[ம]மாராயனெழுத்து

5. இப்படி அறிவேன் மணலூர் பாண்டவ தூத பட்டனெழுத்து இப்படியறி வேன் [விழுப்பரையன்] விக்கிரமசிங்க வேளார் எழுத்து.....இப்படிக்கு இவை ஊர்கணக்கு உத்தமபிரியன் எழுத்து

---

1. ''திரிபுவன'' எனப்படிக்கவும்
2. ''விளை'' எனப்படிக்கவும்

த. நா. அ. தொல்லியல் துறை **தொடர் எண் : 43/1995**

மாவட்டம் :	தஞ்சாவூர்	ஆட்சி ஆண்டு :	2
வட்டம் :	பாபநாசம்	வரலாற்று ஆண்டு :	கி.பி. 1217
ஊர் :	நல்லூர்	இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை	50/1911
மொழி :	தமிழ்	முன் பதிப்பு :	—
எழுத்து :	தமிழும் கிரந்தமும்	ஊர்க் கல்வெட்டு எண்	14
அரசு :	சோழர்		
மன்னன் :	மூன்றாம் இராஜராஜன்		

இடம் : கல்யாணசுந்தரேஸ்வரர் கோயில் - இரண்டாம் திருச்சுற்றுக் கிழக்குப் புறச்சுவர் - வாயிலின் தென்புறம்.

குறிப்புரை : நித்தவினோத வளநாட்டு நல்லூர் நாட்டு ராஜகேசரிச் சதுர்வேதி மங்கலத்து மகாசபையார், திருநல்லூர் நாயனார்க்கு நந்தாவிளக்கு எரிப்பதற்காக முன்னாளில் தரமின்மை காரணமாக இறையிலியாக இருந்த நிலத்தைத் தற்போது திருநாமத்துக் காணியாகவும் காசு கொள்ளா இறையிலியாகவும் மாற்றிவழங்கியதைத் தெரிவிக்கிறது.

கல்வெட்டு :

1. ஸ்ஸ்ரீ திரிபுவனச்[சக்கர]வத்திகள் ஸ்ரீராஜராஜ தேவர்க்கு யாண்டு உ இரண்டாவது நித்தவினோத வளநாட்டு நல்லூர் நாட்டு ராஜ(ச) கேஸரிச் சருப்பேதிமங்கலத்து மஹாஸஹையோம் இ[ந்*]நாட்டு உடையார் திருநல்லூர் நாயனார்க்கு திருநந்தாவிளக்கு எரிய முன்னானில்[1] விளக்கு . . .

2. நிலம் தரமிலி நீங்கு[நில] இறையிலியாகவும் அனுபவித்து போதுகிற நிலத்துக்கு ஊர்[கணக்கர்]எழுதின கைஓலைப்படி . . . . . ந்தரயன் நல்லூர் மாதிருவதிக்கு கிழக்கு கோதண்டராமன் [வாய்க்கா]லுக்கு வடக்கு .... ஊர்கீழ் இறையிலி நூகூம் இங்கே தரமிலியில் நிலம்

கொண்டு இவர்கள் [பக்கல்] இறையிலியாக விட்ட ரூ ? . . . . கூபகீவ நிலம் அறுமாவரையே அரைக்காணி கீழ்க்காலும் இந் நாயனார்க்கு திருநாமத்துக்காணியும் காசுகொள்ளா இறையிலி யானமைக்கு இவை உடையார்[க்கு

3. இவ்வூருடையான் கருணாகர பிரியன் எழுத்து இப்படிக்கு இவை திருவையாறுடையான் அழகிய மணவாளப்பிரியன் எழுத்து இப்படிக்கு இவை பண்டித பிரியன் எழுத்து இப்படிக்கு இவை க . . . ருடை [யான்] ஆயிரத்திருநூற்றுவப்பிரியன் எழுத்து உ

---

1. 'முன்னாளில்' என்று படிக்கவும்

மாவட்டம் : தஞ்சாவூர்
வட்டம் : பாபநாசம்
ஊர் : நல்லூர்
மொழி : தமிழ்
எழுத்து : தமிழும் கிரந்தமும்
அரசு : சோழர்
மன்னன் : மூன்றாம் இராஜராஜன்

ஆட்சி ஆண்டு : 3
வரலாற்று ஆண்டு : கி.பி. 1218
இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை } 51/1911
முன் பதிப்பு : —
ஊர்க் கல்வெட்டு என் } 15

இடம் : கல்யாணசுந்தரேஸ்வரர் கோயில் - இரண்டாவது திருச்சுற்றுக் கிழக்குப்புறச் சுவர் - வாயிலின் தென்புறம்.

குறிப்புரை : நல்லூரான பஞ்சவன்மகாதேவிச் சதுர்வேதி மங்கலத்து மகாசபையார் இவ்வூர் இறைவர்க்குச் செங்கழுநீர் மலர்மாலை சாத்துவதற்காக, அரையர் குளம் என்ற பெயருடைய குளத்தினைத் திருநாமத்துக் காணியாக வழங்கியதைத் தெரிவிக்கிறது.

கல்வெட்டு :

1. ஷஷ்ரீ திரிபுவனச் சக்கரவத்திகள் ஸ்ரீராசராச தேவர்க்கு யாண்டு ஈ வது மேஷ நாயற்று அபர பக்(கி)ஷத்து தெசமியும் சனிக்கிழமையும் பெற்ற [சதையத்து நாள்] நித்தவினோத வளநாட்டு நல்லூரான பஞ்சவன்மகாதேவிச் சருப்பேதிமங்கலத்துப் பெருங்குறி மஹாஸஹை யோம் எழுத்து உடையார் திருநல்லூர் நாயனார்க்குத் திருச்செங்கழுநீர் இட்டுச் சாத்தி அருளக் குடுத்த நம்மூர் ம[ஹ]ாதேவ வதிக்கு [தே]மற்கு மும்முடி சோழ வாய்க்காலுக்கு தெற்கு உசூ உ சதிரத்து அரையர்குள மென்னும் [பே*]ருடைய தரமிலி நீங்

2. கல் ஒழுதின்[1]படி விரிவு ரூவஷூகீவழகீவரும் ஈ சதிரத்து ரூஷூகீவ . . . ச குளரூவகலீகீ செ கீ வகும் இன்னில[ம்*] ஒன்பது அரைக்காணி[கீழ்] . , . . . மாவின் தீழ்[2] இருமாவரையும் திருச்செங்கழுநீர் இட்டு சந்திராதித்தவரை . . .. .. குளத்தால் ஒரு நீர்ச் சாவிக்கு இறைக்கலாம்

நிலம் [நி]ற்க்கவும் இக்கு[ளம்] திருநாமத்திலே குட்டிக்[3] கொள்ளக் கடவதாதவும்[4] [சொன்]னோம் இப்படி செய்கையால் ஊர்கணக்கு [ப]நந் தாளுடையான் உத்தமபிரியன் எழுத்து இப்படிக்கு இவை அவினாசி ப[ட்]டன் எழுத்து இப்படிக்கு இவை [யேகா] . . ன் பெண்ணமரு[ம்]

3. மேனி உடையான் பட்டனே[ன்*] எழுத்து இப்படிக்கு இவை பாரத் துவாசி பெரியநம்பி பட்டன் எழுத்து இது பெரும்பற்றப்புலியூர் மருந்தாழ்வ[ான்] நல்லூர்இருந்தான் சயிஜ்ஜயா[ன*]மைக்கு இவை உத்த[ம] . . . . இப்படிக்கு இவை காயப . . . பட்டன் [எ*]ழுத்து இப்படிக்கு இவை மணலூர் பாண்[டவதூத] . . . . த்து இப்படி அறிவேன் காப்பிய[ன்] திருநீற்றுச் சோழநம்பி . . . இப்படிக்கு இ[வை] பாரத்துவாசி மஞ்சாழ்வி நல்லூர்இருந்தபிரான் பட்டனெழுத்து இப்படிக்கு இவை பெரும்பற்றப்புலியூர் ஸ்ரீகாழிப்பிள்ளை எழுத்து இப்படிக்கு இவை கெழுதமன் திருமழபாடி பட்டனெழுத்து இப்படி அறிவேன் மணலூர் திருவம்ப

4. ல நம்பியேன் இப்படிக்கு இவை சேஞலூர் வீரராக்கத பிர[ம*]மாராய னெழுத்து இப்படிக்கு இவை காப்பியன் திருச்சிற்றம்பலநம்பி எழுத்து இது பாரத்துவாசி இளமைநாயக பட்டனெழுத்து இ[ப்படி அறிவே]ன் வாச்சியன் நச்சினார்க்கினியன் பட்டனெழுத்து இ[ப்படி]இவை பாரத்து வாசி . . . . [ெ]பரிய நம்பி . . . . [பாரத்து]வாசி பஞ்சவன் பிர[ம] மாராயனெழுத்து இப்படி அறிவேன் பாரத்துவாசி [திரு]வண்காடு பட்ட னேன் [இப்படி அறிவேன்] பொன்மே[ய்*]ந்த சோழ பிர[ம*]மா[ராய னெழுத்து இப்படி அறிவேன் பொன்னம்பல நம்பி எழுத்து இப்படிக்கு இவை மணலூர் குலோத்துங்கசோழ பிர[ம*]மாராயன் எழுத்து

---

1. "ஒழுகின்" எனப் படிக்கவும்
2. "கீழ்" எனப் படிக்கவும்
3. "கூட்டி" எனப் படிக்கவும்
4. "கடவதாகவும்" எனப் படிக்கவும்

த. நா. அ. தொல்லியல் துறை **தொடர் எண் : 45 / 1995**

மாவட்டம் : தஞ்சாவூர்
வட்டம் : பாபநாசம்
ஊர் : நல்லூர்
மொழி : தமிழ்
எழுத்து : தமிழும் கிரந்தமும்
அரசு : சோழர்
மன்னன் : மூன்றாம் இராஜராஜன்

ஆட்சி ஆண்டு : 29
வரலாற்று ஆண்டு : கி.பி. 1244
இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை } 59/1911
முன்பதிப்பு : —
ஊர்க் கல்வெட்டு எண் } 16

இடம் : கல்யாணசுந்தரேஸ்வரர் கோயில் - இரண்டாம் திருச்சுற்றுக் கிழக்குப் புறச்சுவர்-வாயிலின் தென்புறம்.

குறிப்புரை : நல்லூர் இறைவர்க்குத் மாசித் திருநாளில் தீர்த்தமாடியதன் பின்னர் திருச்செங்கழுநீர்மாலை சாத்தியருள்வதற்காகக் குலோத்துங்கசோழப் பிரமமாராயர் புதுக்குளத்தினை வழங்கியதைக் குறிக்கிறது. அக்குளமும், ஒழுக்கை நிலமும், மணலூர் விக்கிரமசோழப் பிரமமாராயர்க்கு ஊர்வாய் இறையிலியாக முன்னர் வழங்கப்பட்டிருந்ததாகத் தெரிகிறது.

கல்வெட்டு :

1. ஷஷ்ரீ திரிபுவ[ந*]ச் சக்கரவத்திகள் ஸ்ரீ ராச[1] தேவற்கு யாண்டு உலகு இஷப நாயற்று . . . பயும் சனிக்கிழ[மை]யும் பெற்ற ரோசணி[2] நாள் நித்த வினோத வளநாட்டு நல்லூர் நாட்டு நல்லூர் [பஞ்சவன் மாதேவி] சருப்பேதி மங்கலத்து இருமுடிசோழவதிக்கு பஞ்சவன் மாதேவி வா[ய்க்கா]லுக்கு தெற்கு . . . . த்து புதுக் குள[ெ*]மன்று [பேர்] கூவப்[பட்*]ட [ெ*]முகின்படி தரமிலி நீங்கல் ஞ்ல . . . நாலு மாவும் முன்னாளிலே மணலூர் விக்கி[ர*]ம சோழ பிர[ம]*மாராயர்க்கு ஊர்வா[ய்*] இறையிலியாக குடுத்து [இவருதாய்ப்] பொருகற்குளம் இருபத்தெ . . . . .

2. உடையார் திருநல்லூர் நாயனா[ர்] திருமாசித்தி[ரு*]நாள் தீர்த்தத் திலே ஆற்றிலே திருத்தீர்த்த . . . . . மணலூர் குலோத்துங்க சோழப்

பிரமமாராயர் உடையாருக்கு சாத்தி அருள திரு செங்கழுநீர் . . . . இறையிலி . . . . தமையும் இக்குளம் ஒழுக்கை படியால் . . . நிலம் இந்நாயனார் . . . . . செய்து குடுத்தமையும் அறிவோம் இப்படி இவர்கள் அருளிச் செய்ய பணியால் ஊர் கணக்கு பனந்[த]*ாளுடை யான் உத்தமபிரிய னெழுத்து இப்படிக்கு இவை பாரத்துவாசி அவினாசி யானெழுத்து இது பாரத்துவாசி [பாண்டவதூத] சிவபுரமுடை

3. [யா]ன் சயிஞ்ஞையானமைக்கு இவை வலயூர் ஆளுடையான் பட்ட னே[ன்*] எழுத்து இ[ப்படி அறி]வேன் . . . . பியேன் இப்படி அறிவேன் பாரத்துவாசி மாதேவன் பெரிய நம்பி பட்டனேன் இப்படி அறிவேன் திருப்பேர் நஞ்சணிகண்ட நம்பி[யேன் எழு]த்து இப்படி அறிவேன் . . . . . வினைநோய் தீர்த்தா[ன்*] பட்டனெ[ழுத்து இப்படி] அறிவேன் காப்பியன் நல்[லூரா]ன் பட்டனே[ன்*] எழுத்து இப்படி அறிவேன் . . . . எழுத்து இப்படி அறிவேன் கெழுமன்[3] திருமழபாடி பட்டன் எழுத்து இப்படி அறிவேன் பாரத்துவாசி திருவெண்காடு பட்டனெழுத்து இப்படி அறிவேன் சேஞலூர் வீரராக்க

4. த வினம மாராயனேன் இது பாரத்துவாசி இளமைநாயக பட்டனும் ஆத்திரை[யன் திரு]ச்சிற்றம்பலமுடையான் . . . . . யான்[ன்*] னெழுத்து இவை கெழுதமன் திருச்சிற்றம்பலமுடையான் ஆழ்வான் பட்டனெழுத்து இப்படிக்கு இவை மணலூர் [குலோத்]துங்க சோழ பிர[ம*[மாராய]ன் எழுத்து இவை காப்பியன் ஆதித்தபட்டனெழுத்து இப்படிக்கு இவை . . . . . திருச்சி[ற்*]றம்[ப]லநம்பிபட்ட னெழுத்து இப்படிக்கு இவை மணலூர் பாண்டவ தூத பட்டனெழு[த்*]து இது பெரும்பற்றபுலியூர் மரு[ந்தா]ழ்வான் நல்லூரிருந்தான்

5. . . . . இவை பனந்தாளுடைய[ான் எ]ழுத்து.

---

1. ''ராஜராஜ'' என்பது சுருக்கி எழுதப்பட்டுள்ளது.
2. ''ரோகினி'' எனப் படிக்கவும்.
3. ''கௌதமன்'' என்பது கெவுதமன், கெழுதவன், கெழுதமன், கெழுதமன், கெழுமன் எனப்பலவாறு இவ்வூர்க் கல்வெட்டுகளில் பொறிக்கப்பட்டிருக்கிறது.

த. நா. அ. தொல்லியல் துறை **தொடர் எண் : 46 / 1995**

மாவட்டம் :	தஞ்சாவூர்	ஆட்சி ஆண்டு :	29
வட்டம் :	பாபநாசம்	வரலாற்று ஆண்டு :	கி.பி. 1244
ஊர் :	நல்லூர்	இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை	53/1911
மொழி :	தமிழ்		
எழுத்து :	தமிழும் கிரந்தமும்	முன் பதிப்பு :	—
அரசு :	சோழர்	ஊர்க் கல்வெட்டு எண்	17
அரசன் :	மூன்றாம் இராஜராஜன்		

இடம் : கல்யாணசுந்தரேஸ்வரர் கோயில் - இரண்டாம் திருச்சுற்று - வாயிலின் தென்புறம் - கிழக்குப்புறச் சுவர்.

குறிப்புரை : திருநல்லூர் நாயனார்க்குத் திருப்பாவாடை, அமுது, சாத்துப்படி, திருமேற்பூச்சு, வியஞ்சனங்கள், விளக்கெண்ணெய் ஆகியவற்றுக்கான செலவினங்களுக்காகக் கோயிலுக்கு நிலம் வழங்கி அதன்மூலம் சந்திராதித்தவரை ஸ்ரீபண்டாரத்தில் நெல் அளக்கச் செய்த ஏற்பாட்டினைத் தெரிவிக்கிறது.

கல்வெட்டு :

1. ஷஷ்ஷ்ரீ [திரிபுவன]ச்சக்கரவத்திகள் ஸ்ரீ இராஜஇராஜ தேவற்(ற்)க்கு யாண்டு இருபத்தொந்பதாவது . . . . நாயற்று பூவ-ஃ பக்ஷத்து பிரதமையும் [புதன்]*கிழமையும் பெற்ற . . . . . நல்லூர் நாட்டு திரு [நல்லூர்] . . . . . உடையார் திருநல்லூர் நாயநார் . . . . . .

2. . . . . திருப்பாவ[ா]*டை அமு(த்)து செய்தருளவும் சாத்துப்படிக்குத் திருமே(ா)ற் பூச்சுக்கும் படி விஞ்சன(ம்)ங்கள் உள்ளிட்டதும் விளக் கெண்ணைக்கும் உடலாக முன்பிலாண்டுகளும் நம்மூரில் .. .. .. மவை யிற்றுக்கு .. .. . கொண்டு விநியோகி .. .. . வாக செலவழிந்து . . . ன முந்திரி[கை] . . . படியால் வந்தவையிற்றுக்கு உடலாக[வும்] மடக்கு தேவதானங்கள் மடக்குக்கள் .. .. .

3. நெல்லு அளக்கவும் இம்மடிக்கு [அரைக்காணி] முந்திரிகைக்கும் நெல்லு சந்திராதித்தவரையும் சீபண்டாரத்திலே இறுக்கக் கடவதாகச் சொனனோம் இப்படி செய்தமைக்கு [பணியால்] ஊரகணைக்கு . . த்தமுடையான் இப்படிக்கு இவை . . [வீழியுடை] ஆதித்தபட்டனே[ன்*] எழுத்து இப்படிக்கு . . . . . புலியூர் மருந்[தாழ்வான் நல்]லூர் இருந்த பட்டன் சயிஞ்ஞையானமைக்கு உத்தமபிரியனே[ன்*] எழுத்து இப்படிக்கு இவை பாரத்து[வாசி மாதேவன் பெரிய]நம்பி பட்டனெ [ழு*]த்து இப்படிக்கு . . . . . இப்படிக்கு இவை . . .

4. மணலூர் பாண்டவதூத பட்டன் எழுத்து இப்படிக்கு இவை காப்பியன் பெண்ணமருந்திருமேனி உடையான் பட்டனெழுத்து இப்படிக்கு இவை வாச்சியன் பொன்னம்பல நம்பி எழுத்து இப்படிக்கு இவை கெழுதமன் திருவேகம்ப . . . . யாம பட்ட[னழுத்து] இப்படிக்கு இவை வாச்சியன் நச்சினார்க்கினியான் பட்ட[ன்*]னழுத்து இப்[படிக்கு] . . . பாரத்துவாசி [காஞ்]சி பட்டனெழுத்து இப்படிக்கு இவை சேஞலூர் வீர[ராக்]கத பிரமமாராயனெழுத்து . . . [பாரத்துவாசி இளமைநாயகபட்டன் சயிஞ்ஞையானமைக்கு இது [திருச்சிற்றம்பல]முடையான் பட்ட [னெழுத்து]

5. . . . நல்லூர்இருந்த பட்டன்னெழுத்து இப்படிக்கு இவை காப்பியன் திருச்சிற்றம்பல நம்பி எழுத்து இப்படிக்கு இவை திருப்பேர் நஞ்சணி கண்ட நம்பி எழுத்து இப்படிக்கு இவை திருப்பேர் நஞ்சணி கண்டன் தேவகாந்த பட்டனெழுத்து இப்படி[க்கு] நல்லூர் இருந்த பிரான் பட்டனெழுத்து இப்படிக்கு இவை பாரத்துவாசி மாதேவ . . . . . ட்டனெழுத்து இது பாரத்துவாசி திருவேகம்பமுடையான் கண்ணன் சயினைஞயானமைக்கு . . . . முடையான் எழுத்து இது நாகமங்கல . . . . . சயிச்சனைஞயூனமை[1] . . . .

---

1. ''சயிஞ்ஜையானமை'' என்று படிக்கவும்.

சிதாடர் எண் : 47 / 1995

மாவட்டம் : தஞ்சாவூர்

வட்டம் : பாபநாசம்

ஊர் : நல்லூர்

மொழி : தமிழ்

எழுத்து : தமிழும் கிரந்தமும்

அரசு : சோழர்

மன்னன் : இரண்டாம் இராஜாதிராஜன்

ஆட்சி ஆண்டு : 13

வரலாற்று ஆண்டு : கி.பி. 1179

இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை } 54/1911

முன் பதிப்பு : —

ஊர்க் கல்வெட்டு எண் } 18

இடம் : கல்யாணசுந்தரேஸ்வரர் கோயில் - இரண்டாம் திருச்சுற்றுக் கிழக்குச் சுவர் - வாயிலின் தென்புறம்.

குறிப்புரை : திருப்பெருமணமுடையார் என்ற இறைவன் சன்னதியில் நந்தா விளக்கு எரிப்பதற்கு ஜயங்கொண்ட சோழமண்டலத்து மேல்மலைப் மழையனூர் நாட்டுப் பழையனூருடையான் வேதவனமுடையான் என்பவன் 200 காசுகள் வழங்கியதையும், திருநல்லூர் நாயனார் கோயிலின் முப்பது வட்டத்துக் காணி உடைய சிவப்பிராமணர்கள் இக்காசினை ஏற்று விளக்கெரிக்கும் பொறுப்பினை ஏற்றதையும் குறிக்கிறது. இத்திருப்பெருமணமுடையார் சன்னதி, நல்லூருடையார் கோயிலுக்குள்ளேயே இருந்தது போலும்.

கல்வெட்டு :

1. ஷஷ்ரீ திரு[ை]வனச்சக்கரவத்திகள் மதுரையும் ஈழமுங் கொண்டருளின [ஸ்ரீரா]ஜாயி ராஜதேவர்க்கு யாண்டு ஙூவது கற்கடக நாயற்றுப் பூர்வ பக்ஷத்து ஒசமியுந் திங்கள் கிழமையும் பெற்ற திருவோணத்தின் நாள் நித்தவினோத வளநாட்டு நல்லூர் நா[ட்டு] . . . . திருநல்லூர் நாயனார் கோயில் முப்பது வட்டத்துக் காணி உடைய சிவப் பிராமணரில் காசி[யப] . . . . . முடையானும் என் தம்பிமாருங் காசியபன் அமுது உய்யவந்தானும் காசியபந் . . . .

2. பந் சேந்தந்தேவனும் என்தம்பிமாரும் கவுசிகன் சிவ . . ரமுடையான் ப . . . வரமுடையானும் வா[ச்]சியன் தில்லை நாயகன் நாயகனும்

தில்லைநாயகன் திருச்சிற்றம்பலமுடையானும் என் தம்பியும் . . . . . தேவன் தில்லை நாயகன் காசியப[னும்] . . . . . சிற்றம்பலமுடையாந் [நி]னைந்தாநும் இவ்வனைவோம் இந்நாயனார்க்கு ஐயங்கொண்ட சோழ மண்டலத்து மேல்மலைப் பழைய[னூர்] நாட்டுப் பழையனூருடை யான் வேதவனமுடையான் திருப்பெருமணமுடையார்க்கெரி(ய்)ய வை[த்]

3. த திருநுந்தாவிளக்கு உ இவ்விளக்கு இரண்டுஞ் செலுத்தக் கடவோமாக நாங்கள் கைக்கொண்ட காசு உா இக்காசு இருநூறுங் கைக்கொண்டு இந்திருநுந்தாவிளக்கு இரண்டும் செலுத்தக்கடவோ மாகவும் எங்கள் பக்கல் விலை ஒற்றி கொண்டு . . . . . பெற்றாரும் [சந்]திராதித்தவற் செலுத்தக் கடவோமாகவும் . . . . உபையம் கொண்டோம் முப்பது வட்டத்துக் காணி உடைய சிவப்பிராம்மணர் இவ்வனைவோ[ம்*] இது பன்ஸாஹஸ்ர ரக்ஷை :--

மாவட்டம் : தஞ்சாவூர்
வட்டம் : பாபநாசம்
ஊர் : நல்லூர்
மொழி : தமிழ்
எழுத்து : தமிழும் கிரந்தமும்
அரசு : சோழர்
அரசன் : முன்றாம் குலோத்துங்கன்

ஆட்சி ஆண்டு: 3
வரலாற்று ஆண்டு : கி.பி. 1181
இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை } 55/1911
முன் பதிப்பு : —
ஊர்க் கல்வெட்டு எண் } 19

இடம் : கல்யாணசுந்தரேஸ்வரர் கோயில் - இரண்டாம் திருச்சுற்றுக் கிழக்குச்சுவர்-வாயிலின் தென்புறம்.

குறிப்புரை : திருநல்லூர் ஆண்டார் கோயில் தேவர்கன்மிக் கணக்காகிய புங்கனூர் கிழவன் ஏனாதியரையன் என்பவன், தனக்குரிய காணி நிலத்தின் விளைச்சலைக் கோயிலுக்கு வழங்கியதையும், கோயில் சிவப்பிராமணர்களிடமிருந்து இராஜராஜப் பெருவிலையால் விலைக்கு வாங்கிய காணி நிலத்தையும் கோயிலுக்கே வழங்கியதைக் குறிக்கிறது இக்கல்வெட்டு. முதற்கொடை இரண்டாம் இராஜேந்திரன் காலத்து வழங்கப்பட்டதாகத் தெரிகிறது.

கல்வெட்டு :

1. [ஷஷ்ரீ திரிபுவ]ன சக்கரவத்திகள் ஸ்ரீகுலோத்துங்க சோழ தேவற்கு யாண்டு ஈ ஆ[வ*]து மகர நாயற்று பூவ-ஃ பக்ஷத்து ஏகாஃஸியும் திங்கள் கிழமையும் பெற்ற ரோசணினாள் முன்னா[ளி]வர் ரா[ச*]ஜந்திர சோழ தேவர் ..... [நித்தவினோத வள]நாட்டு நல்லூர் நாட்டு உடையார் திருநல்லூர் ஆண்டார் கோயி[ல்] சீமாயே[சுரகண்காணி] செய்வார்களுக்கும் தேவர்கந்மி கோயிற் கணக்காகிய புங்கநூர் [கி]ழவந் ஏனாதியரையந் விட்டுக்குடுத்த பரிசாவது இத்தேவர்

2. இராரா[1]ப் பெருவிலை ..... நிலம் தலைத்தரப் பேறுக்கு நிலம் மூந்றரையே மூந்றுமா ஆரைக்காணி[2] முந்திரிகைக்கும் நல்லூர் கார்

மறுவுக்கு ஊர் ஒட்டுப்படியால் வந்த நெல்லு இவர்க்கு கடவேநாக .....தான ரூ மடக்கு . . . வேந் இன்றியே இக்கோயிலிலே இன்னிலத் தாலுள்ள நெல்லு எடுத்தளக்கக் கடவேனாகவும் நாடுகளுக்கு [நி] னைப்பு இட்ட ஆண்டுகள் இவை இலேசு பெற[க்க]டவேனல்லா தேனாகவும் பெரு[வெள்ளம்] பெருஞ்சாவி[யென்று] யாண்டு...

3. தானத்தாரோடு மிசையத்தீட்டு நீக்கி இறுக்கக் கடவேனாகவும் இக்கோயிலில் சிவப்ராஹ்மணர் காணியாய் 'நான் இராஜராஜப் பெரு விலை கொண்ட காணியும் இத்தேவற்கே விடக்கடவேனாகவும் இப்படி சம்மதித்து திருவாணைப்படி ..... படித்தீட்டுக் குடுத்தேன் ஸ்ரீமாஹே ppவரர்க் கண்காணி செய்வார்களுக்குந் தேவகன்மி கோயிற் கணக்கு [ஆகு]புங்கனூர் கிழவன் ஏனாதியகையனேன்[3] இவை என் எழுத்து இப்படிக்குச் செம்பியன் [விழுப்]பரையன் எழுத்து இப்படிக்குக் குலதீப மூவேந்த வேளான் .....

---

1. "இராசராச" என்பதன் சுருக்கம்.
2. "அரைக்காணி" எனப் படிக்கவும்.
3. "ஏனாதியரையனேன்" எனப் படிக்கவும்.

மாவட்டம் : தஞ்சாவூர்
வட்டம் : பாபநாசம்
ஊர் : நல்லூர்
மொழி : தமிழ்
எழுத்து : தமிழும் கிரந்தமும்
அரசு : சோழர்
மன்னன் : இரண்டாம் இராஜாதிராஜன்

ஆட்சி ஆண்டு : 11
வரலாற்று ஆண்டு : கி.பி. 1177
இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை } 56/1911
முன் பதிப்பு : --
ஊர்க் கல்வெட்டு எண் } 20

இடம் : கல்யாணசுந்தரேஸ்வரர் கோயில் - இரண்டாம் திருச்சுற்றுக் கிழக்குச் சுவர் - வாயிலின் தென்புறம்.

குறிப்புரை : திருநல்லூர் நாயனார்க்கும் நாச்சியார்க்கும் இரவு சந்தி, அர்த்தசாமம், ஆகிய வற்றுக்குப் போனகம் (அமுது) செய்யும் திருக்கொள்கை (ஸ்ரீபலி) நாச்சியார்க்குச் சிறுகாலைச்சந்தி, உச்சிச்சந்தி, இரவுசந்தி ஆகியவற்றுக்குத் திருமந்திரப் போனகம் செய்யவும் விக்ரமசோழ வளநாட்டு விறைக் கூற்றத்து கூட . . . யான் சேந்தபிரான் நிலம் வழங்கியதைக் குறிப்பிடுகிறது.

கல்வெட்டு :

1. [ஷஷ்ரீ] திரு⁻வநச்சூவர்[த்]திகள் ஸ்ரீராஜாதிராஜதேவற்கு யாண்டு ஐக ஆவது மீனநாயற்று பூ[ர்]வபக்ஷத்து ஸதுர்தசியும் வியாழக் கிழமையும் பெற்ற சித்திரைநாள் நித்தவிநோத வளநாட்டு நல்லூர் நா[ட்டு உடையார்] திருநல்லூர்நாயநாற்கு விக்ரம[சோழ வளநா]ட்டு விறைக்கூற்றத்து கூட . . . . யான் சேந்தபிராந் கேஸவனேன் இக்கோயிலில்

2. . . [நா]யநாற்கும் பெரிய நாச்சியாற்கும் இரவைச் சந்திக்கு அமுது செய்தருள போநகப் பழஅரிசி அறுநாழியும் திருவத்தசாமத்துக்கு போநக பழஅரிசி அறுநாழியும் திருக்கொள்கை நாச்சியா[ர்*]க்கு

சிறுகாலைச் சதிக்கும் உச்சி சதிக்கும் இர[வை சந்திக்கும்| திரு மந்திர போநகத்துக்கு . . . . நாழியும் பருப்பு நாழியும் . . . . . வற்றுக்கு போநகப் பழ . . . . ரு நாழியும்

3. . . . முது கறியமுது உள்ளிட்ட விஞ்சனங்களும் சந்திர ஆதித்தர்வரை செல்லக் கடவதாக இறையிலி செய்து விட்ட நிலமாவது இத்திரு நல்லூரான பஞ்சவந்மாதேவிச் சருப்பேதிமங்கலத்து மஹாதேவ வதிக்கு மேற்கு மும்முடிசோழ வாய்க்காலுக்கு தெற்கு இரண்டாங் கண்ணாற்று முதற்சதிரத்து நிலம் மும்மாவரையும் இதந் [மே]ற்க்கு நிலம் அரைக்காணி [முந்திரிகைக் கீழரையும்] இவ்வாய்க்கா

4. . . . . முதற் கண்ணாற்று இரண்டாஞ் சதிரத்து . . . . . . ரண்டாங் கண்ணாற்று முதற்சதிரத்து . . நிலம் அரைமாவும் ஆக நி[லம்] . . . காணியும் . . . சந்திர ஆதித்தர் வரை செல்லக்க[டவதாக] இறையிலி செய்து . . . . . பந்ாஹேஶ்வர ரக்ஷை.

த நா. அ. தொல்லியல் துறை **தொடர் எண் : 50/1995**

மாவட்டம் :	தஞ்சாவூர்	ஆட்சி ஆண்டு :	26
வட்டம் :	பாபநாசம்	வரலாற்று ஆண்டு :	கி.பி. 1242
ஊர் :	நல்லூர்	இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை	62/1911
மொழி :	தமிழ்		
எழுத்து :	தமிழும் கிரந்தமும்	முன் பதிப்பு :	—
அரசு :	சோழர்	ஊர்க் கல்வெட்டு எண்	21
அரசன் :	மூன்றாம் இராஜராஜன்		

இடம் : கல்யாணசுந்தரேஸ்வரர் கோயில் - இரண்டாம் கோபுரம் - வாயிலின் வடபுறச்சுவர்

குறிப்புரை : முன்னரே ஊரவர்கள் இறையிலியாகக் கொடுத்த நிலம் காணி நாலுமா அந்தராயம், பாட்டம் உட்பட இறையிலியாக்கப்பட்டு, நெற்றிக்கண்ணுடையார்கள் எனும் பெயரால் திருநல்லூர் நாயனார்க்கு மாசித்திருநாளில் மாகேஸ்வரர்களை அமுது செய்வதற்கு வழங்கப்பட்டதைத் தெரிவிக்கிறது.

கல்வெட்டு:

1. ஹர ஷஷ்ஷ்ரீ திரிபுவனச்சக்
2. கரவத்திகள் ஸ்ரீராஜராஜ தே
3. வர்க்கு யாண்டு இருபத்து ஆறா
4. வது நித்த விநோத வளநாட்டு
5. நல்லூர் நாட்டு நல்லூரான
6. பஞ்சவன் மாதேவி சதுவே-
7. தி மங்கலத்து ஊரவர் மு[ன்]*னாள்
8. உடையார் திருநல்லூர் நாய
9. (ன்)னார் திருமாசிமகத் திருநாளிலே
10. ல ஸ்ரீமாஹேஸ்வரர் அமுது செய்

11. தருள காணியும் இறையிலியாக
12. இட்ட ஒழுகின்படி இவூர் மஹாதே[வ]
13. வதிக்கு கிழக்கு பஞ்ச(ச)வன் மாதே
14. வி வாய்க்காலுக்கு தெற்க்கு ககூஉ
15. சதிரத்து பொத்தகப்படி ரூ
16. சபூ இதில் ரூகூரூ2கீ ஈ சூ
17. . . . உ ஈஎதகீ ஏதபசூ ஆக
18. ரூசூயு னால் விரிவு ரூகூஸ்ரூ
19. நாலு மாவும் அந்தராயம் பா
20. ட்டம் உள்பட நெற்றி கண்ணு
21. டையார்கள் என்னும் திருநாம[த்]
22. தால் காணியும் இறையிலிய[ா]
23. க திருமாசித் திருநாளிலே ஸ்ரீமா
24. ஹேவ்ரார் அழுது செய்தரு[ள ச]
25. ந்திராதித்த வரை இறையி[லி யா]
26. க இட்டமைக்கு இவை . . . [க]
27. ணக்கு பெரும்பன்றூர்
28. உடையான் எழுத்து இவை
29. கணக்கு மாதானமங்[கல மு]
30. டையான் நெற்றிக்க[ண்] . . .
31. எழுத்து இவை ஊர்கணக்கு பதித்தா
32. ருடையான் உத்தமபிரியன் எழுத்து

த. நா. அ. தொல்லியல் துறை **தொடர் எண் : 51 / 1995**

மாவட்டம் : தஞ்சாவூர்

வட்டம் : பாபநாசம்

